# வெண்பூ மனம்

மேலாண்மை பொன்னுச்சாமி




கங்கை புத்தக நிலையம்

# வெண்பூ மனம்

மேலாண்மை. பொன்னுச்சாமி

கங்கை புத்தகநிலையம்

13, தீனதயாளு தெரு,
தியாகராய நகர், சென்னை– 600 017

முதற் பதிப்பு : டிசம்பர், 2002

**விலை: 40–00**

| | |
|---|---|
| Title | **VENPOO MANAM** |
| Author | **Melanmai. Ponnuchamy** |
| Subject | Short Stories |
| Language | Tamil |
| Edition | First Edition, December.- 2002 |
| Pages | 180 |
| Publication | **GANGAI PUTHAKA NILAYAM**<br>13, Deenadayalu Street,<br>Thyagaraya Nagar,<br>Chennai - 600 017. |
| Price | Rs. **40-00** |

ஒளி அச்சு : நேரு அச்சகம், இராயப்பேட்டை, சென்னை-14

Printed At : Malar Printers 044-8224803

# சமர்ப்பணம்

மரங்கள் அழிவதனால்
குறைந்து வருகிற
மழை, பசுமை,
சுத்தக் காற்று
இவற்றுடன்
மறைந்து வருகிற
மயில்களுக்கும்...

# நானும் விகடனும்

## மேலாண்மை. பொன்னுச்சாமி

## (10–3–2002 ஆனந்தவிகடனில் கட்டுரை)

**மே**லாண்மறைநாடு. விருதுநகர் மாவட்டத்து தென்விளிம்புக் கிராமம். பெயரில் 'நாடு' இருந்தாலும், நாடு நகரங்களோடு சட்டென்று தொடர்பு கொண்டுவிட முடியாது. இண்டுஇடுக்கில் சிக்கிக்கொண்ட குக்கிராமம். இன்னும் தொலைபேசி வசதி, கிளை நூலகம்கூட இல்லாத ஊர் என்றால்... பார்த்துக்கொள்ளுங்களேன்.

அம்மா, அப்பா இல்லாமல் நாதியற்று வளர்ந்தவன் நான். வறுமையைப் பகிர்ந்துகொள்ள தம்பி கரிகாலன், ஆச்சி ஐமுத்தம் மாள் மட்டுமே... கல்வி கற்க முடியாமற்போன காயம், மனசைத் தழும்பாக்கி இருந்தது; கண்டதையெல்லாம் படிக்கிற வெறி வாசகனாக்கியிருந்தது. ஆயினும் ஆனந்தவிகடன் வாசிக்கிற அளவுக்கு அப்போது நான் வளரவில்லை. விகடனின் தீவிர வாசக னல்ல என்பதே நேர்மையான நிஜம்.

திருவேங்கடம் கிளை நூலகத்தில் அவ்வப்போது விகடன் தட்டுப்படும். லேசான புரட்டு... பருவட்டான துணுக்கு மேய்ச்சல். இப்படி இருந்த என்னை, விகடனில் வெளிவந்த சேவற்கொடி யோனின் தொடர்கதை வசீகரித்தது. ஈர்ப்பான மொழிநடை!

ஜூனியர் விகடன் வந்தபோது, அதன் தீவிர வாசகனானேன். கழுகு என்னைக் கவர்ந்தது. சமூகத்தில் புதையுண்டு போக இருந்த எத்தனையோ சமூகக் கொடுமை நிகழ்வுகளை ஜூ.வி. ஒரு போராளிக்குரிய சமூகப் பொறுப்போடு உலகத்துப் பார்வையில் முன்வைத்தது. பெண் சிசுக்கொலை என்கிற சமூகப் பயங்கரத்தை ஜூ.வி.தான் முதன்முதலாக எழுதி, உலகையே அதிர வைத்தது.

நல்ல முற்போக்குச் சிந்தனை கொண்ட ஆற்றல்மிக்க எழுத்தாளர் வேல. ராமமூர்த்தி. திறக்காமலிருந்த அவர் பேனாவைத் திறக்கச் செய்ய ஏகப்பட்ட முயற்சி செய்தேன், முடியவில்லை. 'கூட்டாஞ்சோறு' விருந்து படைக்க வைத்துவிட்டது ஜூ.வி.! அதன் வெற்றியில் தமிழிலக்கியம் செழிக்கிறது.

ஒரு நகைச்சுவைத் துணுக்குக்காக ஆசிரியர் கைது செய்யப் பட்டபோது, நான் சார்ந்திருக்கிற தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நிஜமாகவே அதிர்ந்தது. நாடு முழுக்கக் கண்டனக் கூட்டங்கள் நடத்தியது. ராஜபாளையம் த.மு.எ.ச. நடத்திய கண்டனக் கூட்டத்தில் கரிசல்குயில் கிருஷ்ணசாமி பாடல்கள் பாட, நானும் அருணனும் கனல் தெறிக்கப் பேசினோம். அப்போது விகடனுக்கு இதை செய்தியாகக்கூடத் தெரிவிக்கவில்லை. கருத்துரிமைமீது எங்களுக்கு இயல்பாக இருந்த வேட்கையை மக்களிடம் பதிவு செய்தோம்.

எனக்குப் பிடித்த இலக்கியமேதை ஜெயகாந்தன் சிறுகதை களுக்கு முத்திரைக்கதை அங்கீகாரம், கி. ராஜநாராயணனுக்கு இடம் தந்து, நியாயமான வெளிச்சம் விழச்செய்த விஷயம்—இதனால் விகடன் எனக்குள் ஆழ்ந்த மரியாதை பெற்றிருந்தது. விகடனின் தனிச்சிறப்பே இதுதான்!

மலினப்பட்டுவிடாத எளிமையோடு பரந்த மக்களுடன் கலந்து படர்வது, நவீன இலக்கியத்தின் எட்டும் தூரத்தில் தன்னை ஒரு கௌரவமான இடத்தில் இருத்திக்கொள்வது என்பதே விகடனின் வலிமை. மனிதநேய லட்சியங்களையும் கண்ணியத்தையும் காப்பாற்றுவதில் தனிக்கவனம். வணிக நோக்குக்காகத் தரத்தைத் தாழ்த்திக்கொள்ளாத அதன் வைராக்கியம்.

இதெல்லாம்... இப்போதைய கணிப்பு. இப்படியெல்லாம் கனியாமலிருந்த ஒரு தருணத்தில், விகடனுக்கு ஒரு சிறு கதை அனுப்பியிருந்தேன். கல்கியில் நான் நிறைய எழுதிக்கொண்டு இருந்த சமயம்.

சிறுகதையில் ஒரு திருத்தம் செய்வதற்குச் சம்மதம் கோரி, விகடனிலிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது. முரட்டுத்தனமாக மறுத்துவிட்டதைப் பற்றிக் கர்வமாக ஊரெல்லாம் பீற்றிக் கொண்டிருந்தேன்.

மாணவர் சௌந்தரபாண்டியன் கவிஞராகியபோது, எனது நண்பரானார். என்மீது அவருக்கு மிகவும் அன்பு. அவரே பின்னாளில் 'சௌபா' ஆகியிருந்தார்.

அவர் என்னைச் சல்லடை போட்டுத் தேடி, மதுரையில் பிடித்தார். ஆசிரியரின் விசாரிப்புக்குள்ளாகியிருப்பதைச் சொன்னார். ஆசிரியரின் இலக்கிய ஆற்றல் பற்றி நிறையச் சொன்னார். அவர்தான் 'சேவற்கொடியோன்' என்று சொல்ல, ஆச்சரியமாக அதிர்ந்து போனேன். அடடே... அந்த அழகான மொழி நடைக்குச் சொந்தக்காரரா...? !

சௌபா அன்புரிமையோடு வற்புறுத்தினார். "யோவ் மேலாண்மை, விகடனுக்கு ஒரு சிறுகதை அனுப்புறீரு !"

'பௌர்ணமி' என்றொரு சிறுகதை அனுப்பி வைத்தேன். அதில் ஒரு வாக்கியம் மாற்ற வேண்டிய நியாயத்தை விளக்கி, மூன்று பக்கக் கடிதம் எழுதிய ஆசிரியரின் ஜனநாயகப் பண்பில் பிரமித்துப் போனேன். பின்பு, இந்தப் பிரமிப்புகள் தொடர்ந்தன.

அன்றிலிருந்து எனது படைப்புகள் நுட்பமான கவனிப் புடனும் உயர்ந்தபட்ச கவுரவத்துடனும் விகடனில் வந்துகொண் டிருக்கின்றன. ஓர் எழுத்தாளன் என்ற அளவில் விகடனுடனான உறவு ஆழமானது; அழுத்தமானது; அடர்த்தியான அனுபவங்கள் நிறைந்தது.

அமரர் கல்கி சிறப்பிதழாகச் செம்மலர் வெளியிட முடிவு செய்தபோது, ஆசிரியரின் பேட்டி தேவைப்பட்டது. இவரோ, எதற்கும் பேட்டியே தரமாட்டார். என்ன செய்ய...? நானும் சோழ. நாகராஜனும் ஆசிரியரைச் 'சும்மா' சந்தித்தோம். பேசினோம். கல்கி

பக்கமாகப் பேச்சு நகர்ந்தது. உணர்ச்சிமயமாக, உள்ளார்ந்த லயிப்பில் பேசினார்.

"இதையே பேட்டியாகப் பயன்படுத்திக்கொள்ளட்டுமா?" என்றேன். அத்துமீறலானது, எனது கேள்வி. நட்புரீதியான உரை யாடலைக் காரியார்த்தமாக உருமாற்றுகிற தந்திரம்.

ஆசிரியருக்குச் சம்மதமேயில்லை. சம்மதமற்ற மனநிலை யிலேயே என்மீதுள்ள பேரன்பு காரணமாகச் சம்மதித்தார்.

எங்கள் ஊரின் ஓடுபாலம் உடைந்தது. ஊர் துண்டிக்கப் பட்டது. பள்ளி செல்லக்கூட ஐம்பத்தாறு கிலோமீட்டர் சுற்றிச் செல்ல வேண்டிய நரகாவஸ்தை. இதை விளக்கி, அப்போதைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு நான் எழுதிய நீண்ட கடிதத்தின் நகலை ஜூ.வி.க்கும் அனுப்பி இருந்தேன். கடிதத்துடன் கள ஆய்வையும் பிரசுரித்து, என் குரலைத் தமிழகம் முழுக்க ஒலிக்க வைத்தது. ஜூ.வி.! இதைப் படித்த அப்போதைய சிவகாசி சட்டமன்ற உறுப்பினர் திரு. சொக்கர் அவர்கள், பாலம் கோரி முதல்வரைத் தொடர்ந்து அணுகி வற்புறுத்தியதால், ஊர்மக்கள் ஒத்துழைப்புடன் ஒரு மிகப் பெரிய பாலம் (ஒரு கோடி முப்பது லட்ச மதிப்பீடு) நிஜமாகிவிட்டது! பாலத்தின் பாலம் ஜூ.வி. என்றால் மிகையில்லை.

நாவலாசிரியர் மனைவி என்ற வரிசையில், என் மனைவி பொன்னுத்தாய் பேட்டி விகடனில் வந்தது. என் குடும்பத்துக்கே செய்த உயரிய கௌரவம்.

விகடனுக்குத் தனிக் குணமுண்டு. சமுதாயப் பொறுப்பு உண்டு. இலக்கியப் பொறுப்பு உண்டு. பண்பாட்டுப் பெருமை களைப் பாதுகாக்கிற சிறப்பு உண்டு.

எத்தனை உலகமயச் சூறாவளிகள், வந்தாலும் நிலை குலை யாமல் உயிர் வாழ்கிற தமிழ்ப் பண்பாட்டைப் போலவே... மனித நாகரிகத்தின் சின்னமாக விகடன் வாழும் என்றென்றும். ஏனெனில், விகடன் சமுதாயத்தின் மனசாட்சி.

# முன்னுரை

'முத்திரைச் சிறுகதைகள் அணிவரிசை' என்ற தனிச் சிறப்புத் தகுதியோடு இந்தச் சிறுகதைத் தொகுப்பு உங்கள் கைக்கு வருகிறது.

"வெண்பூ மனம்" தொகுப்பின் ஏழு கதைகள் ஆனந்த விகடனில் மட்டும் "பவளவிழா முத்திரைச் சிறுகதைகள்" என அங்கீகாரம் பெற்ற கதைகள். 'குங்குமம்' வார இதழின் முத்திரைச் சிறுகதையாக 'சக ஜீவராசி'.

ஐந்து குட்டிக்கதைகளை இத்தொகுப்பில் சேர்க்கலாமா, வேண்டாமா என்றொரு விவாதம் எனக்குள் நிகழ்ந்தது. சிறுகதைக் கூறுகளும், உணர்ச்சி விளைவுகளையும் நிகழ்த்தவல்ல ஹைக்கூச் சிறுகதைகளாக இவை திகழ்வதால், இத்தொகுப்பில் இணைகிற உரிமை பெறுகின்றன என்ற துணிபில் சேர்க்கிறேன்.

'நானும் விகடனும்' என்ற பவளவிழா விகடன் கட்டுரை வரிசையில், என்னையும் எழுதச் சொல்லி கேட்டுக் கொண்டது, விகடன் ஆசிரியர் குழு. மனசுக்குள் நெகிழ்ந்தேன். ஆயினும்-

நேர்மையோடும் மனஉண்மையோடும் 'நானும் விகடனும்' என்ற சிறப்புக் கட்டுரையை எழுதியிருந்தேன். பொய்யில்லை. போலிப் புகழ்ச்சியில்லை. மிகையில்லாத மனஉண்மையை கண்ணியமாக பதிவு செய்தேன்.

அந்தக் கட்டுரையும், இந்த நூலில் இடம்பெறுகிறது.

'முட்டை வேட்டை' சிறுகதை ரொம்பவும் தனித்துவ மானது. வேறு யாரும் எட்டிப் பார்க்காத களம். யோசித்துப்

பார்த்திருக்க முடியாத பிரச்சினை. மிகப்பெரிய பாராட்டுக்களையும், புகழையும் பெற்றுத் தந்தது. இராஜபாளையம் லோகநாதராஜா போன்ற உயர்சிந்தனைப் பிரமுகர்கள் பலரின் நட்பை வாங்கித் தந்தது.

மழலைச் சுமை எந்த இறுகலான பாறை மனசையும் நெகிழ வைக்கிற தனிவல்லமை பெற்ற சிறப்புக்கதை.

உலகமய வர்த்தகச் சுழல்வில் இந்தியாவும் இணைந்து கொண்ட பிறகு, இந்தியா தொழில் ரீதியான சரிவுகளையும், வணிக ரீதியான நாசங்களையும், பண்பாட்டுச் சிதைவுகளையும் சந்திக்கிறது.

பெப்ஸி, கொக்கொ கோலா போன்ற அந்நிய நாட்டு குளிர்பானப் படையெடுப்பில் காளிமார்க், மாப்பிள்ளை விநாயகர், கண்மார்க் போன்ற கலர் கம்பெனிகள் கலகலத்தது மட்டுமல்ல, ஐஸ் விற்று கஞ்சி குடிக்கிற ஏழைகளின் அடுப்பிலும் மண் விழுந்துவிட்டது.

'காடு கரையே கதி'யென்றும், 'உள்ளூரே உலகம்' என்றும் வஞ்சகமில்லாமல் உழைத்துக் கிடந்த நிலம் சார்ந்த உழைப் பாளிகள், தொப்பூள் கொடி அறுபடுவதைப் போல சொந்த மண்ணிலிருந்து தூக்கியெறியப்படுகின்றனர். வேலையின்மை என்ற ராட்சஸத்தின் காலடியில் சிக்குண்டு... பஞ்சம் பிழைக்கப் போகிற அகதி நிலைக்கு ஆளாகிற அவலம். வியர்வையை ஏலம் போட ஊர்ஊராக சுற்றவேண்டிய இழிவு, இன்றைய கிராமத்தின் இந்திய உண்மை.

உலகமய வர்த்தகச் சுழல்வின் பண்பாட்டுச் சீரழிவுப் படையெடுப்பில் ஒன்றுதான், உலக அழகிப் போட்டிகள். இந்தியப் பெண்களும் உலக அழகிகளாகிற அதிசயம். 'அழகைப் பாது காப்பதே வாழ்வின் லட்சியம்' என்று நிறம் மாறுகிற முரணில், பாதுகாப்பற்றுப் போகிற பண்பாடு பற்றி யாருக்கும் கவலையில்லை. 'உடல் சதைகளின் கச்சிதமும், நளினமுமே அழகு' என்றாகிற

நாசகார மதிப்பீடுகள். 'உழைப்பே அழகு, மனிதநேயமே அழகு' என்ற இந்திய மரபார்ந்த உழைப்பாளி மக்களின் பண்பாட்டுணர்வை தொட்டுக் காட்டி, கட்டிக் காப்பாற்ற வேண்டியது, இந்த நாளின் கடமை.

"நாளைய நனவு" என்ற இந்தச் சிறுகதை ஆனந்த விகடனில் பிரசுரமான இரண்டொரு நாளிலேயே, இயக்குநர் சிகரம் கே. பாலச்சந்தர் அவர்கள் புதல்வி திருமதி புஷ்பா கந்தசாமி அவர்களால் இனம் காணப்பட்டு, பாராட்டு பெற்றது. அது மட்டுமல்ல, டெலிபிலிம் எடுப்பதற்காக இக்கதையை என்னிடம் கேட்டு வாங்கிக்கொண்டார்கள், அவர்களது கவிதாலயா நிறுவனத்துக்காக.

கள்ளச்சாராயத்தின் இடத்தை கவர்ந்துகொண்ட கவர்மெண்ட் ஒயின் ஷாப்புகள், தெருவுக்கு நாலு என்று திறந்துகொண்டே போகிற முன்னேற்றம். போதையில் தள்ளாடி வேரிழக்கிற ஏழை எளியோரின் குடும்பங்கள். மலிவு விலை மதுகளும், உயர்வகை மது வகைகளும் கல்யாண வீடுகள், இழவு வீடுகள் என்று எல்லா இடங்களிலும் நுரை பொங்கி வழிகின்றன. தேசமும், பண்பாடும், வாழ்வும் தள்ளாடித் தத்தளிக்கின்றன.

நாடு காக்க நல்ல பல காந்திகளும், வாலிபர்களும் தேவைப் படுகின்றனர்.

'கோட்டைச்சாமி' சற்றே வித்தியாசமான மொழிநடையில் எழுகிறது. அரசகாலத்து நிகழ்வுச் சித்திரம்.

'மாரியம்மாள்' கதையும் அப்படித்தான். மழையின் இரு குணத்தை உணர்த்துகிற கதை. 'மழை என்றாலே அழகானது. நனைந்தால் சுகமானது' என்று பாதுகாப்பான இல்லத்தில் உட்கார்ந்துகொண்டு, ஜன்னல் வழியே மழையை ரசித்து கவிதை எழுதுகிற மனோபாவத்தை என்னால் ரசிக்க முடியவில்லை.

மழையின் முழுமை தெரியாத இந்த மனோபாவம், என்னை எரிச்சலூட்டியது.

மழையின்றி உலகில்லை. உண்மை. அதே மழைக்கு இன்னொரு முகமும், குணமும் உண்டு. அதைப் பதிவு பண்ணவே 'மாரியம்மாளை' எழுதினேன். "ஈரமான மாரியம்மன், (மாரி என்றால் மழை) ரௌத்ரமான பத்ரகாளி" என்ற இருமுகம் கொண்ட மழையை எழுதினேன்.

என் கதைமாந்தர்கள், வியர்வை ஜாதியினர். தலித்-மற்றும் பிற்படுத்தப்பட்ட ஜாதியினர். விவசாயத் தொழிலாளர், விவசாயிகள். மழை கண்டு, பயந்து ஓடுவதைப் பரிகசிப்பார்கள். மழைப் பொழுதிலும் கொழை ஒடிக்க ஓடுவார்கள். வெய்யில் பொழுதிலும் வேலைகள் செய்வார்கள்.

'பாடுபடுவதே மனிதச் செயல்' என்று எந்நேரமும் மெய் வருந்திக் கொண்டிருப்பவர்கள். அவர்கள் குணாம்சமே, எனது கதைகளின் சுபாவம். அவர்கள் மொழியே, சிந்தனைத் தொனியே எனது கதையின் குணங்கள். அவர்களது வாழ்வியல் பண் பாட்டுத்தளமே, என் கதைகளின் இயங்கு தளம்.

இந்திய அரசியல், பொருளாதார, ஆட்சியாளர்களால் புறக்கணிக்கப்பட்டுக் கொண்டிருக்கிற கிராமங்கள், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர் (வேளாண்மை, பிற்படுத்தப்பட்டோர், தலித்) என்கிற மகாசமுத்திரக் கறுப்பு ஜனங்கள்தான்... இந்தியாவுக்குச் சோறு போடுகிறார்கள்; இந்தியப் பண்பாட்டின் பாதுகாப்புப் பெட்டகமாக இருக்கிறார்கள். புதிய பொதுமைச் சுபிட்ச இந்தியாவை கருக் கொண்டிருக்கிறார்கள்.

ஆயினும் ஆட்சியும், வரலாறும், அறிவுஜீவிகளும் இந்த மகாசமுத்திரக் கறுப்பு ஜனத்தைப் பொருட்படுத்துவதில்லை. புறக்கணிக்கின்றனர். அறிவுஜீவிகளின் புறக்கணிப்புகளையும்

மீறித்தான், இந்த மகாசமுத்திரக் கறுப்பு மக்களின் பண்பாட்டு இலக்கியத்தளம் அரவமற்று இயங்குகிறது.

அந்த மக்களின் ஆன்மஒலியாக என் கதைகளும், கதை மொழியும் இயங்குவதில்தான்... என் கதைகளுக்கான ஆன்மபலம் அடங்கியிருக்கிறது.

புறக்கணிப்புகளை மீறிய புதிய நதியாகவும்,• ஜனநாயக சிந்தனை கொண்ட லட்சோப லட்ச படிப்பாளிகளின் ஆதரவு பெற்ற இலக்கியப் பாதையாகவும் என் கதைகள் இயங்குகின்றன.

கங்கை புத்தக நிலையம புகழ்மிக்க பாரம்பர்யமிக்கது. அவர்கள் பதிப்பித்த எனது நூல்களான 'மனப்பூ', 'ஒரு மாலை பூத்து வரும்' ஆகிய இரு சிறுகதைத் தொகுப்புகளும் அடுத் தடுத்து தமிழக அரசின் மாநில விருதைப் பெற்றன. ஆச்சரியமிக்க ஆனந்த அனுபவம் இது.

கங்கைக்கும், எனக்குமான உறவு அடர்த்தியாகிறது: அழுத்த மாகிறது: ஆத்மார்த்தமாகிறது. திருமிகு இராமு அவர்களை எத்தனை பாராட்டினாலும் தகும்.

அந்தக் கங்கை புத்தக நிலையமே இந்த நூலையும் பதிப் பிப்பது, கூடுதல் மகிழ்ச்சியளிக்கிறது.

அழகும் கச்சிதமும் பொருந்திய நூலாக வடிவமைத்த பதிப்பகத்திற்கும், அற்புதமான அட்டை வடிவமைத்த ஓவியர் ஷ்யாம் அவர்களுக்கும், இந்தச் சிறுகதைகளைப் பிரசுரித்து என்னைப் பெருமைப்படுத்திய ஆனந்தவிகடன், தேவி, குங்குமம், தினமலர், வாசுகி, செம்மலர் போன்ற இதழ்களின் ஆசிரியர்களுக்கும், கதைகள் வந்த இதழ்களை பத்திரப்படுத்தி, பாதுகாத்து, கத்தரித்துத் தந்த என் மூத்த மகள் பொ. வைகறைச் செல்வி (பி.ஏ.தமிழ்)க்கும், என் இலக்கிய வாழ்க்கைக்கு ஆதாரபலமாகவும், ஆணிவேராகவும்

திகழ்கிற என் உடன்பிறப்பு செ. கரிகாலனுக்கும் எனது இதய பூர்வமான நன்றிகள் என்றென்றும் உரித்தாகும்.

தொகுப்பை வாசித்து முடித்துவிட்டீர்களா? மௌனத்தில் புதைந்து போய்விட வேண்டாம். பாராட்டத் தோன்றினாலும், குறைகூறத் தோன்றினாலும் ஓர் அஞ்சலட்டையில் உணர்த்துங்கள்.

உங்கள் பாராட்டுச் சொற்கள் என் பேனாவுக்கு இன்னும் மையூற்றும்; நீங்கள் கண்டுணர்த்தும் குறைகள், என் பேனாவை மேலும் தீட்டி, கூர்படுத்தும். இரண்டுமே இலக்கியத்துக்கு உரமூட்டும்.

நன்றி!

என்றும் உங்கள்

**மேலாண்மை. பொன்னுச்சாமி**

மேலாண்மறைநாடு
626127
இராஜபாளையம் வழி
விருதுநகர் மாவட்டம்.

# உள்ளே....


| | | |
|---|---|---|
| 1. | முட்டை வேட்டை | 15 |
| 2. | மழலைச்சுமை | 29 |
| 3. | மாரியம்மாள் | 43 |
| 4. | தாய் ரௌத்ரம் | 59 |
| 5. | அழகுமாயம் | 62 |
| 6. | கோட்டைச்சாமி | 75 |
| 7. | உரசல் | 90 |
| 8. | சீமைக்கலர் | 93 |
| 9. | ஏல வியர்வை | 109 |
| 10. | உயிர்ச்சுமை | 122 |
| 11. | நாய்க்கழுதை | 125 |
| 12. | நாளைய நனவு | 137 |
| 13. | சொந்த முகம் | 150 |
| 14. | வெண்பூ மனம் | 153 |
| 15. | சக ஜீவராசி | 165 |
| 16. | மகள்வாசம் | 177 |

ரூ. 5000 பரிசு பெற்ற
பவளவிழா முத்திரைச் சிறுகதை

# முட்டை வேட்டை

மயில் என்றாலே ஆகாது என்பான் நம்ம முருகையா. கண்ணில் தட்டுப்படக்கூடாது என்பான். கடித்துக் குதற வேண்டும் என்று துடியாகத் துடிப்பான். வெறி பிடித்தவன் மாதிரி வெறுப்பான். இத்தனைக்கும் இப்பத்தான் டென்த் பரீட்சை எழுதியிருக்கிறான்.

முழுத்த இளவட்டமுமில்லை.

முருகையா இன்றைக்கு முட்டை வேட்டையில் மும்முரமாகத் திரிந்தான். அதிலும் மயில் முட்டை களைக் குறிவைத்துத் தேடினான். வேலி மரத்தூர்கள் பெருத்து, அடர்ந்து கிடக்கிற இடங்களையெல்லாம் கண்ணில் வலைபோட்டுச் சலித்தான்.

தண்ணீர் பிறப்பே காணாது, காய்ந்து கனல் பறந்து கிடக்கிற ஆறு... அசோகவனமாக வேலிமரக்காடு... வெட்டுப்பட்டுக் காய்ந்து கிடந்த முள்குமி... மஞ்சணத்தி மரம்... ஆற்றுக்கரையின் மண்சரிவு... தலைவிரி கோலமாகப் பேயாகக் கிடக்கிற வேலிமர விளார்கள்... நெருக்கமாக நாலு தூர்கள்... ஒடிந்து நொறுங்கிக் கிடக்கிற முள்குமி... விரல் நுழைக்க முடியாத அடர்த்தி, ஏகப்பட்ட கொழைதழைகள்.

இப்படியான இடத்தில்தான் மயில் முட்டையிடும். நரிகள் நுழைய முடியாத இடம். கிட்டிப்பான இடம். யார் கண்ணிலும் முட்டை தட்டுப்படாது.

மயில்கள் ரொம்ப ரொம்பச் சாமர்த்தியம். இடம் தேடி முட்டை இடுவதில் படுகில்லாடி. கள்ளங்கபடு. ஒரு ஜீவராசியையும் நம்பாது.

இந்தப் புதருக்குள் நுழைந்து பார்க்க ஆசைப் பட்டான். காலில் டயர் மிதியடி. கைலியை உயர்த்தி மடித்துக் கட்டினான். மூஞ்சியில் கிழிக்க முயலும் முள்விளார்களை விலக்கிக்கொண்டு தலையை நீட்டி னான். மண்ணில் மயில் கால்தடங்கள்.

நம்பிக்கை தெரிந்தது.

'முட்டைக இருக்கும். மயில்க நடமாடுன எடமா யிருக்கு. முட்டைக இருந்தா... நல்ல வேட்டைதான். பொறிச்சுத் திங்கலாம். ருசியாயிருக்கும். வெந்த முட்டையின் வாசம் 'கம்'முனு ஆளைத் தூக்கும்.

அதைவிட ரொம்ப முக்கியம், 'எத்தனை முட்டைக கெடைக்குதோ, அத்தனை மயிலுக்குஞ்சுக பொறக்காம தடுத்துரலாம்...'

முருகையாவுக்குள் வன்மம். மயில் வர்க்கத்தையே இல்லாமல் ஆக்குகிற வெறி.

பொழுதைப் பார்த்தான். ஏறுபொழுது. பங்குனி மாசத்து அக்னி வெயிலின் வெளிச்சத் தகதகப்பில் வெளிறிக் கிடந்த ஆகாயம். கண் எரிந்தது. மணி பத்துக்கு மேலிருக்கும்.

ஞாபகத்துக்கு வந்த பசி, அயற்சியையும் சோர்வை யும் தந்தது.

முருகையாவுக்குள் அம்மாவின் வசவுகள், கோபச் சீறல்கள்...

"ஏலேய்... எடுபட்ட நாயி! வாயிலே போட வேண்டிய சோத்தைப் போட்டுக்கிட்டுப் போய்த் தொலைய வேண்டியதுதானே...? சாப்புடாமக் காய்ஞ்சு கெடந்து, என்னத்துக்கு என்னைச் சாகடிக்குறே... பாவிப் பயலே...?"

அம்மா எப்பவும் அப்படித்தான். காட்டுக்கத்தலாகக் கத்துவாள், பாசத்துடன். அனலாகச் சீறுவாள் அன்புடன். அம்மாவே அதிசயம்தான். நான் சாப்பிடவில்லையென்றால், அவள் சாவாளாம்!

'செல்லம்', 'கண்ணு', 'அய்யா ராசா' போன்ற கொஞ்சல் சொல்லின் தொனியில்தான் 'பாவிப் பயலே' என்பாள்.

ஏறுவெயிலின் உஷ்ணமும் உறைத்தது. பசி தெரிந்தது. சோர்வில் உடம்பே துவண்டது. சலித்துப் போகிற மனசு.

ஆற்றைவிட்டு வெளியேறி, புஞ்சைக் காடுகளின் ஒற்றையடிப் பாதையில் நடந்தான். தளர்ந்த நடை. நனைந்த ஈரத்துணியாகத் துவண்டான்.

குட்டி வேம்புகளாக இருந்த தரிசில்—

ஒரு பெண்மயில் குட்டைவாலும் புகைநிறத்துச் சிறகுகளுமாக லட்சணமில்லாமல் போயிற்று. "கே...ர்ர், கே...ர்ர்"ரென்ற மிரட்சியான வீறிடல். அதன் பின்னாலேயே பயமற்ற பாதுகாப்பு உணர்வுடன் கதுவாலிப் பறவைகளைப் போல ஓடுகிற மயில் குஞ்சுகள். நிதானமான கம்பீரத்துடன் நீள்கழுத்தை நிமிர்த்தி, மெது

நடையில் ஆண்மயில். அதன் நீள்தோகை தாழ்ந்து, தரை வெயிலைக் கூட்டிப் பெருக்குகிறது.

அந்த அயற்சியிலும் முருகையாவுக்குள் பற்றிக் கொண்ட வன்மத் தீ. மயிலைப் பார்த்த கணத்தில் மனசுக்குள் தீப்பொறிகள் தெறித்தன. கோபச் சீறல்கள்.

“சனியங்களா... இங்கயா இருக்கீக...?”

குனிந்தான். கையில் கிடைத்த கல்லுக்கு றெக்கை முளைத்தது. ‘உய்ய்க்’கென்ற விசிலிரைச்சலோடு விசையோடு பறந்த கல். மாறி மாறிப் பறந்த கற்களில், அவனது வன்மம் கனன்றது.

மயில் குஞ்சுகள் திடுக்கிட்ட வீறிடலுடன் சிதறித் தெறித்தோடுகின்றன. பெண்மயில், றெக்கைகளை விரித்தடித்துக்கொண்டு பயக்கதறலோடு மாரடிப்பதைப் போல ஓடியது. ஆண்மயில் கண்ணில் சட்டென்று அப்பிய பயம். ‘பீக்காக், பீக்காக்...’ என்ற அதிர்வான வீறிடலோடு துள்ளித் தாவியது.

முருகையாவுக்கு ஏகச் சந்தோஷம். கதறலும் சிதறலுமாகத் திசைக்கொன்றாகத் தெறித்தோடுகிற மயில்களும் குஞ்சுகளும்... பீதியில் நனைந்த அதன் வீறிடல்கள்.

வீட்டுக்குப் போனால்—

அம்மா இருக்கமாட்டாள். தெற்குக் காட்டில் மிளகாய்ப்பழம் பொறுக்குவாள். மூன்றாள் வருகிற தென்றால் தலைக்கு ஒரு சாக்கு என்று, நாலு கொண்டு போயிருந்தாள். நாலு சாக்கு மிளகாய்ப்பழத்தையும் தூக்கிக்கொண்டு வந்து சேர்க்க, மாட்டுவண்டி போடுவார் ஐயா. கூடப் போகணும்.

*சுற்றுகிற பைதாக்கள். நகரும் வண்டி, நட்டுக்க ஊன்றப்பட்டிருக்கும் முழக்கம்புகள். அதைப் பிடித்துக்கொண்டே நின்றால்... நல்லாயிருக்கும். வண்டியின் ஆட்டத்துக்கேற்ப உடல் ஆடும். உடலோடு சேர்ந்து மனசும் கும்மாளமிடும்.*

*இன்னிக்கு என்ன கிழமை...? முழுப் பரீட்சை லீவு. கிழமையும் தெரியவில்லை. ஓர் இழவும் தெரியவில்லை. வெள்ளி, செவ்வாயாக இல்லாமலிருந்தால், அம்மா நிச்சயமாக முட்டை அடை ஊற்றி வைத்திருப்பாள்.*

*அடை ஊற்றிய முட்டை என்றால், முருகையாவுக்கு உயிர். கடைசி இணுக்கு வரை வழித்து மண்டுவான்.*

*புள்ளி விட்டு வீடு வருகிறபோதே, சில சமயம் முட்டை வாசம் வந்துவிடும். சுருசுருவென்று நுரையிடுகிற எண்ணெய்க்குள் வெந்து சுருள்கிற வெங்காய வாசம், சீரக வாசம் ஆளைத் தூக்கும்.*

*“இப்பவே சோறு வை...” என்று ஒற்றைக்காலில் நிற்பான். நச்சரிப்பான்.*

*சங்கரன்கோவில் கமிஷன் கடையில் மிளகாய் வத்தல் விற்கப் போயிருந்த ஐயா, இவனையும் ஒரு தடவை கூட்டிப் போயிருந்தார். ‘முத்தையா நாடார் கிளப்’பில் சாப்பாடும் சுக்கா வறுவலும் வாங்கித் தந்தார். ஆம்லேட்டும் சொன்னார்.*

*“அப்புறமன்னா... என்னய்யா...?”*

*“முட்டை...டா...”*

*“அய்ய்க்! அடி, சக்கை...”*

*பாவனையில்லாத ஆதாளி, முகத்தில் கூத்தாடியது. முருகையா முகம் பூவாய் ஒளிர்ந்தது.*

ஆம்லேட்டைப் பிய்த்துத் தின்றான். நன்றாகத்தான் இருந்தது. முறுகலான எண்ணெய் வாசம், தூக்கலாகத் தான் இருந்தது. ஆனாலும் அம்மா ஊற்றி வைக்கிற அடை மாதிரி இல்லை. அம்மா கைப் பக்குவமே தனீ. அடை ஊற்றி வெந்த முட்டையின் நிறமே தனீ. தேன் நிறத்திலேயே சற்றுக் கறுப்பு சேர்ந்த மாதிரி ஒரு கலர். தொட்டால் சூடும் மிருதுவும் மனசுக்குச் சுகமாக இருக்கும். பிய்த்து ஒரு துண்டை வாயில் வைத்தால், வெந்து கனிந்த சின்ன வெங்காயமும் முட்டையும் சேர்ந்து, வாசமும் ருசியும் ஆளைச் சுழற்றியடிக்கும்.

அம்மான்னா அம்மாதான். அம்மாவுக்கு முன்னால் எல்லாமே சும்மாதான்.

முருகையா ஒரு முட்டைக் கிறுக்கு. காடை முட்டை, கதுவாலி முட்டை, குருவி முட்டை, காக்கா முட்டை, மைனா முட்டை, புறா முட்டை, மயில் முட்டை என்று இவன் சாப்பிட்டு ருசி பார்த்த ரகம் ரகமான நினைவு களின் வாசம்.

புஞ்சையிலிருந்து வேலை முடித்து அம்மா வெறுங்கையுடன் வரவேமாட்டாள். 'ஆசை மகன் அலை பாய்வானே' என்று ஏதாச்சும் முட்டைகளை எடுத்து வருவாள். எதுவுமே கிடைக்காமல் போனாலும் இருக்கவே இருக்கிறது, வீட்டில் நாட்டுக்கோழி முட்டை.

போன வருஷம், ஆவணி மாசம். இறவைப் புஞ்சையில் ஐயா மக்காச்சோளம் விதை ஊன்றி யிருந்தார்.

"ஏலேய் முருகையா..."

"என்னய்யா...?"

"ஒனக்கு லீவ்தானேடா...?"

*ஐயாவின் கேள்விக்குள் முகம் தெரியாத ஆபத்து மறைந்திருக்கிற துர்வாசத்தை உணர்ந்துவிட்ட முருகையா, எச்சரிக்கையோடு பதில் சொன்னான்.*

*"கிரிக்கெட்டு வெளையாடணும்லே...?"*

*"கிரிக்கெட்டும் வேண்டாம், வெறும் கட்டும் வேண்டாம்... பேசாம புஞ்சையிலே போயி மயிலுகளை வெரட்டிக்கிட்டு இரு..."*

*"என்னத்துக்கு...?"*

*"ஊனுன வெதைகளைக் கொத்திப் பெறக்க மயிலுக வரும்டா. வெரட்டணும்டா...வெள்ளாமையைக் காப்பாத்தணும்டா..."*

*முகம் குறாவிப் போயிற்று முருகையாவுக்கு.*

*பதினைந்து நாள் லீவ். பொழுதுக்கும் கிரிக்கெட் விளையாடத் திட்டம். டீம் பிரித்தாகிவிட்டது. நாலு ஊர்ப் பையன்களும் கூடி, ஆத்துப்பாலத்துப் பொட்டலில் நாலு நாளைக்கு நாலு டீம்களும் 'மாட்ச்' விளையாட ஏற்பாடு. கோலாகல விளையாட்டுத் திருவிழா. ஆடித் திளைக்கலாம்.*

*எல்லாவற்றிலும் மண் விழுந்துவிட்டது. விளையாட்டுக் கனவுகளைக் கொத்தி விழுங்கிவிட்டது மயில்.*

*நீர் பாய்ந்து நனைந்த ஈரப்பாத்திக்குள் மயில் கால்களின் தடங்கள். மண்ணில் மறைந்திருந்த விதைகளைக் கொத்திக் குதறிய அடையாளம். ஈர மண்ணின் காயங்கள்.*

*எங்கிருந்துதான் வந்ததோ... அத்தனை மயில்களும் படையெடுத்த மாதிரி வந்து மோதின, மந்தை மந்தையாக மயில்கள். முருகையா ஒருவன்தான் சிறுவன்.*

ஓடி ஓடி விரட்டணும். ஒவ்வொரு மூலைக்கும் ஓடணும். பொழியில் ஓடணும். நிற்கவிடாது. உஸ் ஸென்று உட்காரவிடாது. வந்து, வந்து, வந்து... 'லந்து' பண்ணுகிற மயில்கள். கசப்பும் வெறுப்புமாகக் கல் லெறிந்தான். ஓயாமல் எறிய வேண்டிய கற்கள். ஓடி ஓடி, கத்திக் கத்தி, எறிந்து எறிந்து... ச்ச்சேய்ய்க்க்!

பகல் முழுக்க... கொதிக்கிற வெயிலில் முருகையா வெந்து கருகி, மயில் துரத்தி, விதையைக் காப்பாற்ற வேண்டிய நிர்ப்பந்தம்.

சக பயல்கள் விளையாடுவான்கள் என்ற நினைப் பிலேயே உடைப்பெடுக்கிற அழுகை. சீறுகிற வன்மம், வசவுகள்.

மக்காச்சோளம் முளைத்தது. அப்பவும் ஐயா விடவில்லை. "போடா, புஞ்சைக்கு..." என்று விரட்டி னார்.

மண்ணின் தடையை உடைத்துக்கொண்டு, சூரிய முகம் தேடி வெளிக்கிளம்பிய தானிய உயிர். வெள்ளை வெள்ளைப் புள்ளிகளாகத் தெரிகிற முளைகள். கிள்ளிப் போட்ட மல்லிகைப்பூவின் இதழ் இணுக்குகளைப் போன்ற முளைகள். அந்தத் தானிய உயிர்களை இரையாக எண்ணிக் கொத்திக் குடிக்க வருகிற மயில் மந்தை.

ரெண்டு தோகை விட்டு, பசிய ஒளித்தளிர்களாகத் தரையில் உயிரின் புன்னகை பூத்த பின்பும் வெடித்துப் பிளந்த பழைய விதைகளைப் பொறுக்க வருகிற மயில் பட்டாளம்.

ஓடி ஓடி... ஓட்டிச் செத்தான் முருகையா. அழுகையும் விசும்பலுமாக வெயிலில் எரிந்தான்.

முருகையாவுக்குள் தீயாகக் கிடந்து தகிக்கும். வயதுக்குரிய விளையாட்டாசையைக் கொத்தி விழுங்கி விட்ட மயில் சனியன்கள். அழகு மயில்கள் அசுரர் களாகிப் போன அவல நிஜம். மயிலைப் பார்த்தாலே கடித்துக் குதறணும் என்ற வெறி, அவனைப் பிடித் தாட்டும்.

இது ஒரு சம்பவம் மட்டுமில்லை. கம்பங்கதிர் விளைந்து கிடந்த சமயத்திலும், நெல், பால் கோதிய பருவத்திலும், செவல்காட்டில் கடலை விதைத்த ஆடி யிலும், இதே கூத்துதான். கொடுங்கூத்து.

மயில், பிறவிப் பகையாயிற்று. மயில் முட்டைகளை வேட்டையாடுவதை ஒரு வேலையாகவே கொண்டிருந் தான் முருகையா.

நேற்றுகூட ஒரு புதரில் மூன்று முட்டைகளை எடுத்தான். நாட்டுக் கோழி முட்டையைவிடப் பெரியது. பெரிய பெரிய முட்டைகள். நேற்று மட்டுமல்ல... நிறைய நாட்களில் நிறைய மயில் முட்டைகள்.

“மயில் முட்டைகளைத் திங்கக்கூடாதுடா... பாவம்டா...”

அம்மா மென்கண்டிப்போடு சத்தம் போடுவாள்.

“என்ன பாவம்மா...?”

“முருகனோட வாகனம்டா...”

“வாகனம் இல்லேன்னா, முருகனாலே பறக்க முடியாதாம்மா...?”

“ஏன்...? வெள்ளாமை வெளைச்சலைக் காக்க... பத்து நாளைக்கு ஒன்னாலே வெளையாடாம இருக்க முடியாதா...?”

"போ, போ... நீயும் ஐயாவும் நல்லாக் கிழிச்சீக..."

முட்டைகளை இவன் வதக்குவான். வெங்காயம் அறுத்து, மிளகாய் கிள்ளி, அடுப்பு மூட்டி, சட்டி தேடி, எண்ணெய் தேடி... கிண்டிக் கிளறி... பெரிய இச்சி லாத்திதான்.

ஆனாலும்—

கொத்திப் பிடுங்கிய மயிலினத்தின் முட்டைகளைத் திங்கிற சந்தோஷம். மூன்று முட்டைகள் என்றால்... பொறியல் வாசம். ருசி. மூன்று சனியன்கள் நாசம்.

ஊருக்குள் வந்து சேர்ந்தான் முருகையா.

ஊரே துக்கமும் குமுறலுமாக அலைமோதியது. திகைப்பும் சோகத் தவிப்புமாகப் புலம்பித் திரிந்தது. சுத்துப்பட்டி பத்து ஊரு ஜனமும் வந்து கூடியிருந்தது. "ஐயோ, ஐயோ..." என்று அழுது அரற்றினர்.

விசாரித்தால்—

இவனுடன் கூடப் படித்த சரசு. லீவில் காட்டு வேலைக்குப் போயிருக்கிறாள். அறுத்துக் காயப் போட்டிருந்த மக்காச்சோளத் தட்டைகளை அரித்து, கட்டுக் கட்டாகக் கட்டுகிற வேலை. தட்டைக்குள் கிடந்த பாம்பு, காலில் கடித்துவிட்டதாம். கால் நரம்பிலேயே பல் பட்டுவிட்டதாம். மறுநிமிஷத்திலேயே மூளையில் விஷம் தாக்கி...

எல்லாவித வைத்தியம், மனித முயற்சிகள் எல்லாவற்றையும் மீறி, மரணம் சரசுவைப் பிடுங்கிக்கொண்டதாம்.

அட... சரசுவா...? வகுப்பில் ஆறாவது ரேங்க்கில் இருந்த அந்த சரசுவா...? காலையில் இருந்தாளே... இப்போது இல்லையா...?

முருகையாவுக்குள் பரவிய வெறுமை. சூன்யப் பகீரிடல். குபுக்கென்று கண்ணுக்குள் வந்து முட்டிய மனநீரின் உறுத்தல்.

சரசு அம்மாவின் ஒப்பாரியும் அழுகையும் தலை விரிகோலமும் கண்ணீரில் கசங்கிய முகமும் பார்க்கப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது முருகையாவுக்கு.

மேலடிவானத்தில் சோகைபிடித்த மேகங்கள்... சாயங்காலச் சூரியன் உஷ்ணமற்று மறையத் துவங்கியது. மேகத்தின் வெளிச்சம் நிறத்தில் மிச்சமிருந்தது.

முருகையா ஓடைப்பக்கம் போனான். சுடுகாட்டுப் பாறையில் வெந்து, பொதும்பலாகக் கிடந்த சரசுச் சாம்பல். மனதுக்குக் கஷ்டமாக இருந்தது. நீலத் தாவணியும் வெள்ளைச் சட்டையுமாக சரசு. சரசுகள், சரசுவின் நினைவு நிகழ்வுகள்.

பேதலித்தது மனசு. மேற்காமல் திரும்பிவிட்டான். பனந்தோப்புக்குள் மயில்களின் கூவல்காடு. ஆற்றுக்குள் இறங்கினான். மணலைப் பறிகொடுத்து, மலடாகிப் போன ஆறு. வெறும் பாறை முடிச்சுகளும், வேலித்தூர் களுமாக லட்சணம் கெட்டுப் போயிருக்கிறது.

மயில்முட்டைகளைத் தேடுகிற வழக்கத்தில் மனப்பார்வை. ஒவ்வொரு வேலிப்புதரையும் கூர்மை யாக உற்றுநோக்கி விலகுகிற கண்கள்.

அந்நேரம்—

கருவேலமரமும் மஞ்சணத்திமரமும் சேர்ந்து நிற்கிற இடத்தில்—

மூன்று மயில் குஞ்சுகள் பய வீறிடலுடன் கத்திற்று. ஒரு பெண்மயில் “கா...ர்ர், கா...ர்ர்ர்”ரென்று கோபமாகக்

கத்துகிறது. போர்க்குண வீறிடலோடும் றெக்கையடிப் போடும் ஒரே இடத்தில் நிற்கிற மயில். நீள்கழுத்தை உயர்த்துவதுவும் வளைந்து முறுக்கேற்றுவதுவும் குனிந்து குனிந்து எதையோ வலிமையுடன் கொத்துகிறதுமாக, அந்தப் பெண்மயில்.

'ஏதோ ஒரு விபரீதம்' என்று பார்த்த முருகையா. மயில் காலடியில் எதைக் கொத்துகிறது?

குதிகாலை உயர்த்தி, கழுத்தையும் உயர்த்தி எட்டிப் பார்த்தான். பயங்கரத்தில் மனம் கிடந்து படபடத்தது. 'என்னவோ, ஏதோ'வென்கிற அச்சக் குழப்பம்.

பெண்மயிலின் காலடியில் நெளிந்து, வளைந்து விறைப்பேறி, திமிறுகிற பெரீ...ய்ய பாம்பின் உடல். கைத்தண்டியிருக்கும் பாம்பு.

பாம்பின் பின்னங்கழுத்தில் மயில் வலதுகாலை அழுந்த ஊன்றிப் பதித்திருக்கிறது. பாம்பின் தலையில் மயிலின் வலிமையான கொத்தல்கள். தாய்மைக்கனிவும் போர்க்குணக் கனலுமான கொத்தல்கள். வீறிடலுடன் கூடிய கொத்தல்கள்.

பாம்பு, சாவை ஒப்புக்கொள்கிற இறுதிக் கணங்கள். நெளிவின் சலனவேகம் தணிகிறது. சீறும் ராட்சத எமன், செத்துவிட்டது.

ஒரு சரசுவைக் காப்பாற்றுகிற உக்கிரத்தில்... பெண் மயில்.

"பொதுவாக்... மயிலுக திரியுற எடங்கள்லே, அரவங்க அவ்வளவா தப்பிக்க முடியாதுன்னு பெரியாளுக சொல்லுவாக..."

ஊர்மடத்தில் ஒரு கிழடு சொன்ன ஞாபகம்.

பாம்பைக் கொன்றுவிட்டு, நடக்கிற பெண்மயில். புள்ளிகள் நிறைந்த அதன் ரெண்டு இறகுகள் உதிர்ந் திருந்தன. சிறிய வாள் போன்ற வளைந்த இறகுகள். இன்னுமோர் இறகு உதிரும் நிலையில் தொங்கிக் கொண்டிருந்தது. போர்ச்சுவடுகளோடு அது நடக்கிற வீரநடை.

'முருகையா பயம் கலந்த பிரமிப்பில். இன்னும் அந்தப் பயப் படபடப்பு தணியவில்லை. படையையே பதற வைக்கிற பயங்கரப் பாம்பு. சரசுவைத் தின்று சாம்பலாக்கிய பாம்பினத்தில் ஒன்று.

செத்துக் கிடந்த அந்த முரட்டுப் பாம்பு. ரத்தத் திட்டுகள். பாம்பின் உருவத்தை ஒரு நடுக்கத்துடன் பார்த்தான்.

'கம்பங்கதிர்களைக் கொத்தி மயில்கள் செய்த நாசம். விளைந்த நெற்கதிர்களை அலகால் உருவுகிற கோரம். மக்காச்சோள முளைகளைக் கொத்திக் குதறுகிற கொடூரம்.

இதெல்லாம்... உணவுத்தேடல், மயிலின் பசி.

வட்டில் சோற்றில் வாய்வைக்கிற கோழிகளைப் போல—வெள்ளாமையில் வாய்வைக்கிற மாடுகளைப் போல—அதன் உணவுத்தேடல். உயிர்த் தேவைகள்.

சரசுகளைக் கொல்கிற அரவங்களைக் கொத்திக் கொல்கிற இந்தப் போர், உணவுத்தேடலா...? உயிர்த் தேவையா...? இல்லையே!

பூவுக்குள்ளிருந்து முகமற்று வெளிப்பட்டு, காற் றையே நறுமணமாக்குகிற வாசத்தைப் போல... உபரிப் பணியல்லவா! மனித விரோதிகளிடமிருந்து;

மனிதர் களைக் காக்கிற ரட்சிப்பல்லவா! கர்மயோக மல்லவா!'

இப்படியெல்லாம் யோசிக்கவில்லை, முருகையா. மனம் நெகிழவும் இல்லை. நினைவு ரீதியான பரி சீலனை எதுவும் செய்யவுமில்லை. மனசு கிடந்து தவித்தது. பயத்தில் நனைந்து நைந்திருந்தது.

செத்துக் கிடக்கிற பாம்பையும், சண்டை போட்ட மயிலின் உக்கிரத்தையும் ஒரு நடுக்க அதிர்வுடன் யோசித்துக் கொண்டிருந்தான்.

"எம்...ம்மா! எம்புட்டுப் பயங்கரம்..." என்று உள்ளுக்குள் வியர்த்து, வியந்தான்.

'இந்தப் பயரங்கரமான—விநோதமான காட்சியை யாரிடம் சொல்லலாம்...? எப்படிச் சொல்லலாம்...? சொன்னால், நம்புவார்களா...?' என்றெல்லாம் யோசிக்கிற மனப் பயணத்தில்—

முட்டைத்தேடல் ரொம்ப முக்கியமற்றுப் போய்விட—

அடுத்த மாதம் லெவன்த் படிக்க ஆலங்குளம் போனான், முருகையா. அப்புறம்... அப்புறம்...

மயில், முட்டை, ஆறு எல்லாமே ரொம்ப நாள்பட்ட இனிய நினைவாக மட்டுமே உறைந்துவிட்டது மனமூலையில்!

--ஆனந்தவிகடன்--15-4-2001

ரூ. 5000 பரிசு பெற்ற
பவள விழா முத்திரைச் சிறுகதை

# மழலைச்சுமை

இப்ப நடந்ததல்ல... இதெல்லாம். இருபது இருபத்தைந்து வருஷத்துக்கு முன்னாடி நடந்தது.

சிவலிங்கம் பயத்தில் தயங்கித் தயங்கிக் கேட்ட கேள்வி. புருஷன் கேள்வியில் பூரித்துப் போனாள் ஆவுடை. அவளுக்கு ஆச்சரியமென்றால்... ஆச்சரியம், 'அட, நம்மாளு கேட்ட கேள்வி நெசந்தானா?'

நம்பமுடியாத திகைப்பு. பரவசத் ததும்பல். திரும்பக் கேட்கிற ஆவல் பறப்பு. "என்ன கேட்டீக, என்ன கேட்டீக? இன்னோருவாட்டி சொல்லுங்க."

அவளது முகமலர்ச்சி. கண்ணில் வியப்பின் மின்னல். சிவலிங்கத்துக்குள் பயம் கலைந்த தெளிவு. உற்சாகத்தில் சற்று உயர்ந்த குரல். அதில் ஒரு துள்ளல்.

"நம்ம ஊர்லேயிருந்து கெ்ணறு வெட்டுற கூலி வேலைக்கு பத்தாளுக மே(ல்)காட்டுக்குப் போறாக. நானும் போவட்டான்னு கேட்டேன்."

"நம்மூரை விட்டா வேற ஊரு பார்த்தறியாத அப்புராணி. கெழக்கு வடக்கு தெசை தெரியாது ஒமக்கு. போயி என்ன செய்வீரு?"

“ஆளுகளோட போறோம். பாடுகளைப் பாக்கு றோம். ஆளோட ஆளா வந்துரப் போறோம். இதுலே, தெசை என்னத்துக்குத் தெரியணும்?”

“புள்ளைக, வீட்டை வுட்டுட்டு... இருபது, முப்பது நா இருந்துருவீகளா?”

“இருக்கணும்லே? இருந்துதானே ஆகணும்? வேலை சோலியில்லாம எம்புட்டு நாளைக்குத்தான் இப்புடிச் சும்மாவே இருக்குறது? சோத்துப் பாட்டுக்கு வழி பாத்தாகணும்லே?”

மழை தண்ணீரில்லை, நாலு வருஷமாக. வானத்தின் மனசு கல்லாக இறுகிப் போயிற்று. தீப்பிடித்த கூரை வீடாக காய்ந்து கருகிக் கிடக்கிறது, காடு கரைகள். மாடு கன்றுகளுக்குக்கூட காய்ந்த கூளமும் கிடைக்கவில்லை. கடும் வறட்சி. கடும் வெக்கை, தீக்காடு. நிலம் நீச்சு வைத்திருக்கிறவர்களே கைத்துட்டு இல்லாமல் கண்ணு முழி பிதுங்குகிறபோது, கூலி ஜனத்தின் கதி? நண்டும் நசுக்குமாய் நாலு பிள்ளைகள் வயிற்றை நனைப்பது எப்படி? தலைப்பிரசவத்துக்கு வீட்டுக்கு வந்திருக்கிற மூத்த மகளை எப்படிப் பராமரிக்க? துட்டுக்கு வழி? இருக்குற அரைக்குறுக்கம் புஞ்சையும் தரிசாகக் கிடக்கு, மழையில்லாம.

ஏழெட்டு நாட்களாகவே கவலைப்பட்டுப் போயிருந்த ஆவுடை, குலை பதறிக் கிடந்த அவளின் நடுக்கம். ‘என்ன செய்ய, ஏது செய்ய’ என்று வழியறியாத திகைப்பு. மருட்சி. மூச்சுத் திணறிப் போயிருந்தாள்.

சிவலிங்கத்தின் சொல், அவளுக்கு ஆறுதலாக இருந்தது. மூச்சு போய்வர வழிவிட்டது. கூலி

வேலைக்குப் போய், பத்து நாளைக்கொரு ஐந்நூறு ரூபாயை அனுப்பி வைத்தால்...

'அடே...ஙப்பா! எம்புட்டு லேசாக இருக்கும்!'

ஆவுடைக்குள் றெக்கையடிக்கிற மனசு.

சொல்புத்தி கேட்டுக் கேட்டு செயல்பட்டு வந்த புருஷன், முதன்முதலாக சுயமாக ஒரு முடிவு எடுத்திருக்கிறான். அந்தச் சொந்தப்புத்தியை நினைக்க நினைக்க அவளுக்குள் பூரிப்பு. பெருமிதம். மனம் கொள்ளாத சந்தோஷத் ததும்பல்.

இன்னும் ரெண்டு நாளில் புறப்படுகிறான் சிவலிங்கம். மேகாடு என்றால், மேற்கு தொடர்ச்சி மலைப்பக்கம். தளவாய்புரம். முகவூர் ஏரியா.

துணிமணிகளை துவைத்துக் காயப் போட்டு மடித்து, துணிப் பைக்குள் வைத்தாள். பல்பொடி, சீப்பு, கண்ணாடி எல்லாம் எடுத்து வைத்தாள். பயணத்துக் கான ஏற்பாடு.

மருகிமருகித் திகைக்கிற சிவலிங்கம். புலிக் குகைக்குள் நழையப் போகிறவனைப் போல மருட்சி. கண்காணாத தொலைதூரச் சீமைக்குப் போகிற வனைப்போல பதற்றம்.

"ஏம்... பயமாயிருக்கா?"

ஆவுடையின் பரிவில் தாய்மை நுட்பம்.

"இல்லே, போவணும்லே?"

"கஷ்டமாயிருக்கும்னு தோணுதா?"

"பாறையைக்கூட தலையிலே தூக்கி கடல்லே போட்டுருவேன். பாடுபடுற கஷ்டத்தைப் பத்திப் பயமில்லே..."

"ம். பெறவு?"

"நீ ஆக்கி வைச்ச கஞ்சியை மட்டுமே குடிச்சுப் பழகிட்டேன். போற எடத்துலே... யாரோ ஆக்கி வைச்ச சோத்தை எப்புடித் திங்க? அதா...ன், பயமாயிருக்கு."

அவன் அடி உதட்டில் மெல்லிய துடிப்பு. கண்ணோ ரங்களில் மனக்கசிவு. நாதியற்ற அபலைத் தனச் சோகத் தோடு கலங்கிப்போய் நெருங்குகிற புருஷன். தன்னையே உலகமாக நம்பிக் கிடக்கிற ஆத்மநேயம். நெக்குருகிப் போன ஆவுடை.

"அட அய்யா... ராசா..." என்று பரவச அழுகைக் கதறலோடு அவனை ஆவிப் பிடித்தாள். பிடரிமயிரில் கையால் தழுவி, வாரியணைத்து, மார்புக்குள் போட்டு இறுகத் தழுவினாள் ஆவுடை. அவனது காய்ந்த தலைமயிரில் அவளது கன்னத்தை அழுத்தினாள். வழிந்த கண்ணீர் உச்சந்தலையை நனைத்தது.

மூத்த மகள் கல்யாணப் பேச்சு ஆரம்பித்த நாளை யிலிருந்து 'கிட்ட வரக்கூடாது' என்று எச்சரித்திருந்த ஆவுடை. அவன் சிணுங்கி வந்து சேட்டை செய்த போதெல்லாம், அதட்டி விரட்டிய ஆவுடை. பதினாறில் கல்யாணம், பதினேழில் மகள், முப்பத்தைந்து வயதில் துறவு என்று தன்னையே வதைத்துக் கொண்ட ஆவுடை.

சிவலிங்கத்தின் வெள்ளையான அன்பில் நெகிழ்ந்து விட்டாள். நீயே கதி என்று வந்து விழுந்து விட்ட புருஷனுக்குத் தஞ்சமளித்துவிட்டாள்.

பஞ்சம் பிழைக்கப் போகிறானே புருஷன் என்ற பரிதவிப்பு, பரிவாக நிறம் மாறி... நெகிழ்வாகி... குழை வாகி...

விரதம் கலைந்த விரக நாளாகி...

ஆனந்தத் தாண்டவமாடிய மோக இரவாயிற்று அவர்களுக்கு. மோகமேகங்கள் மோதிக் கசிந்த மழைக்காடு. மழை பெய்த சகதிக்காடு.

குமுறிக் குமுறிப் பெய்த கோடை மழையில் நனைந்த கரிசல் மண்ணாகக் குழைந்த நிலையில் சிவலிங்கமும், ஆவுடையும். ததும்பலும், மனப்பூரிப்பும், நெஞ்சு நிறைவுமாகப் புறப்பட்டான் சிவலிங்கம் ரெண்டு நாளில்.

**வீ**ட்டுக்கு வெளித் திண்ணையில் நிறைமாசக் கர்ப்பமாக உட்கார்ந்திருக்கிற ராஜேஸ்வரி. பதினேழு வயசு. சிற்றுடம்பு. உயிர் சுமந்து பருத்த வயிறு, பொருத்தமற்றுத் தோன்றியது, பாகற்கொடியில் பூசணிக்காய் விளைந்த மாதிரி.

'தானும் இப்படித் தானிருந்திருப்போம்... இவளைச் சுமந்தபோது' என்று நினைத்துக்கொண்டாள் ஆவுடை. 'சமைஞ்சவுடனே கல்யாணம். தாலியேறுன மறு வருஷமே கையிலே பிள்ளை. சரியா, தப்பா? தெரியலை. ஆனா, தலைமுறை தலைமுறையா இப்புடித்தான் கழியுது'—தலையைச் சொறிந்துகொண்டே யோசித்தாள், ஆவுடை.

"யம்மா..."

"என்னடி?"

"தலையெல்லாம் கெடந்து அரிக்குது, பேனு. சித்தே பாக்கீயா?"

ராஜேஸ்வரி தலைமுடியை அவிழ்த்து நெகிழவிட்டு, இறங்கி வாசல்படியில் உட்கார்ந்தாள். மகளின் கூந்தலை வகிர்ந்து, விரல்களால் வரிவரியாக மயிர் விலக்கிப்

பேன் தேடினாள். பேனோ, ஈரோ தென்பட்டால், ரெண்டு பெருவிரல் நகங்களாலும் நெரித்தாள். நெறுக் கென்று சத்தம் கேட்கும்.

இளையதுகள் ரெண்டும் விளையாடப் போயிருந் தன. பாவாடை கட்டின லட்சுமியும் கவுன் போட்ட ராமுத்தாயும் வீட்டுக்குள்ளிருந்து ஒருத்தரை ஒருத்தர் துரத்திக்கொண்டு ஓடி வந்தனர். ரெண்டு பேர் கையிலும் பருத்துக் காய்த்த பீர்க்கை நெத்து. "கலகலா... சலசலா..." என்கிற குலுங்கல் சத்தம். விதைகளின் ஆர்ப்பரிப்புச் சத்தம்.

ஆவுடை அதட்டினாள். கோபம் கோபமாகக் கத்தினாள்.

"அடியே சிறுக்கிகளா... இங்க வாங்கடி..."

"என்னம்மா?"

"இதை என்னத்துக்கு தூக்கிக்கிட்டு திரியுதீக?"

"சும்மா... வெளையாட்டுக்குத்தான்..."

"உள்ளே கொண்டு போயி பத்திரமா வையுங்கடி..."

"என்னத்துக்கும்மா...?"

"வெதைக்காகத்தானே இந்த ரெண்டு பீர்க்கையை மட்டும் முத்தவிட்டோம்? பத்திரமா வெச்சிருந்தா... வெதைகளையெடுத்து புஞ்சையிலே ஊனலாம்லே?"

"மழையில்லேல்லே?"

"இல்லாமலேயேவா போயிரும்? இந்த வருஷ மாச்சும் மழை பெய்யாமலா போயிரும்? இதுலே இருக்குற பீர்க்கை வெதைகளை ஊனி வைச்சா... ஒண்ணுக்கு நூறா பொங்காமலா போயிரும்?"

பிள்ளைகள் ரெண்டும் வீட்டுக்குள் போய்விட... பேன் பார்த்துக் கொண்டிருந்த ஆவுடை, கவலை தோய்ந்த குரலில் முணுமுணுத்தாள்.

"உங்க ஐயா போயி எப்புடிச் சங்கடப்படுதாரோ... சோறு தண்ணி உடம்புக்கு ஒத்துக்கிடுதோ, இல்லையோ... காயிதத்தையும் காணலை. மணியார்டரும் வரலை..."

"வரும்... வரும்... இன்னும் ரெண்டு நாளைக்குள்ளே வந்துரும்..."

"மவராசி! ஒன்னோட வாக்கு பொன்னா இருக்கட்டும்..."

கவலையும் நம்பிக்கையும் கலந்த மனப்பிரார்த்தனையாக ஆவுடையின் ஏக்கக்குரல். பிரார்த்தனையின் ஆழத்தில் சோகக் கலக்கம்.

போஸ்ட்மேன் அண்ணாச்சி எப்பவுமில்லாத புதுமையாக வீட்டு வாசலில் நின்றார். "யம்மா... தாயி... ஆவுடை..."

"என்னண்ணாச்சி" ஈரக்கையை சேலையில் துடைத்துக்கொண்டே பதற்றமாக வெளியே வந்தாள்.

"இந்தா... இதுலே ஒரு கைநாட்டு வை..."

"எதுக்கு அண்ணாச்சி...?"

"சிவலிங்கம் அறநூத்தைம்பது ரூவா அனுப்பியிருக்கான்..."

"காயிதம் எதுவும் வரல்லியாண்ணாச்சி?"

"இல்லேம்மா. மணியார்டர் மட்டுந்தான்..."

வீட்டுக்கே றெக்கை முளைத்த மாதிரியிருந்தது. தரையில் கால்பாவாத சந்தோஷ அலை பாய்வு. மனசெல்லாம் கரைந்து, பாகாக வழிந்து, பஞ்சான மாதிரியோர் மிதப்பு. ஒரே ஆதாளி. பிள்ளைகளுக்கு ஒரே கும்மாளமும், குதூகலமும். ஆனந்தக் கூப்பாடு.

பஞ்ச காலத்தில் பணம். பைசா பார்க்கமுடியாத வறண்ட நாளில் அறுநூற்றைம்பது ரூபாய். காணக் கிடைக்காத புதையல் கையில் வந்த பரவசம்.

கடைக்காரரிடம் நல்ல பிள்ளையாகிவிடலாம். கடன் அடைந்து வழி நடக்கலாம். பிள்ளைகளுக்கு ஆக்கி அவித்துப் போடலாம். பிள்ளைத்தாய்ச்சி ராஜேஸ்வரி வாய்க்கு ருசியாக ஆசைப்பட்ட பலகாரம் வாங்கித் தரலாம்.

ஆகாயம் முழுக்க றெக்கையடிக்கிற நினைவுகள். ஒளிமயமான நினைவுகள். பூவாசமிக்க நினைவு மாலைகள்.

**கா**கிதமும் வந்தது, சிவலிங்கத்திடமிருந்து. இவன் சொல்லச் சொல்ல யாரோ எழுதிய கடிதம்.

நலம் விசாரிக்கிற சம்பிரதாயங்களைக் கடந்து, “நீ நல்லாயிருக்கீயா...” “நீ நல்லாயிருக்கே இல்லே” என்று ரெண்டு மூணு இடங்களில் விசாரிப்பு. அந்த விசாரிப்பு களில் தெரிகிற அவனது ஆத்ம பிரியம்.

புல்லரித்துப் போனாள் ஆவுடை. சிவலிங்கத்தையே எண்ணி எண்ணி மாய்ந்தாள்.

அப்புராணி மனுசர். அடுத்த ஊரைப் பார்த்தறி யாதவரு... எப்படி மனச்சங்கடப்படுகிறாரோ... என் னென்னமெல்லாம் நினைத்து மருகித் தவிக்கிறாரோ...?

இப்படியான நினைப்புகளிலும், பணம் வந்த சிறகடிப்புகளிலும் நாளும் பொழுதும் நகர்ந்து போக... தமிழ் மாசப் பிறப்பைக் கவனிக்காமல் விட்டுவிட்டாள்.

மாசக்கடைசியில் அவள் குளித்திருக்கணும்.

ஆகவில்லை.

அவளுக்குள் பகீரென்றது. கண்ணுக்குத் தெரியாத மாய அரிவாளால் அடிவயிற்றை வகிர்ந்த மாதிரியோர் திகில். கிலி. உள்மனசுக்குள் மாரடிப்பது போன்றதோர் சிறகடிப்பு.

என்ன செய்ய, ஏது செய்ய?

யோசனையும் கவலையுமாக இருபது நாளாகி விட்டது. நாவில் வழுவழுப்பு. விளக்கெண்ணெய் குடித்த மாதிரியோர் குமட்டல். ஏழு பெற்றவளுக்குத் தெரியாதா?

ஆவுடைக்குள் அதிர்ச்சிப் பரவல்.

ஐயய்யோ... நா என்ன செய்வேன்? ஊரு சிரிச்சிருமே... உறவு சிரிச்சிருமே... கேவலக் கூத்தாகிப் போச்சே...

பரிவும் பரிதவிப்புமாக நெகிழ்ந்ததற்கு வந்த வினையா?

'அடக்கிரகசாரமே... இப்ப நா என்ன செய்ய?"

அவள் முகம் கறுத்தது. மனசுக்குள் மருட்சி. பயஇருட்டு.

காலில் புண், முதுகில் கட்டியென்றால் யாரிடமாவது சொல்லிப் புலம்பலாம். மருந்து விசாரிக்கலாம்.

இதற்குப் போய் எப்படிக் கேட்க? கேட்பதே கேவலமில்லையா? மூத்த மகளுக்குத் தலைப்பிரசவம் நடக்க இருக்கும்போது, கருக்கலைப்புக்கு வழி கேட்டால்... அது இழிவில்லையா?

கேட்டால்... 'கொழுத்த சிறுக்கி' என்று உள்ளுக்குள் ஏளனமாகச் சிரிப்பார்களே...

குழப்பமும் திகைப்புமாகத் தவித்தாள். அதை அறுக்கிற மாதிரியோர் சத்தம், தெருவில்.

"ஐயய்யோ... பாதரவே! மேலத்தெரு ராசப்பன் மாண்டுட்டானாமே..." ஒரு பெண்ணின் அபாயக் குரல், அழுகைக் கதறல்.

பதறிப்போய் வெளியே வந்த ஆவுடை.

"அடக் கிரகசாரமே... இன்னிக்குக் காலையிலேகூட டீக்கடைப் பக்கத்துலே பீமன்கணக்கா நின்னாரே... எப்புடிச் செத்தாரு...?"

ஆவுடையின் குரலில் பதைப்பும், பரிதவிப்பும்...

"அரளிக்கொட்டையை நசுக்கித் தின்னுதானாம்..."

"அப்படிச் சாகுற அளவுக்கு அந்தப்பாவிக்கு என்ன தும்பம்?"

"நேத்து அவன் பொண்டாட்டியை சீண்டியிருப் பான் போலிருக்கு. பொண்டாட்டியும் எணங்கிட்டா ளாம்..."

"ம்?"

"சமைஞ்ச மக பாத்துட்டாளாம்... சமைஞ்ச புள்ளையை வீட்லே வைச்சுக்கிட்டு அப்படிச் செய்ஞ்

சுட்டோமேன்னு குன்னிப் போய்ட்டானாம்... கூசிப் போய்ட்டானாம்..."

"அடக் கொடுமையே..."

"மூத்த... மக பெத்த புள்ளைக்கு தொட்டில் கட்டிக் குடுத்துட்டு தான் பெத்த புள்ளைக்கு தொட்டில் கட்டுறதுக்கு சேலை கேக்குற கூச்ச நாச்சமில்லாத பொம்பளைகள்லாம்... 'உதுத்துன கழுதை ஊருக்கு பெரிய கழுதை'ன்னு தெனாவட்டாத் திரிஞ்சிக்கிட்டு இருக்குக... இந்த ஆம்பளை இதை ஒரு 'குத்தம்'னு நெனைச்சு வெட்கப்பட்டுப் போய்... அரளிக்கொட்டை யிலே உசுரை மாய்ச்சுக்கிட்டான். இதெல்லாம் கொடுமைதானே...?"

ஆவுடைக்கு 'சுருக்... சுருக்'கென்று உறுத்துகிறது மனமுள்.

உதிர்த்துன கழுதை ஊருக்குப் பெரிய கழுதையாக, மானங்கெட்டவளாக நானா? ராஜேஸ்வரிக்கு தொட்டில் கட்டிக் தரும்போதே... என் வயிற்றிலும் மழலைச் சுமையா? தாங்குமா? கேவலமில்லையா?

ஆவுடை மருகித் தவித்தாள். குட்டி போட்ட பூனையாக நிலை கொள்ளாமல் துடித்தாள்.

முகத்தின் இருளைப் பார்த்து ராஜேஸ்வரிகூடக் கேட்டாள். "என்னம்மா? ஏதாச்சும் மனக் கவலையா?"

ஈரமனசோடு மகள் கேட்ட கேள்விக்குக்கூட, எரிந்து பதில் பேசினாள்.

"மனக்கவலையென்ன... மனக்கவலை? மண்ணுக் குள்ளே போற கவலைதான்" அம்மாவின் தீப்பதிலில் வாயடைத்துப் போனாள் ராஜேஸ்வரி.

ஊமை கண்ட கனாவாக அவளுக்குள்ளேயே குமைகிற நமைச்சல். ஆவுடை தவித்தாள்.

"அடியே மூத்தவளே..."

"என்னம்மா...?"

"நீ வீட்டைப் பார்த்துக்க. நா நாராயணசாமி நாயக்கர் பம்ப் ஷெட்லே போய் துணிமணிகளை துவைச்சிட்டு வந்துருதேன்."

"ஆட்டும்மா..."

ரப்பர் வாளி நிறைய துணிமணிகளைத் திணித்து தலையில் வைத்துக்கொண்டு நடந்தாள் ஆவுடை.

ஆவுடைக்குள் படபடப்பு. செய்ற காரியம். தப்பா, சரியா? நியாயமா, அநியாயமா? தெரியவில்லை. இங்கிட்டும் அங்கிட்டுமாக பாய்கிற நினைவுகளின் கண்ணாமூச்சி.

வாய்க்கால் தண்ணீரில் அவசரம் அவசரமாகத் துவைத்தாள். குளித்தாள். துணிக்குள் மறைத்துக் கொண்டு வந்திருந்த பீர்க்கை நெற்றுகளை உடைத்தாள்.

கரிய மினுமினுப்பாக விதைகள். மண்ணுக்குள் நனைத்தால் உயிர் பெறும் முளைகள். கொடி வீசி பூத்தால் நூறு நூறு காய்கள். லட்சம் லட்சம் விதைகள்.

வயிற்று உயிரை விரட்டுகிற அழிக்கிற விதைகள்.

நசுக்கினாள், கல்லால் தட்டினாள். நைய நறுங்கத் தட்டினாள். நீரில் கலக்கிக் குடித்துவிட்டாள்.

குடிக்குமுன் யோசிக்கவேயில்லை. 'கழிந்தால் போதும்' என்ற ஒரே குறி. கேவலத்திலிருந்து தப்பித்தால் போதும் என்ற வெறி.

வீடு வந்து சேர்வதற்குள்.

வயிற்றுக்குள் காந்தல், குத்திச்சரிக்கிற வலி. எதையோ உடைத்து நொறுக்கித் திரவமாக்குகிற எரிச்சல். வயிறு முழுக்க திகுதிகுவென்று எரிந்தது.

'அலமுக்கிழவி சொன்னது சரியாத்தனிருக்கு. புடுங்கிக்கிட்டு வருது. கழிஞ்சிடும். மழலைச் சுமை ரத்தமாகி வெளியேறிடும்.'

வலியைத் தாங்கிக்கொண்டே சந்தோஷப்படுகிற ஆவுடை.

அறுத்துக்கொண்டு வந்தது. முண்டும் முடிச்சுமாக, சதை இணுக்குகள் கலந்த ரத்தமுமாக அறுத்துக் கொண்டு ஊற்றியது.

கருவின் உயிர் மட்டுமா, ஆவுடையின் உயிரும்தான்.

ரெண்டு பாவாடை மாற்ற முடிந்தது ஆவுடை யினால். அப்புறம் முடியவில்லை. உள்திண்ணையில் படுத்துவிட்டாள்.

"யம்மா... என்னம்மா... யம்மா..."

ராஜேஸ்வரியின் பதற்றக்குரல்.

"யம்மா..ய்.. யம்மா...ய்" அழுகிற மற்ற பிள்ளைகள். சொல்ல முடியாத அழுகை. வாழ்வின் அழுகை. இழப்பை எண்ணிய அழுகை.

'வவுத்தைவுட்டு சனியன் கழியுதே' என்று சந்தோஷப்பட்ட ஆவுடை, இப்போது பதறினாள். பயத்தின் பகீரிடலில் நெஞ்சு தகித்தது. எதையோ ஆவிப்பிடிக்கிற தவிப்பாக உயிர்.

'ஐயய்யோ... புள்ளைகளையும் கண்ணு முழியாத புருஷனையும் வுட்டுட்டுப் போகப் போறோமா?'

இந்த நினைவின் கிலியில் நனைந்து நடுங்குகிற மனசு.

மனசின் பதற்றத்தில் மூடுகிற கண்களின் அயர்ச்சி. சோர்வு, கண்ணுக்குள் சூழ்கிற இருட்டு.

இருட்டின் பயத்தில் இமையைத் திறக்கத் துடிக்கிற ஆவுடை. இயலவில்லை. இமை மூடலின் இருட்டில் அவள் உணர்வே மங்கி மறைய...

ஜன்னி கண்டு உடம்பு வெட்டத் துவங்கியது.

வீடு முழுக்க நிரம்பிய சாவின் இருட்டை பிள்ளை களின் அழுகையும், கதறலும் அகற்ற முடியவில்லை.

---ஆனந்தவிகடன் 29-7-2001

# மாரியம்மாள்

இன்றைக்கு வெயில் ரொம்ப ஜாஸ்தி. சித்திரை மாசம். அக்கினி நட்சத்திரம், வெயில் ஜாஸ்தியாகத்தான் இருக்கும்.

அப்பவும் இந்த வெயில், ரொம்பக் கடுமை. கன்னக் கதுப்புகளில் தீயாகக் குத்துகிறது. நடுமுதுகில் தீக்காந்தல்.

சடையாண்டி ஆடுகளைச் சுண்டி பத்தினான். ஆட்டுக்கம்பால் அடித்தான். "ஹா...ய்க், ஹா...ய்ய்க்" என்று கத்தி விரட்டினான். செம்மறிகள் ஒன்றுடன் ஒன்றாக உரசிக்கொண்டும் இடித்துக்கொண்டும் நகர்ந்தன. காயடிக்காத கிடாய் திருகலான கொம்பும் காமக் கதறலோடும் ஆடுகளைத் துரத்தியது. பாடாய்ப் படுத்தியது. அதன் மேற்பல்லிளிப்பு.

சடையாண்டி பொழுதுக்காலைப் பார்த்தான். சாயங்காலப் பொழுது. சந்தனப் பொழுது, சாந்த மாகாமல் தகிக்கிறது. பார்க்கும் கண்ணைக் கூச வைக்கறது.

"இன்னிக்கு 'மழை, கிழை' வந்தாலும் வருமோ...?"

தட்டான்கள் பறக்கவில்லை. மழைக்குறி சொல்லவில்லை. கரிச்சான், கட்டெறும்புகள் பதறி ஓடவில்லை.

சடையாண்டிக்குள் யோசனை. ஆடுகளைப் பட்டியில் கொண்டுபோய் அடைக்கணும். குட்டிகளுக்கும் குட்டி போட்ட ஆடுகளுக்கும் ராப்பாட்டுக்குக் கொழை வேணும். ஆடுகளை அடைச்ச மாயத்தில் கொழை ஒடிக்கணும். 'லொாக், லொக்'கென்று ஓடணும்.

'உஸ்ஸ்'ஸுன்னு உட்கார முடியாது. நீட்டி நிமிர்ந்து மல்லாக்க சந்தோஷமாகப் படுக்க முடியாது. மரத்துப் போய் விறைப்பேறிக் கிடக்கிற எலும்புகளை—நரம்புகளை—தளரவிட நேரமிருக்காது. ஓய்விருக்காது.

"ச்சேய்ய்க்" என்று மனசு கிடந்து வெறுத்தது. கசந்து சலித்தது. "மனுசக் கழுதை பாப்பானா... ஆடு மேய்க்குற இந்தச் சோலியை? சனியன் பிடிச்ச இச்சிலாத்தி..."

சடையாண்டிக்குள் குமுறிக் குமைந்த கோபம், சேட்டை பண்ணிய கிடாய்மேல் பாய்ந்தது. ஆட்டுக் கம்பால் நடுநெற்றியில் 'டபா'ரென்று அடித்தான். குறிபார்த்த கோப அடி.

"ம்ம்க்க்ம் மேய்ய்க்..."—வலியோடு கதறிய கிடாய்.

வேலிக்குள் ஒதுங்குகிற கள்ளக்கறுப்பை நோக்கி ஒரு கல்லைவிட்டான். மிளகாய்த் தோட்டத்துக்குள் 'விழுந்து' விட்ட மூக்கு வெள்ளையை நோக்கி ஒரு கல் பறந்தது.

ஆடுகளைப் பட்டிக்குள் அடைத்து முடித்தான். சதுரவளைவு. கம்புகளை ஊன்றி, மஞ்சணத்திவரிச்சிகளைக் குறுக்கில் போட்டு, நார்க்கட்டு போட்டு, காய்ந்த முள்கவைகளைச் சாத்தி...

சாணமும் மூத்திரச் சுவடுமாகக் கிடக்கும் பட்டி யின் வடபுறத்தில், ஒரு கூரைச் சாய்ப்பு. மழைத் தண்ணீருக்கு ஆட்டுக்குட்டிகள் ஒதுங்கிக் கொள்ளும்.

கூரைச்சாய்ப்பின் அடியில் சுவரிலிருந்த சுள்ளா ணிக்குச்சிகள். அதன்மேல் கிடந்த வாடிய கொழை களை, கூண்டுக்குள் அடைப்பட்டுக் கிடந்த குட்டி களுக்குக் கட்டினான்.

அப்பா...டி! வேலைச்சனியன் முடிந்தது. ஆட்டுக் கம்பை எரிச்சலும் சீறலுமாய் மூலையில் எறிந்தான். சுள்ளாணிக்குச்சியில் தொங்கிய கொச்சைக் கயிறை எடுத்து, இடுப்பில் பெல்ட் மாதிரி கட்டிக்கொண்டான். இடுக்குவழியே தலையை விட்டு, வெளியேறிவிட எத்தனித்த ஒட்டைமூக்கு. அதன் மூஞ்சியில் சப்பென்று ஓர் அப்பு அப்பினான். கோபத்தின் வடிகால்.

பதறிக் கதறிய அதன் செருமலில் தெறித்த மூக்குச்சளி, இவனது இடுப்பில் வந்து அப்பியது.

“அடச்சீ... ய்ய்...” என்று அருவருப்பில்லாத சள்ளை யோடு இடுப்புக் கயிற்றால் அந்தச் சளியை வழித்தான்.

பட்டியின் படல்கதவைச் சாத்தினான். கம்பிக் கொக்கி போட்டான்.

வெயில் இன்னும் தகிக்கிறது. வீடுகள், மரங்களின் நிழல்கள் நீளநீளமாய் தரையில். மிச்சத் தரையில் மஞ்சள் வெயில், ஐந்து மணிக்குக் குறையாது. அப்பவும் வெயில் அப்புகிறது.

நா வரள்கிறது. குடல்வரை உலர்ந்துவிட்டது. நாக்கில் கட்டியாக எச்சில் திரள்கிறது. ஆடுகளிடம் கத்திக் கத்தி விட்ட உயிர். அதட்டி அதட்டி உலர்ந்த நெஞ்சு.

வீட்டுக்குப் போனான். அம்மா அடுப்பங்கரையில் புகையோடு அல்லாடிக் கிடந்தாள்.

"என்னடா, இம்புட்டு வெருசா வந்துட்டே?"

"வகுறு எடுத்துருச்சுல்லே? வளைச்சுப் புடிச்சு மேய்ஞ்சிருச்சு. ஓய்ஞ்சுபோன பருத்திக்காடு. புகுந்து வெளையாடிருச்சில்லே?"

"ஓய்ஞ்சுபோன காட்லே காய்ஞ்சுபோன பருத்திச் செடிகதானே இருக்கும்...? மேய்றதுக்கு என்ன கொழை இருந்துருக்கும்...?"

"இல்லேம்மா... ரொம்பக் கொழை இருந்துச்சு..."

இவனே தண்ணீர்ச்சாலுக்குப் போனான். தண்ணீர் முகர்ந்து குடித்தான். தாகம். அடிவயிறுவரைக்கும் தாகம். ஆவல் ஆவலாகக் குடித்தான். நெஞ்செல்லாம் கோடு கோடாக நீர்வழிந்தது.

"எங்கடா பெறப்பட்டுட்டே....?"

"குட்டிகளுக்குக் கொழை ஒடிக்கணும்லே...?"

"சித்தே இரேண்டா... சடை..."

"என்னம்மா...?"

"காபி போடுதேன். குடிச்சிட்டுப் போயிரு ராசா..."

"ஆட்டும்மா..."

"இந்தா...டா..."

நீட்டிய அம்மாவின் கையில் ரெண்டு முறுக்கு. தாய்மையின் நெகிழ்வு. பாசத்தின் உரு. மஞ்சள் சுருள்.

காட்டில் காய்ந்துபோய்க் கிடந்த சடையாண்டி, ஆவல் பறப்போடு வாங்கிக்கொண்டான். வாங்கிய

வேகத்தில் வாயில் போட்டு அமுக்கினான். திங்கத் திங்க ருசியாக இருந்தது. ஆசையாக இருந்தது.

"இம்புட்டுத்தானா...? இன்னும் இல்லியா... ம்மா...?"

"துட்டு அம்புட்டுத்தான் இருந்துச்சுப்பா..."

காபியைக் குடித்து முடித்தான். வயிறு நிறைந் திருந்தது. அம்மாவைப் பார்த்துப் பேசியதில், சடையாண்டியின் மனசு ததும்பியிருந்தது. டயர் செருப்பு 'டடப், டடப்'பென்று லயத்துடன் சத்தமிட, வேகவேகமாக நடந்தான். மடித்துக் கட்டிய கைலிக்கும் வெளியே தெரிகிற டவுஷர். கறுத்த முகத்தில் காட்டுக் கொரு முரட்டு ரோமம். தடித்த உதட்டின் மகுடமாய் இளமீசை. நீலநிறப் பனியனில் சிற்சில கண்கள். தலையில் வட்டக் கட்டாகக் கட்டம் போட்ட துண்டு.

சித்திரை மாசத்து நிழலும் சுடுகிறது. சாயங்கால வெயிலிலும் ஒரு தகிப்பு. அருங்கோடை, கடுங்கோடை.

"என்ன இப்படி... தீயாப் பொசுக்குது வெயிலு...? மழை வருமோ...?"

ஊரைக் கழித்தான். ஓடைக்குள் விழுந்தான். கரை ஏறினான். வேலி மரங்களில் சரம்சரமாய்க் காய்கள் தொங்கின. வேப்பமரமே வெளிர் நிறமாக மாறியிருந்தது. அத்தனை பூக்காடு. பெரிய வாகைமரம் இலை, காய் எல்லாம் பழுத்து, உலர்ந்து தங்கநிறமாகத் தோன்றியது. காற்றின் சலனத்தில் நெற்றுகள் முழுவதும் சலங்கை மணிகளாக் கலகலத்தன.

தித்திச்செடியில் கரட்டான் நின்றது. பனைமரத்தி லிருந்து நீலநிறப் பனங்காடை 'கர்ர்ர்'ரென்று பறந்தது.

சடையாண்டியின் திரேகமெல்லாம், ஊற்று எடுத்த கிணற்றுச் சுவர்போல... வியர்வைக்காடு. வேகவேகமாக நடந்தான். முகத்தில் கண்டமேனிக்கு வழிகிற நீர்க் கோடுகள். வியர்வை கசியும் கருந்திரேகத்தில் காந்தல். வெக்கையின் தகிப்பு.

வியர்வை நசநசப்பு, சட்டென்று சுகமாக மாறியது. காற்றின் மென்தழுவலில் பரவசமாகியது. சட்டென்று சூறாவளிக்காற்று எழுந்து, தூசிச் சுழலைச் சுழற்றியது. பழுத்த வேப்பிலைகள் காற்றில் மஞ்சள் இறகுகளாக மிதந்தன. ஈரப்பதமான வேகக்காற்று.

புழுதியை அள்ளிப் பரத்திய சூறைக்காற்று. சட்டென்று காணாமற் போயிருந்த வெக்கையை உணர்ந்தான், சடையாண்டி. அண்ணாந்து ஆகாயத் தைப் பார்த்தான்.

உப்புமூலை முழுக்கக் கர்ப்பமேகங்கள். தேன் தட்டாக நகர்கிற கருமேகங்கள். 'பளீர், பளீ'ரென வெட்டிச் சரிக்கிற மின்னல்கள். வெடித்து, ஒலியதிர் வோடு நகர்கிற முழக்கங்கள்.

"அடியாத்தி... மழை வந்துருச்சே..."

அவனுள் அதிர்வின் பரவல்.

"கோடைமழை கொணத்தைக் காட்டிருச்சே. அரவ மில்லாம வந்து வளைச்சிருச்சு..."

அவன்மீது சட்டென்று விழுந்த கனத்த மழைத்துளி. கல்லெறி மாதிரி வந்து விழுந்த முரட்டுத் தூறல். தூறல்கள்.

தூறல் வந்தவுடன்... ஒப்பந்தம் போட்ட மாதிரி காற்று 'கப்சிப்' என்றாகிவிட்டது. இருளல்லாத மேக

நிழல், மழையிருட்டு, காற்று நின்றவுடன், பெரும் பாட்டமாக மழை. 'சட்டச்சட... சட சட... சட்டச் சட சட'வென்று எடுத்த எடுப்பிலேயே முரட்டுப்பிடி. வெக்கைப் புழுதி ஈரவாசமாக எழுந்தது.

நடைமாறி, ஓட்டமாயிற்று. பாதைகளைத் தவிர்த்து, புஞ்சைகளின் குறுக்கில் நேரும் கூறுமாக ஓட்டம் பிடித்தான்.

காடு... அவனது கால்களின் உலகம். வசமாகிப் போன வழக்க உலகம். காலின் உள்ளுணர்வுகளுக்குப் பழகிப்போன தோழமை உலகம். முள் விலகும். மண்கட்டி காலைப் புரட்டாது. கட்டை காலில் குத்தாது. 'பூச்சி, பொட்டு' ஒதுங்கிக்கொள்ளும்!

அறுபட்ட நீர்க்கயிற்றுத் துண்டுகளாக மழை. கனத்த ஊசிகளை அள்ளி இறைக்கிற மாதிரி இறங்குகிற கோடைமழை. மேக முழக்கங்கள் அடிவயிற்றில் அதிர்கின்றன. மின்னல்களின் ஒளிவீச்சு, அடிமனசில் சுடுகின்றன. வந்து அப்புகிற பயம். "அர்ச்சுனன் பேரு பத்து... அர்ச்சுனன் பேரு பத்து... அர்ச்சுனன் பேரு பத்து!" தன்னை மீறிய முணுமுணுப்பு.

மின்னலும் முழக்கமும் வரும்போதெல்லாம் பயத்தில் அதிர்கின்ற சடையாண்டியின் உதடுகள், அபயம் தேடி உச்சரிக்கும். அச்சமழையில் நனைந்து நடுங்குற உள்மனசு.

"ஆத்தா... மாரியாத்தா... ஆடு குட்டிக்குப் பஞ்ச மில்லாம, நோய் நொடியில்லாம காப்பாத்துற மாரி யாத்தா... நீதான் என்னையும் காப்பாத்தணும்..."

புஞ்சை போய்ச் சேர்ந்தான். அகத்திக் கொழையை கொப்புக் கொப்பாக ஒடித்தான். மழைநீர் கண்ணில்

அறைகின்றது. கன்னக்கதுப்பில் ஊசியாகக் குத்து கின்றன.

ஆமணக்குக் கொழையை ஒடித்தான். சவுண்டல் கொழை ஒடித்தான். வேகவேகமான ஒடிப்பு. வாய்க்கால் வாய்க்காலாகப் பாய்ச்சல். டயர் செருப்பெல்லாம் சகதி. கனமாக அப்பிக்கொண்ட சகதி. நடக்கவே முடிய வில்லை. இயங்கவே முடியவில்லை.

மழையே ஒரு தொல்லைதான். நச்சரிப்புதான். மழை வந்தாலே, வேலை ஜோலி கெட்டுப் போகும். எல்லாம் முடங்கும்.

டீக்கடையில், ஊர்மடத்தில் ஆட்கள் கூடிக் கிடப் பார்கள். ஜேஜே என்று பேச்சும் சிரிப்புமாகக் கிடக்கும்.

‘திடுதிப்’பென்று மழை வந்துவிட்டால்... அம்புட்டுத் தான்.

கல்லெறிபட்ட குருவிக்கூட்டமாக ஆட்கள், ஆளுக்கொரு திசையில் ‘ஜிவ்வ்’வென்று பறப்பார்கள்.

“ஐயையோ... மாட்டைத் தொழுவுலே கட்டணுமே... மழையிலே நனையுமே... நாசமாய்ப் போற மழை...”

“புல்லுக்கட்டு வெளியே கெடந்துச்சே... நனைஞ்சு நாசமாயிருமே...”

“காயப்போட்ட வெறகு நனைஞ்சிருமே...”

ஆளுக்கொரு வேலை... அவரவருக்கான கதறல்... ஊர்மடத்தில் மிச்சமாயிருக்கிற ஒன்றிரண்டு கிழடுகள்.

“பாவ வெயில்லே பயமில்லாம அலையுற ஜனங்க. தரும மழைக்குப் பயந்துபோய் அதது்க வீட்டுக்குள்ளே போய் பம்மிக்கிடுதுக. நல்ல கூத்துதான்...”

ஜனங்களின் மனசுகளையும் மழையையும் சொல்லிச் சொல்லிச் சிரிப்பார்கள் அந்த வேலையற்ற கிழடுகள். ரசிப்பார்கள். ரசித்து, லயித்து மழையைப் பற்றியே பேச்சு, ஒரு பாட்டம் நடக்கும்...

ஒடித்து ஒடித்துப் போட்ட கொழையெல்லாம் சகதியாகிவிடக்கூடாதே என்று சடையாண்டி, புஞ்சைப் பொழியில், அருகம்புல்லின்மேல் போட்டான்.

இடுப்புக் கயிற்றைப் பொழியில் விரித்து, அகத்திக் கொழையை அடுக்கினான். காம்புக் கயிற்றில் இருக்கும் கொழை இடப்பக்கம் கிடக்கும். அப்புறம் வலப்பக்கம் கொழை கிடக்கிற மாதிரி அடுக்கினான். ஆமணக்கு, சவுண்டல் கொழைகள். ஒன்றின்மேல் ஒன்று.

ஒரு பெரிய கட்டாகும். முதுகில் தெறிக்கிற மழைத் துளிகள். பாத்தித் தண்ணீருக்குள் குமிழிடுகிற மழை. ஓடைகளில் போகிற காட்டுத் தண்ணீர். எங்கும் மழையின் சத்தம். ஈரக்காற்று.

மழை இன்னும் ஓய்கிற மாதிரி இல்லை. உப்புமூலையில் (தென்கிழக்கு) மேகம் பெருகிக் கொண்டேயிருக்கிறது. மழையிருட்டோடு, மாலை இருட்டும் சேர்ந்து கவிகிறது.

ஓரிடத்தில் தீப்பிடித்து, தெறித்து நரம்போடுகிற மாதிரி தாறுமாறான மின்னலின் அச்சுறுத்தல். 'சட்டேர்'ரென்று விழுகிற இடி. அடிமனசில் கிலி. அடிவயிற்றைக் கவ்வுகிற பயம்.

"அர்ச்சுனன் பேரு பத்து... அர்ச்சுனன் பேரு பத்து..."—அச்சத்துடன் முணுமுணுத்துக் கொண்டான்.

'இடியேதான், இது. பக்கத்துலேதா விழுந்திருக்கும். எங்க விழுந்ததோ... என்னாச்சுதோ... யாரு தலையிலே விடிஞ்சதோ...?'

போன வருஷம். இதே மாதிரி பங்குனியில் கோடைமழை பெய்தது. ஒத்தக்கடை. பக்கத்துக் கிராமம். மழை முடிந்தபிறகு பார்த்தால், ஆடுகள் கத்தலும் கதறலுமாக வீடு வந்துவிட்டன. ஆட்டுக்காரன் வரவில்லை. ஊருக்குள் செய்தி தீயாகப் பரவியது.

"ஆடுக வந்துருச்சு... ஆளு வரலை..."

"என்னாயிருக்கும்...?"

"எங்கயும் ஓடிட்டானா...?"

உறவுக்காரர்கள் பதறினர். பதைத்தனர். தேடத் துவங்கினர். ஆடுவந்த திசைநோக்கி மழைச் சேற்றுக்குள் நடந்தனர். ஓடைக்கரைக்கு மேற்கில் ஆட்டுக்கம்பு கிடந்தது. செருப்புகள் தனியே கிடந்தன. ஆட்டுக்காரன் தண்ணீரில் நனைந்த கரிக்கட்டையாக... கன்னங்கரே லென்று விறைத்துக் கிடந்தான்.

"ஐயையோ... ஆத்தா..."—ஒரு பெண்ணின் கதறல். "இடி விழுந்துருச்சே... எம்புள்ளையைக் கருக்கிருச்சே..." என்ற அந்தப் பெற்ற வயிற்றின் கொதி குரலில்—அலறலில்—ஊரின் இதயமே நடுங்கியது. உள்ளிறங்கி ஊடுருவிப் பாய்ந்த அதிர்வில், பதறிப் பதைத்தது கிராமத்து ஜனம்.

"அடக் கொடுமையே... ஆட்டுக்கு இரைபாத்து இரை பாத்து காட்டிலேயே திரிஞ்சவனுக்கு, இப்புடியா சாவு வரணும்...?"

*"காடே கதின்னு காலோயாம திரிஞ்சவனுக்கு, காடே மயானமாயிருச்சு... பாவம்!"*

*"இடி வுழுந்ததுலே கரிக்கட்டையா எரிஞ்சுட்டானே..."*

*"கொட்டுற மழையிலேயும் ஒடம்பு கரிக்கட்டையா கருகுதுன்னா... மின்னலு எம்புட்டு பவராயிருக்கணும்...?"*

*வியப்பும் ஆச்சரியமும் ஊர்க்காரர்கள் நெஞ்சை நிரப்பியது. அந்த நெஞ்சுகளை உலுக்கிற்று, அந்தத் தாயின் அழுகுரல். மாரடித்துக் கதறிய பாசக்குரல்...*

*கயிற்றின் இரு நுனிகளையும் பிடித்தான். சடையாண்டி இறுக்கினான். முழங்காலைப் போட்டு அமுக்கி, இறுக்கி உருவா முடிச்சுப் போட்டான்.*

*மேகம் பரவியிருந்தது. தென்திசை பூராவும் மழை இறங்கி மறைத்திருத்தது. காற்றில்லாமல் நின்று பெய்த மழை. சடசட சடவென்று ஒரே சீரான சத்தம். தரைத் தண்ணீரில் மழைத் தண்ணீர் விழுகிற 'சல, சல, சல' சத்தம். தவளைகளின் மகிழ்ச்சிக் கூப்பாடு. 'வித்தெடு, விதையெடு' என்கிற தவளைச் சத்தம்.*

*அவன் முழுசாக நனைந்தான். நனைவதைப் பற்றிக் கவலைப்படவேயில்லை சடையாண்டி. வெயில் மாதிரிதான் மழையும் அவனுக்கு. 'தொப்தொப்'பென்று நனைந்திருந்தான். கட்டி முடித்த கொழைக்கட்டைப் பார்த்தான்.*

*'கனமாயிருக்குமோ... தூக்கிர முடியுமா...?'*

போன ஐப்பசி மாசம். அடைமழை ஊற்றிக் கொண்டிருந்தது. சடையாண்டியால் ஆடுகளைப் பட்டியை விட்டு வெளியேற்றவே முடியவில்லை. அத்தனை ஆடுகளுக்கும் இரை தேடிப் போட்டாக வேண்டிய கூடுதல் பாரம் சடையாண்டிக்கு.

தெரிந்தும் தெரியாமல் அடுத்தவர் புஞ்சைகளி லெல்லாம் கொழை ஒடித்தாக வேண்டிய கட்டாயம். களவு. கொழைக்கட்டோடு பயந்து பயந்து, பாதை களைத் தவிர்த்துவிட்டு, புஞ்சைகளின் குறுக்காகப் பாய்ந்து வந்தான்.

அவனை ஏதோ ஒன்று திரும்ப வைத்தது. அவனுள் ஒரு குறுகுறுப்பு. திரும்பி மேற்கில் பாதையைப் பார்த்தான். கண்ணில் விழுகிற மழைத் தூறல். முகத்தில் வழிகிற தண்ணீர். மழையின் சாம்பல் நிறத்திரை.

இத்தனையையும் தாண்டிப் பார்த்தால்—பாதையில் ஒரு காளை மாடும், ஓராளும் அலங்கோலமாக விழுந்து கிடக்கிற விபரீதம். ஏதோ விபத்து. இடி, மின்னல்கூட இல்லையே...

சடையாண்டிக்குள் பதற்றம். அவனுள் குலை நடுக்கம். ஊருக்குள் ஒரே பாய்ச்சலாக வந்தான். பட்டிக்குள் கொழைக்கட்டைப் போட்டான்.

ஊருக்குள் தாக்கல் சொன்னான்.

“பாதையிலே ஒரு மாடும் ஆளும் கெடக்கு... யார்னு தெரியலே...”

“நீ கிட்டே போனீயா...? எப்படிக் கெடக்கு...?”

“உசுர் போய்த்தான் கெடக்கும்னு நெனைக்கேன்...”

அடைமழைக்குப் பயந்து வீட்டுக்குள் அடைந்து கிடந்த ஜனங்கள், பதற்றமும் பரிதவிப்புமாக மழைக்குள் வந்தனர். ஓட்டமாய் ஓடினர்.

“ஐயோ... யாரோ...? எந்த மவராசி மவனோ...?”

புலம்பலும் கதறலுமாகப் பதைப்போடு ஆட்கள். ஒரு வெள்ளைச் சட்டைக்காரர் நனைந்துகொண்டே, ஜனங்களை எச்சரித்துக்கொண்டு கூடவே வந்தார்.

“யாரும் மளமளன்னு மாடுகிட்டே போயிட வேண் டாம்... என்ன ஏதுன்னு பாத்துட்டுத்தான் அண்டணும்...”

அதோ மாடு, புடைப்பாகத் தெரிகிற வயிறு, பரத்திக் கிடக்கிற நாலு கால். பிரேத விறைப்பு. பக்கத்தில் வேட்டியும் துண்டுமாக விறைத்துக் கிடக்கிற ஆள்...

“ஐயையோ... பாத்தா... நம்ம சின்னமுத்து மாதிரி யில்லே தெரியுது...”

“யம்மாடி... அவன்தான்... ரெண்டு புள்ளைக. பச்சை மண்ணுக... அதுகளை விட்டுட்டுப் போய்ட்டானே...”

நெஞ்சிலடித்து ஒப்பாரி வைக்கிற பெண்கள். பதைப்பும் பதற்றமுமாக பின்தொடர்கிற ஆட்கள்.

பின்னாலிருந்து ஒரு குரல்... அபாயக் குரல்... பெருங்குரல்...

“கிட்டே யாரும் போவாதீக... கரண்டுக் கம்பி அ(று)ந்து கெடக்குற மாதிரி தெரியுது...”

“ஈரத்தரை, தண்ணி பூராவும் கரண்டு பரவி யிருக்கும்...”

“ஏய் மலைச்சாமி, நீ போய் டிரான்ஸ்ஃபார்மரை ஆஃப் பண்ணு...”

மழையின் ஊழிக்கூத்து. மின்சாரக் கம்பியை அறுத்து, மாட்டையும் மனிதரையும் பலிவாங்கிய பேய்க்கூத்து...

முக்கித்தக்கி கொழைக்கட்டைத் தூக்கினான். நெஞ்சுவரைக்கும் போயிற்று. அதற்குமேல் தூக்க முடியவில்லை. ‘தம்’ பிடித்து, மூச்சை நிறுத்தித் தூக்கினால்... நெஞ்சுக்கூட்டு எலும்பு நெரிபடுகிற மாதிரியோர் வலி. பின் முதுகு திருகுகிற மாதிரி ஒரு ரணம். மழையோடு மழையாக ‘தம்’ பிடித்து, எப்படியோ தலைக்குக் கொண்டு போய்விட்டான்.

மின்னல் முழக்கம் நின்று இருந்தது. மேகத்தின் கனம் குறைந்திருந்தது. மழையின் சடசடப்பு மட்டுப்பட்டு, சத்தமில்லாத ஊசித் தூறல்களாகி இருந்தது.

சடையாண்டிக்குத் தலைப்பாரம். பின்னங்கழுத்து திணறியது. நெஞ்சுக்கூடு மூச்சு முட்டியது. சகதியும் தண்ணீருமாகக் கிடக்கிற காடு... காடெல்லாம் நீர்க்காடு... மழைக்காடு...

பயந்து பயந்து காலெடுத்து வைத்தான் சடையாண்டி. மழையும் காடும் அவனுக்கு அத்துப்படி. பொந்து, விப்பு (தரையின் கீறல்)களில் இருந்த பாம்புகள், நட்டுவாக்கலிகள் மழைக்கு வெளியேறியிருக்கலாம். காட்டுத் தண்ணீரில் மிதந்து வரலாம்.

அவனுக்குள் திகில், கிலி... பூச்சி பொட்டு கடிச்சிருமோ என்ற அச்சம். முள், கிள் குத்திருமோ

என்ற பயம். வழுக்கி விழுந்து எலும்புகிலும்பு முறிஞ் சிருமோ என்ற நடுக்கம்.

நல்லவேளை!

வில்லங்கம் ஏதுமில்லாமல் ஊரை நெருங்கினான். நெருங்க நெருங்க, மனசுக்குள் ஒரு நெருடல்.

தூவானத்தையும் பொருட்படுத்தாமல் ஆட்கள் ஓடுகிற அவசரம்... புலம்பலும் கதறலுமாக, கையசைப்பு களும் தலைவிரிகோலமுமாகப் பெண்கள் ஓடுகிற பதற்றம்... நிழலுருவங்களாக மனிதர்கள்...

ஏதோ விபரீதம் நடந்துருக்கு...

தலைச்சுமை கனக்க வந்தான். ஊர் மொத்தமும் வடக்குத் தெருவில் வந்து குவிந்து நனைகிறது. என்னாச்சு...?

ரசிக்கவும் கவிதை எழுதவும் மழை என்ன பூவா...? ரசிக்கிற அழகுப் பொருளா...? பஞ்சபூதங்களில் ஒரு பூதம். ஈரமான மாரியம்மன். ரௌத்ரமான பத்ரகாளி. ஆக்கவும் அழிக்கவும் வல்லமையான ஆற்றல், மாசக்தி.

இதெல்லாம் தெரியுமா, ஆடு மேய்க்கிற சடை யாண்டிக்கு...? அவனுள் பதற்றம்.

"ஆட்டுக்குட்டிகளை, பயிர் பச்சைகளை, உசுர் களைக் காப்பாத்துற மழைத்தாயி, அழிமானமும் பண்ணு தாளே! தாங்கமுடியாத அழிச்சாட்டியம் பண்ணு தாளே..."

பதற்றத்தை மீறிய ஓர் எரிச்சலான எண்ணம். அவனுள் பரவுகிற கடுப்பு, கடுப்பில் கசிகிற முணுமுணுப்பு.

'வடக்குத் தெருவில் என்ன நடந்துச்சு...? என்ன விபரீதம்...? மழை பண்ணுன கூத்துதான்... என்னது...?'

இவனும் தெருவுக்குள் நுழைந்தான். தெருத்தண்ணீர் காலுக்கடியில் சளப்பிடுகிறது. இவனுள் தேள் கொட்டிய அதிர்வு.

மொத்த சனமும் இவன் வீட்டுக்குப் பக்கத்தில்.

"ஐயையோ... என்னாச்சு எங்க வூட்லே...?"

வீடு இருந்த இடம் வெறிச்சென்றிருந்தது. வீடு இடிஞ்சு போச்சா...? சுவர்கள் நைந்து, சரிந்து, கூரையும் விழுந்து போச்சா...? மழை பண்ணுன நாசக் கூத்தா...?

"ஐயையோ... அம்மா! அம்மாவுக்கு என்னாச்சு...?"

அவனுக்குள் பதைப்பு. மனசுக்குள் இறங்குகிற இடி. காலில் மின்சாரம் பாய்கிற பகீரிடல். உயிரின் ஆணிவேர் வரை பரவுகிற அதிர்வு.

இவனைப் பார்த்தவுடன்...

தலைவிரிகோலமாக, அழுது ஆர்ப்பரிக்கிற இவனது பெரியம்மா...

"ஐயா... ராசா... மோசம் போயிட்டமே... பூமிக்கே சோறு போடுற மழைத்தாயி, உங்கம்மா தலையிலே வந்து இடியா இறங்கிட்டாளே..."

தலைப்பாரம் கீழே விழ... உறைந்து போன அவனுக்குள் மனப்பாரம்... கரிக்கட்டையாகிப் போன அவனது மனசு.

---ஆனந்தவிகடன் 9-12-2001

ரூ. 3000 பரிசு பெற்ற
பவள விழா முத்திரை குட்டிச் சிறுகதை

# தாய்ரௌத்ரம்

அருங்கோடை. நாயுருவிச் செடிகூடக் காய்ந்து குச்சிகளாகி, பஞ்சத்துக்கு வளரும் சீமைக் கருவேலிகூட உயிரற்றுப் போய் நிற்கின்றன. ஒரு பச்சைப் பிறப்பே கண்ணில் தட்டவில்லை.

இண்டு கிடைத்துவிட்டது. ஒரு வேப்பமரத்தின் அடியில் கிடந்தது. பூமுள்ளோடு கூடிய பசிய இலை. தூதுவளையும்கூடத் தயார். வீட்டுக் குப்பைக்குப் பக்கத்தில் கண்டங்கத்தரி கிடைத்துவிட்டது.

காடெல்லாம் மானாவாரியாகக் கிடக்கிற துளசி தான் கண்ணில் தட்டவில்லை. குச்சிக் குச்சியாகக் காய்ந்து கருகிக் கிடக்கிற செடிகள்... காடெல்லாம் தேடிக் கால் ஓய்ந்துவிட்டது.

மகனுக்குச் சளி. நாலைந்து ஊசிகள், தினம் மூணுவேளை ட்யூப் மாத்திரைகள். ஒன்றும் பலனில்லை. நெஞ்சில் சளி. இளைப்பு. வறட்டு இருமல். சளியைக் கஷாயம்தான் வெளியேற்றும்.

துளசிக்காக நாலா காடும் அலைந்து சலித்துப் போனேன். எங்குமே கிடைக்காது என்ற நம்பிக்கைத் தளர்வு, ஓய்ந்து, விரக்தியில்...

‘செம்புக்குட்டி நாடார் புஞ்சைக்கரையிலே வாகைமரமும் வேப்பமரமும் தோப்பா கெடக்குமே...

அதோட நெழல்லே ஒண்ணு, ரெண்டு தொளசி உசு ரோட இருக்குமோ...?'

எனக்குள் ஓர் ஒளி. ஒளியில் உயிர் பெறும் நம்பிக்கை. 'துண்டைக் காணோம், துணியைக் காணோம்' என்று ஓடி மறைகிற விரக்தி. உற்சாக ஊற்று.

புதிய தெம்போடு நடந்தேன். மகனின் துயரம், சூறாவளியாகச் சுழற்றியடிக்கிற வறட்டிருமலில் வாடிவதங்குகிற சிறு பூ.

ஊரைக் கடந்து, காடுகரைகளைத் தாண்டி, ஓடையில் விழுந்து எழுந்து வெள்ளோடைக்கரை ஏறினேன்.

நிறைய மரம். மரநிழலில் பருத்திமார் படப்பு. நிறைய செடிக்காடு. பாலைவன ஊற்றாக... அதிசயப்பச்சை, புதர்ப் பச்சை. நிச்சயமாகத் துளசி இருக்கத்தான் செய்யும்!

ஆவலாக—உற்சாகத் துள்ளலாகப் பாய்ந்தேன். அம்பெனப் பாய்ந்து வந்த கரிச்சான்... மூஞ்சியில் வந்து உரசுகிற மாதிரி நெருக்கத்தில் வந்து விலகுகிற கரிச்சானின் வீறிடல்.

அதன் நெருக்கமான பறப்பில் வந்த காற்று செவியில் பட, திடுக்கிட்டேன். ஒரு விபரீத வித்தியாசத்தை உணர்ந்தேன்.

'கரிச்சான் இம்புட்டுப் பக்கத்தில் வருமா...?' நான் வினோதமாக நினைக்கிறபோதே... மாறி மாறிப் பறந்து வருகிற கரிச்சான், விடாத வீறிடலில் ஒரு ரௌத்ரம். மூஞ்சியிலே வந்து மோதுகிற கரிச்சான். மனசுக்குள் பகீரிடல். பதற்ற அதிர்வு.

இன்னும் ரெண்டு எட்டு முன்வைத்தால்... மூஞ்சி யிலேயே மோதிக் கொத்திவிடும் போலிருந்தது, அதன் கோபப் பாய்ச்சல்கள். விடாத ரௌத்ர வீறிடல்... 'விர் விர்'ரென்று பாய்கிற அதன் சீற்றம்.

'கண்ணைக் கிண்ணைக் கொத்திருமோ?' பயமாக இருந்தது. அடிவயிற்றில் ஒரு பதற்றம். சத்தமில்லாமல் திரும்பிவிட்டேன்.

ரொம்ப நாளாயிற்று.

'இப்படியும் நடக்குடா...?' என்ற ஆச்சரியத்துடன் ஒரு பெரியவரிடம் நடந்ததைச் சொன்னேன்... நான் பயந்ததைத் தணிக்கை செய்துவிட்டு.

"கூட்டுல இருந்து அதோட குஞ்சு, தப்பித் தவறிக் கீழே விழுந்திருக்கும். யாரும் தூக்க வருவாகளோனு பதறும். அப்பேர்ப்பட்ட நேரத்துலே யாரையும் கிட்ட அண்டவிடாது..."

"கரிச்சானா...?"

"அதுமட்டுமல்ல... குட்டி போட்ட நாய், ஈண்ட பன்னி எல்லாமே அப்படித்தான். அது தாய்க்கோபம். கரிச்சான் கோபமில்லே..."

தியாகத்துக்கு உதாரணமான தாய்மைக்குள் இப்படியோர் ரௌத்ர முகமா...? காவல்தெய்வம் ரௌத்ரம் பழகுமா...?

எனக்குள் விலகாத பிரமிப்பு!

---ஆனந்தவிகடன் 18-11-2001

# அழகுமாயம்

அழகுமாயன் கூளப்படப்பில் சாய்ந்து கிடந்த சைக்கிளை உருட்டி முற்றத்தில் நிறுத்தினான். ஸ்டாண்ட் கிளிப் வேலை செய்யவில்லை. தாட்சண்யத்துக்குக் கட்டுப்பட்டு நின்ற சைக்கிள். அழகுமாயன் சைக்கிளை பரிதாபமாகப் பார்த்தான். தூசியும் துப்பட்டையுமாக மூடிக்கிடந்தது. துருவேறியிருந்தது. பழைய துணியால் பருவெட்டாகத் துடைத்தான். துடைத்துப் போகிற துருவா, அது?

'நம்ம பொழைப்பு மாதிரித்தான் சைக்கிளும்' என்று பெருமூச்சோடு நினைத்துக்கொள்கிற அழகுமாயன்.

கைக்கும் மெய்க்கும் துட்டு இல்லே. வேலிவெறகு வெட்டுற ஜோலிகூட கெடைக்கமாட்டேங்குது. ஒழைக்க திடமிருக்கு! வாரீயான்னு கூப்புட ஆள் இல்லே வேலையும் கூலியுமில்லாம கூலிக்காரன் குடும்பம் எம்புட்டு நாளைக்கு தாக்கு பிடிக்கும்? சண்டையும் சச்சரவுமா நாறுது.

யாரைப்பற்றியும் கவலைப்படாமல் காலைப் பொழுது சுறுசுறுவென்று ஏறுகிறது. பொழுது மாதிரித்தான் ஊர்ஜனமும். தண்ணியெடுக்க, சோறு காய்ச்ச, என்று பரபரத்துத் திரிந்தது. நிற்க நேரமில்லை, யாருக்கும்.

இசக்கி வந்து நின்றாள். அவிழ்ந்த பாவாடையை பிடித்திருந்தாள். பரட்டைத்தலை. உலர்ந்த முகத்தில் ஆவல் பறப்பு.

"ய்யா, என்னய்யா... சைக்குளு? வேலைக்கா?"

"இல்லேம்மா..."

பத்ரகாளியாத்தா திரு(வி)ழா வருதுல்லே? கரும்புக் கட்டு எடுக்கணும்லேய்யா?"

"துரும்புக்கே துப்புல்லே, கரும்புக்கட்டுக்கு எங்க போறது?"

"கருப்பட்டி முட்டாய்? காராச்சேவு?"

ஆசை ஆசையாய் பட்டியல் போடுகிற மகளைப் பார்த்த அழகுமாயனுக்குள் கவிகிற இருள் சோகம்.

பதில் சொல்ல வாய் வராத மனத்திணறல். பாசத் துக்கும், கோலத்துக்கும் இடையிலுள்ள தகராறு.

ஆசை ஆசையாய் வாங்கித்தர ஆசைப்படுகிற பாசம். வக்கற்ற கோலம். என்ன செய்ய? ஏது செய்ய? பிள்ளைக்கு என்ன பதில் சொல்ல?

வருத்த நிழல் படிந்த குழப்ப முகத்தோடு இசக் கியைப் பார்க்கிற அழகுமாயன். அலைபாய்கிற கண்கள், மனக்கனத்தோடு சேர்கிற தலைக்கனம். கிண்ணென் கிற நெற்றி. நேற்று குடித்த மப்பு. மப்பு எறங்குனாலும் மிச்சமாயிருக்குற மண்டையடி.

"ஏய் இந்தா... ஒஞ் செல்லமகா என்ன சொல்லுதா?"

"கரும்புக்கட்டு வேணுமாம்..."

"வாங்கிக் குடு..." வாசல்படியில் நிற்கிற வள்ளியம்மா.

"இஞ்சிப் பச்சடி கேக்குறா, செல்லமகா எசக்கி. நா தவுட்டுக்கு வழியில்லாம தவிக்கேன்..."

"குடிகார மனுசரை யாரு வேலைக்குக் கூப்புடுவாக?"

"குடிச்சா என்ன? ஒழைக்குறதுலே கொறை வைக்கலியே...?"

"குடிச்ச மப்புலே கண்ணுமண்ணு தெரியாம வளைச்சுப் புடிச்சு வைவே. ஓங்கிட்டே வாங்கிக் கட்டுனவுக எல்லாம் வேலைக்குக் கூப்புடாம, ஒன்னைக் கழிச்சுக் கட்டுவாக, இல்லே?"

"கட்டுனா கட்டிட்டுப் போவட்டும்."

"நட்டம் நமக்குத்தானே?"

வள்ளியம்மாவின் அமைதியான கோபம். அவனைக் கிழித்து உப்பு வைக்கிற விமர்சனம். அன்பும் பரிவுமாகக் கிழிப்பதால், அவனுக்குள் கோபம் வரவில்லை. ஆத்திரம் வரவில்லை. தன்னை நோக்கி உணர முடிகிறது. தனது தவறுகளைத் தானே உணர முடிகிறது.

'வாஸ்தவந்தான். குடிகாரப் பயலைக் கண்டா... பாம்பைப் பாத்த மாதிரி பதறிப்போய் ஒதுங்கிருவாக' என்று உள்ளுக்குள் உற்றுப் பார்த்து ஒப்புக்கொள்ள முடிகிறது, அழகுமாயனால்.

'சனியன்தான். விட்டுத் தொலைக்க நெனைச்சாலும் வந்து ஒட்டிக்கிடுதே குடிக்குற பயலைப் பாத்தா, கூடச் சேந்து கூத்தடிக்கத் தோணுதே... மனக்கொரங்கை கட்டிப் போட முடியலே. தெருவுக்கு நாலு ஒயின் ஷாப்பை தெறந்து வைச்சுட்டு, 'குடிக்காதே'ன்னு சொன்னா... கேக்குதா, கிறுக்கு மனசு?'

அவனைத் திட்டிக் கொண்டானா, ஒயின்ஷாப் திறந்த அரசாங்கத்தைத் திட்டிக் கொண்டானா... என்பதெல்லாம் தெரியவில்லை அவனுக்கு. அன்போடு

கண்டிக்கிற ஆத்மபங்காளியை குற்றஉணர்வின் குறு குறுப்போடு பார்த்தான்.

வண்டிப் பெடலைச் சுற்றினான். வீல் சுற்றியது. தலை சுற்றியாடிய நிலையில் சுற்றியது. ரிம் பெண் டாகியிருக்கிறது. பெடலைச் சுற்றச்சுற்ற... 'கொரட் கொரட்'டென்ற தகரச் சத்தம். செயின் கவரில் பெடல் தடி உரசுகிற சத்தம். மக்கார்டு மறை கழன்றுபோய், கலகலவென்று ஆடுகிறது. சைக்கிள், சைக்கிளாகவே யில்லை.

பிழைப்பு பிழைப்பாக இல்லை; மனுசன் மனுசனாக இல்லை; அரசு அப்பாவாக இல்லை... சைக்கிளும் சைக்கிளாக இல்லை. நல்ல கூத்துதான்!

தெருவில் முத்துக்கருப்பன் மஞ்சள்பை நிறைய சாமானோடு நடந்தான்.

"என்ன மாயண்ணே, திரு பூா வந்துருச்சு. பலகாரம் வாங்கியாச்சா?"

"இல்லேப்பா... கையிலே ஒண்ணுமில்லே. இதென்னது?"

"சீனிமுட்டாசு... பக்கடா... மிச்சரு... பூந்தி"

"யார் கடையிலே?"

"கரிகாலன் கடையிலே, 'மாதாங்கோயில்பட்டி சரக்கு நயம்'னு சொன்னாக. வாங்கிட்டுப் போறேன்."

"லோனா?"

"ம்ஹூம். ரொக்கம். கையிலே காசு. பையிலே சாமான்."

"நல்ல நாளுக்கு புள்ளைகளுக்கு தீம்பண்டம் வாங்கிட்டே. எம் மகளும் வாங்கச் சொல்லுதாள்"

“வாங்கிர வேண்டியதுதானே?”

“வக்கு வசதியில்லியே...”

“நெதம் நெதம் குடிக்குதுக்கு மட்டும் வக்கு வந்துரு தாக்கும்?”

“நீ வேற... யாராச்சும் ஓசியா வாங்கி ஊத்துவாக. வண்டி ஓடுது. நோட்டை ஒடைச்சு பாட்டிலா வாங்குதோம்?”

“நெதம் நெதம் ஓசியா? யார்கிட்டே காது குத்துறே?”

“ஆமப்பா... யாராச்சும் ஒரு புண்ணியவான்... ஒரு குவார்ட்டருக்கு ஏற்பாடு பண்ணிருவான். பொய்யா சொல்லுதேன்?”

“எப்புடியோ... போ. தண்ணியைக் கொறைச்சு, புள்ளையைக் காப்பாத்த வழியைப் பாரு...”

முத்துமுத்தான சொற்களைக் கொட்டிவிட்டு நகர்கிறான், முத்துகருப்பன்.

வள்ளியம்மா முகத்தில் கடுப்பு. அவமதிக்கப்பட்ட மனசின் புண்பட்ட வலி. மட்டியைக் கடித்துக்கொண்டு, கண்ணில் அனல் பறக்க அமுத்தலான குரலில் சீறினாள்.

“பாத்தீயா மனுசா? ஒன்னைவிட சின்ன நாயி, ஒனக்கு உபதேசம் பண்ணிட்டுப் போறான். எனக்கு நாண்டுக்கிடணும் போலிருக்கு. ஒனக்கு ரோஷமு மில்லே. சூடு சொரணையுமில்லே. மண்ணாயிட்டே. த்தூ!”

“நல்லதுக்குத்தானே சொல்லிட்டுப் போறான்?”

“அவன் சொல்லணும், நீ கேக்கணும்னு கெரகசாரம்

இருக்கு; இது கேவலமில்லே? நீதான், அந்தச் சனியனை விட்டுத் தொலைச்சா... என்ன?"

வள்ளியம்மா ஆத்திரமாக விருட்டென்று உள்ளே போனாள். சீண்டப்பட்ட வெறி. நாலுபேர் நம் குடும்பத்தை ஏளனமாக பேசுகிற மாதிரியாகிவிட்டதே என்கிற அவலத்தை நினைத்த ஆத்திரம். ஆங்காரம்.

"இந்தக் கூறுகெட்ட குடிகாரங்கிட்டே கழுத்தை நீட்டுன நாள்லேயிருந்து... இப்புடி கேவலப்பட்டு, சீப்பட்ட பொழைப்புதான். சேய்!"

வள்ளியம்மாவின் வார்த்தைச் சாட்டைகள் மின்னலாய் சுழன்றன. அவன் மனசை 'பளீர், பளீரெ'னத் தாக்கியது. அவள் அவளையே திட்டிக்கொள்கிற போது—அவளுக்கு லபித்த விதியை சபித்துக்கொள்கிற போது—அத்தனையும் தனக்குத்தானே என்ற உணர்வில் குன்றிப்போகிற அழகுமாயன். உயிரின் வேர்வரை இறங்குகிற வலியின் அதிர்வுகள்.

அவனே அவனுக்குள் கசந்தான். தன் முகத்தில் தானே காறித் துப்பிக்கொள்ள நினைத்தான். அவனையே அவன் வெறுத்தான்.

'ஆஃப், குவார்ட்டர்னு குடிச்சு குடிச்சு... நானே குவார்ட்டர் மனுசனாயிட்டேன். மனுசத்தன்மையில்லாத மனுசனாயிட்டேன் ... இனிமே இந்தச் சனியன் மூஞ்சியிலேயே முழிக்கக்கூடாது...'

அவனுள் கசப்பான நினைவுகள். நினைவுகளின் முடிவில் வைரம் பாய்ந்த மன இறுக்கம். அழுத்தமான முடிவு.

'இனிமே இந்தச் சனியனை தொட்டே பாக்கக் கூடாது. பொண்டாட்டி புள்ளையை புத்தியோட வைச்சுப் பொழைக்கணும். மான மரியாதையோட தலைநிமிர்ந்து இருக்கணும். இந்த இழவை இனித் தொட்டுக்கூடப் பாக்கமாட்டேன்...'

சைக்கிளைத் துடைத்து முடித்துவிட்டு உள்ளே போனான். நடக்க முடியவில்லை. உள்ளங்கால் முழுக்க முள்முள்ளாகக் குத்துகிற உணர்ச்சி. ரொம்ப நேரம் குத்துக்கால் வைத்திருந்ததால் வந்த மதமதப்பு, எரிச்சல் பற்றுகிற பாதங்கள்.

"வள்ளி... வள்ளி..."

அவன் குரலின் கனிவு, அவளுக்குள் இறங்கியது.

"நீ எதுக்கு அழணும்? எம் புத்திக் கொறைவு. நாந்தான் அழணும்" அழகுமாயனின் குரல் உடைந் திருந்தது.

முந்திச் சேலையால் கண்ணைத் துடைத்தாள். மூக்குச்சளியை சீறி, சுவரில் இழுவினாள். இன்னும் அடங்க மறுத்து, திமிறித் தெறிக்கிற விசும்பல்.

"சரி... எசக்கி ஆசை ஆசையா எரை போட்டு வளர்த்த நாட்டுக் கோழியும் சாவலும் இருக்கு. புடிச் சுட்டுப் போ."

"போயி...?"

"ப்ராய்லர் கோழியைத் தின்னுதின்னு நாக்குச் செத்துக் கிடக்குறவுக, நாட்டுக்கோழின்னா பிரியமா வாங்குவாக. துட்டாக்கிட்டு வந்து சேரு..."

"வேண்டாம். எசக்கி சின்னப்புள்ளே. அவா ஆசையா வளர்த்த கோழிக..."

"இருக்கட்டும், இருக்கட்டும். ரெண்டு கோழி, ரெண்டு சேவல்க இருக்கு. புடிச்சு வித்துட்டு வா. நானூறு ரூவா தேறும். நல்லபடியா திருழாவைக் கொண்டாடிரலாம்."

கோழிக் குஞ்சை விற்று கோவில் கொண்டாட வேண்டிய நிஜத்தில், அவனது இயலாமை புரிகிறது. 'உப்புக்கல்லுக்குக் கூடப் பெறாத, குடிகார நாய்' என்ற வசை இருக்கிறது. அடிமனம் உணர்ந்து, வலியில் துடிக்கிறது. குடிச்சுக் குடிச்சு குடும்பத்தையே கேவலப் படுத்திட்டேன்... எதுக்கும் லாயக்கத்த ஆம்பளையா யிட்டேன். பச்சைப்புள்ளே வளர்த்து வைச்ச பொருளை விற்று, நாளை நகர்த்துகிற அளவுக்கு இழிவாகிட்டேன். ச் சேய்...!

அவனுக்குள் அவனே காறித் துப்பிக்கொள்கிற கோப நினைவுகள். வசை எண்ணங்கள். அழகுமாயனுக் குள் அனல் நினைவுகள்.

சாம்பல் கோழி. செவலைக் கோழி. சேவல் ரெண்டும் மயில் கழுத்து நிறம்.

நாலையும் பிடித்தான். ரெக்கையடிக்குதுகள். சின்னச்சின்ன ரோமங்கள் சிதறுகின்றன. தனித்தனியாக காலைக் கட்டினான். ரெக்கைகளைப் பின்னினான்.

ஹாண்டில் பாரின் இடதுபக்கம் ரெண்டு கோழி, வலதுபக்கம் ரெண்டு சேவல் தொங்கவிட்டான். தலைகள் கீழே தொங்கின. அதன் ரத்த நிறக் கொண் டைகள். திறந்து திறந்து கத்துகிற அதன் அலகுகள்.

கிலோ அறுபது ரூபாய் சேவல். எழுபது ரூபாய் கோழி. நாலையும் எடை போட்டால், 'அந்தா, இந்தா'

என்று ஏழு கிலோ தேறும். நானூறுக்குக் குறையாது. வள்ளியம்மா சொன்னபடி, நல்லபடியா பத்ரகாளி யம்மா திரு(வி)ழாவை முடிச்சிரலாம். இசக்கி ஆசைப் பட்டபடி கருப்பட்டி மிட்டாய், காராச்சேவு வாங்கிரலாம். தோசைக்குப் போடலாம். ரெண்டு கறிபுளி வாங்கிக்கிடலாம்...

அவனுக்குள் ரெக்கை விரிக்கிற நினைவுகள், சிறகடித்துக் கூவுகிற ஆசைகள். பொறுப்புள்ள குடும்ப மனிதனாக நினைத்துக் கொள்கிற நினைவின் இனிமை. பெருமிதப் பீறிடல்.

வண்டியை உருட்டினான். கலகல என்கிற மக்கார்டு, கொரட், கொரட்டென்கிற செயின்கவர்.

“வள்ளி...”

“ம்...”

“போய்ட்டு வரட்டா?”

“வெருசா வந்து சேரு.”

“ம்...”

“போற எடத்துலே புத்தியைக் கடன் குடுத்துராதே...”

“ஆட்டும்...”

“எசக்கியை மனசுலே வைச்சு, ரூவாயை பத்திரமா கொண்டா...”

வலையபட்டியைத் தாண்டியது, சைக்கிள். கோழியும் சேவலும் சைக்கிளுடன் சேர்ந்து ‘கேர், கேர்’ என்று கத்தியது.

“என்ன... நாட்டுக்கோழியா? வெலைக்குத் தரவா?”

வலையபட்டியில் ஒன்றிரண்டு பேர் கேட்டனர். பெடல் மிதியை நிறுத்தாமல், “இல்லே” என்றான், அழகுமாயன்.

ஆலங்குளம் போனால்... கடையில் நாலையும் எடை போட்டு, மொத்தமாகப் பணம் வாங்கலாம். இங்கென்றால்... ஆளுக்கொன்றாகக் கொடுத்துவிட்டு, சில்லறை சில்லறையாக—வீடு வீடாக—அலைந்து சீரழிந்து வாங்கிச் சேர்ப்பதற்குள் ‘ஆத்தாடி, அம்மாடி’ என்றாகிப் போகும்.

பெரிய இச்சிலாத்தி.

ஆலங்குளம்தான் லாயக்கு. கறிக்கோழி கடைக்குப் போனால்... நிமிஷ நேரத்தில் வேலை முடியும். கையில் பணம் ஏறும்.

கண்மாய்ப்பட்டியைக் கடந்து உருள்கிற சைக்கிள்.

ஆலங்குளம் முக்குரோட்டில் தெற்கோரம் கறிக்கோழிக்கடை. சைக்கிளை நிறுத்தினான்.

“நாட்டுக்கோழி வேணுமா?”

கடைக்காரர் ஆவலாய் பார்த்தார்.

“கொண்டா, கொண்டா... ஏழு உருப்படிக்கு ஆர்டர் இருக்கு.”

“என்ன வெலை?”

“வெலையெல்லாம் பாத்துப் போடலாம். கொண்டா.”

கடைக்காரர் தராசைத் தூக்கினார்.

நானூற்றி முப்பத்தேழு ரூபாய்க்கு சிட்டையை முடித்தார்.

அழகுமாயனுக்குள் கனாக்கள். மகள் இசக்கியை நினைத்துக் கொண்டான். வள்ளியம்மையை நினைத்துக் கொண்டான்.

"ஐய்க்க்... கருப்பட்டி முட்டாயி! லட்டு... அய்யா... இது என்னதுய்யா?"

"வெங்காயப் பக்கடாம்மா..."

"நல்லாயிருக்குமா... ய்யா?"

"சாப்புட்டுப் பாரு..."

"ஐய்க்க்... ஐய்க்க்..." ஆதாளி தாளாமல் ஆனந்தக் கூத்தாடுகிற இசக்கி. சிரித்த முகத்தில் பூவின் ஒளிமின்ன, கண்ணில் மனம் மின்ன... கும்மாளமிடுகிற ரத்தநிழல். வம்சப் பூ.

ஆடி ஓடி உரலில் மாவாட்டுகிற வள்ளியம்மா. நல்ல நாள் பலகாரம் தயார் பண்ணுகிற மும்முரத்தில் வியர் வையும் வேகமுமாய் அவள். முகத்தில் மனசின் துள்ளல். கண்ணில் உணர்வின் மகிழ்வு மின்னல்.

சிட்டையை முடித்து, ரூபாயைக் கையில் வாங்குகிற தருணத்தில்.

கணேசன் வந்து நின்றான்.

"யாரு... அழகுமாயனா? என்ன இம்புட்டு ரூவா?"

"திரு ழாச் செலவுக்கு ரூவாயில்லே. வீட்டுக் கோழிகளைக் கொண்ணாந்தேன்..."

"ரைட் ரைட்... நாட்டுக்கோழி வித்த ரூவாயிலே சீமைச்சரக்கு அடிப்போம். ஒரு ஃபுல் வாங்கு."

அழகுமாயனுக்குள் பகீரென்றது. அடிமனசில் தேள் கொட்டியமாதிரி சுண்டுகிற வலி. ரணம்.

கணேசனிடம் ஓசியாக பல தடவை இவன் குடித் திருக்கிறான். கணேசனிடம் மட்டுமல்ல, அவனது கூட்டாளிகள் மூன்றுபேர் செலவிலும் எத்தனையோ தடவைகள் இவன் குடித்திருக்கிறான்.

ஓசியாக பல தடவைகள் குடித்துவிட்டு... கையில் ரூபாய் இருக்கும்போது, வாங்கிக் கொடுக்காமல் இருக்க முடியுமா? கூடக் குடிக்காமல் இருக்க முடியுமா?

அப்ப... வள்ளியம்மா...? இசக்கி...? திரு பூா? 'போன எடத்துலே புத்தியைக் கடன் குடுத்துராதே' என்ற எச்சரிக்கை? சனியன் மூஞ்சியிலே முழிக்கக்கூடாது என்கிற விரதம்?

"என்ன அழகு, இந்த முழி முழிக்கே? பேய்முழி?"

"இன்னிக்கு குடிக்க முடியாது... அதான்..." தடுமாறி, தத்தளித்து, உளறினான். தப்பிக்க வழி தேடி... கள்ள விழி விழித்தான். அவனைச் சண்டாளமான கோபத்தில் முறைத்தான், கணேசன்.

"இது அழகு இல்லே. வாயை இளிச்சு இளிச்சு, கூடச் சேர்ந்து நூறு தடவை தண்ணியடிச்சுட்டு, கையிலே துட்டைப் பாத்தவுடனே... யோக்கியன் மாதிரிப் பேசுறது... அழகு இல்லே. நீ நெதம் நெதம் சோத்தைத் திங்கியா, வேற என்னத்தையும் திங்கியா? நீயெல்லாம் மனுசந்தானா?"

*குத்துண்ட புறாவாகத் துடிக்கிற அழகுமாயன். வார்த்தைக் கத்தியால் குத்துவாங்குகிற வலி. பலவீனப் பட்ட மனசின் மரணப் புலம்பல்.*

*"என்ன... ஃபுல் வாங்குதீயா, ஒறவை முறிச்சிட்டு போறீயா?" கணேசன் கடுமை குறைந்த குரலில் இறுகி னான், இறுக்கினான்.*

*எல்லா வழிகளும் அடைபட்டுவிட, ஒயின்ஷாப்புக்கு மட்டுமான வழி மிச்சமிருக்க...*

*அவன் பிழைப்பைப் போன்ற சைக்கிள், நிற்க மதியில்லாமல் நிலைதடுமாறி விழுந்து கிடந்தது... இந்தத் தேசத்தைப் போல.*

தினமலர்-வாரமலர். மார்ச்-2002.

# கோட்டைச்சாமி

ஆத்திரம் கனன்றது அரசர் கண்களில். குமுறிக் கொதித்த நெஞ்சின் வெப்பம், கன்னச்சதைத் துடிப்பில். பருத்த உதடுகளின் மகுடமாக நீண்டு வளைந்து நிமிர்ந்திருந்த மீசையில், ஒன்றிரண்டு வெயில் மின்னல்.

அரசரது கோபப்பார்வை, காவலர்கள் பிடியில் நிற்கும் குற்றவாளியின் மீது. திகிலும் கிலியுமான அவனது முகத்தில் மரணத்தின் துக்க நிழல். மரணத்தை முன்னுணர்ந்த இறுக்கம்.

நீள அகலமாக அமைந்திருந்த அவை மண்டபம். உள் உயரம் மிகமிக அதிகம். ராட்சதக் குடையாகக் கவிந்திருந்த மண்டபக் கூரைகள். அரசரின் சிறுமூச்சு கூட, பெரும் சீற்ற அலைகளாக அதிர்ந்து மண்டபம் முழுவதும் கேட்கும். அப்படியோர் நுட்பத்தில் அமைந்த அவை மண்டபத்துக்குள்...

சிறகு விரித்துப் படுத்துக் கிடக்கிற கழுகைப்போல ஒரு மௌனம். கனத்த மௌனம். துயரார்ந்த மௌனத்துடன் கலந்த மனித மூச்சுகள்.

ராஜரிஷிகள், அமைச்சர்கள், தளபதிகள், சேனாதிபதிகள், ஈட்டி சுமந்து நிற்கும் காவலர்கள், புலவர்கள்,

கற்றறிந்த கல்விமான்கள், விகடகவி எல்லோரும் இருந்த அந்த அவையில்... சொற்கள் இல்லாமலிருந்தது. வரப்போகும் சொற்களுக்காக, திகிலுடன் காத்துக் கிடந்தது. கனத்த மௌனம்.

சகலர் கண்களும் அரசர் உதட்டிலேயே நங்கூர மிட்டிருந்தன. கண்களில் வந்து நின்றன இதயங்கள்.

'என்ன தீர்ப்பு சொல்லப் போகிறார், அரசர்? என்ன தண்டனை விதிக்கப் போகிறார்?'

அவையினர் மனசுக்குள் ஆவல். அச்சத்தில் சத்தமிடுகிற இதயங்கள்.

அரசர் உதட்டில் இருந்து விழப்போவது, சொற் களல்ல. காவலர் பிடிக்குள் சிக்கித் திமிறும் மனிதனின் தலையெழுத்து. துடிக்கும் அவனது உயிர்.

'சிறையா, சாவா?' என்பதை அவரது உதட்டுச் சொற்கள் நிர்ணயிக்கும். அசையப் போகும் உதட்டில் தொங்கும் அவனது உயிர்.

அரசரது நெஞ்சு நிமிர்ந்திருந்தது. தாட்டியமான திரேகம் விறைத்திருந்தது. அவரது இடதுகை அரியணைத் திண்டில். இருமுனையிலும் கலை நுணுக்க வேலைப்பாடுமிக்க குமிழ்கள் உள்ள செங்கோல், வலதுகையில்.

அரசரது உதட்டசைவுக்கேற்ப சலனமுறும் மீசை ரோமங்கள்.

"அரசன் என்றால் கடவுள். குடிமக்களுக்குப் பயம் இருக்க வேண்டும். பக்தி இருக்க வேண்டும். எந்த நிலையிலும் விசுவாசம் வேண்டும். இந்தக் குற்றவாளி

பற்றிய ஒரு முறையீடு வந்தது நமது அவைக்கு. விசாரிப் பதற்காக இவனை அழைத்துவர நான் உத்தரவிட்டேன். அரசு உத்தரவுக்குப் பணிய மறுத்திருக்கிறான். அழைக் கப்போன அரசுக்காவலர் மூவரையும் கொன்றுவிட் டான் இந்தக் கயவன்."

அரசரின் உரத்த குரல் மண்டபம் முழுக்க அலை அலையாகப் படர்கிறது. பெருகிப் பெருகிப் பரவுகிறது. குரலின் வெம்மையில் அவை திகைத்துக் கிடக்கிறது. திகில் பரப்புகிறது.

"அரச உத்தரவை அலட்சியம் செய்து அரசுக் காவலர்களைக் கொலை செய்த இவன், கடவுளுக்குச் சமமான அரசனைக் கொன்ற மாபாதகக் குற்றம் செய்தவன் ஆகிறான். அரசுக் காவலர்கள் அரசரின் நரம்புகள், பிம்பங்கள். அரசுக் காவலர்களைக் கொலை செய்வது என்பது மகாப்பெரிய குற்றம். மண்ணின் நீதியையே கொலை செய்த இப்பாவிக்குரிய தண்டனை மிகவும் கடுமையானதாக இருக்க வேண்டும்."

அரசர் பேச்சை நிறுத்திவிட்டு, குற்றவாளியைப் பார்த்தார். கோபத் தகிப்பான பார்வை. ஆத்திர உணர்ச்சி தாளாமல், அடி உதட்டைக் கடித்தார். அழுந்தக் கடித்தார். செங்கோலைப் பற்றியிருந்த கையில் இறுக்கம். கண்ணிமையின் அனல் துடிப்பு. மீசையின் கம்பீரம். அரசர் குரல் உயர்ந்தது. கழுகின் கூவலாக.

"தண்டனைக் களத்திலல்ல... மக்கள் கூடியிருக்கிற சந்தைத் திடலில்—மக்கள் பார்வையில்—இவன் சிரம் மெள்ள மெள்ள அறுபடட்டும். இதுதான் என் தீர்ப்பு."

அவை மண்டபத்தில் சட்டெனப் பரவிய அதிர்வு. 'இத்தனை குரூரமான தண்டனையா தன் குடிமக

னுக்கு?' என்ற வருத்த உணர்வு. 'இந்த ராஜாவுக்கு இது நல்லதல்ல' என்று ஆழ்மனசுக்குள் சபித்துக்கொண்ட கனத்த மௌனம். மறுப்பின் திமிறல் முறுக்கேறிக் கிடந்த மௌனம்.

அரசரின் அதட்டலான சத்தம். அங்கீகாரம் கேட்கிற மிரட்டல் தொனி.

"என்ன... சொல்கிறது அவை? அரசரின் தீர்ப்பு, அவைக்குச் சம்மதம்தானே?"

சேனாதிபதியின் முதல் குரல். உரத்த முழக்கம்.

"அரசருக்கரசரான நமது பூபதிராஜா சிங்கமுகன்..."

"வாழ்க! வாழ்க! வாழ்க!" என்று ஆமோதித்து எதிரொலிக்கிற அவையோர்.

அப்போது—

"நிறுத்துங்கள்... நீதியற்ற தீர்ப்பை நிறுத்துங்கள்...! விசாரணையற்ற அநீதியை நிறுத்துங்கள்!"

ஒரு வாலிபக் குரலின் சீற்றம், அவையோரின் வாழ்க குரல்களை இடறியது. அவையோரின் சுரத்தில்லாத ஆமோதிப்புக் குரலை அபசுரமாக்கியது, அந்த வாலிபக் குரல்.

மெய்க்காப்பாளர் நீட்டிய தட்டில் செங்கோலை வைத்துவிட்டு எழுந்த அரசர், திடுக்கிடலோடு வாயிலை நோக்கிப் பார்வையை எறிந்தார்.

வாயில் காப்போரின் தடை முயற்சிகளைத் தகர்த்துக்கொண்டு, உள்நுழையும் யத்தனிப்பில் அந்த வாலிபன். திமிறிக்கொண்டும் முறுக்கிக்கொண்டும் முன்னேறுகிற இளமைத் தெறிப்பு.

முகத்தில் ஈரக்கசிவு, நெஞ்சின் கொதிநிலைத் தகிப்பு. அநியாயத்தைச் சகித்துக் கொள்ளாத ரௌத்ரத் தீயின் தழல் சீற்றமாக அந்த இளைஞன். கட்டுடல். மரச்சிறாய் போல சதைத் திரட்சிகள். புடைத்தெழுந்த புஜங்கள். அகன்ற மார்பு. அரும்பு மீசை!

"அந்த இளைஞனை அனுமதியுங்கள். உள்ளே வரட்டும்" என்ற நிலையில் அரச உத்தரவு.

விடுபட்ட அம்பென விரைந்தான், அவையோர் நடுவே அமைந்திருந்த பாதையில். அரசர் முன்பாக தலை தாழ்த்தினான்.

"எங்கள் அரசருக்கரசர்... எங்கள் நாட்டின் மாபெரும் கீர்த்தி... எங்கள் அரசர் பூபதிராஜா சிங்கமுகன் அவர்களுக்கு, உங்கள் குடிமகனின் சிரம் தாழ்ந்த வணக்கங்கள்..."

மரபுப்படி வணங்கினான், மரபுகளைக் கேள்விக் குள்ளாக்க வந்திருக்கும் மாவீரன்.

"உன் பெயர்?"

"புதுக்கோட்டை சாமி."

"ம்... சொல்... என்ன விஷயம்...?"

"தங்கள் தீர்ப்பு தவறானது. குற்றம் விசாரிக்கப்பட வில்லை: தண்டனைக்குள்ளாகியிருக்கும் மனிதர் என்ன குற்றம் செய்தார்? ஏன் செய்தார்? செய்தது குற்றம்தானா என்றெல்லாம் இந்த அவையின ருக்குச் சொல்லப்படவில்லை. ஆகவே, தங்கள் தீர்ப்பு அநீதியானது; அக்கிரமமானது; ஆண்டவருக்கு எதிரானது."

“அவையோரின் சம்மதக்குரல் எதிரொலித்ததை நீ கேட்கவில்லையா? நீ செவிடா?”

அரசரின் அடர்த்தியான புருவங்கள் நெரிந்தன கோபத்தில். ஆத்திரத் தகிப்பில் முகம் இறுகியது.

“அரசரின் தீர்ப்புக்கு மறுதீர்ப்பும் கிடையாது. மறுஆய்வும் கிடையாது. தீர்ப்பு நிறைவேற்றப்படட்டும். துடுக்குத்தனமான இந்த மூர்க்கனின் முறையீடு, நாளை கூடுகிற அவையில் விசாரிக்கப்படும்.”

ஓடிவந்த காவலர்கள் அவனைப் பின்னிக் கொண்டனர்.

கற்சுவர்களில் சாய்வாகச் சொருகப்பட்டிருந்த தீப்பந்தங்கள். சிறைச்சாலையின் இருட்டை முழுவது மாகத் தின்னாமல், நிறைய எச்சம் இட்டிருந்தன. தீப்பந்தச் சுடர்களின் அசையாத நிமிர்வில், கருகல் எண்ணெய்த் துளிகள் சடசடத்துத் தெறித்தன.

காவலர்கள் தாறுமாறான கோலத்தில் உறங்கு கின்றனர். உண்டு முடித்த நிம்மதியில், மரத்துப்போன கைதிகள் தம்மை மறந்து உறங்கினர். ரகம் ரகமான குறட்டைகள். ஆந்தைகளின் குமட்டலான வாசம்.

உறக்கம் வராமல் சிறையில் தத்தளித்துக்கொண் டிருந்தான் புதுக்கோட்டைச்சாமி. ‘தனது உயிர் நண்பன் தண்டிக்கப்பட்டிருப்பான்’ என்ற நிஜம், அவனுள் மீண்டு மீண்டு வந்து வாட்டுகிற நினைவுகளாக... வதைத்துக் குரூரச் சிரிப்பு சிரிக்கிற எண்ணங்களாக... அவனைப் புரட்டியெடுக்கிற உள்உணர்வுகளாக...

*மனசு கிடந்து கசந்தது. வாய்விட்டு அழவேண்டும் போல ஒரு மனத்திணறல். சோகப் பாரத்தின் அழுத்தம்.*

*சந்தைத்திடலில்... மாலைப்போதில்... மக்கள் பொருள் வாங்கவும் விற்கவுமான பரபரப்பில் நெருக்கி யடிக்கிற இடத்தில்... இழுத்துச் செல்லப்படுகிற தனது உயிர்நண்பன். அரசுக் காவலர்களின் மூர்க்கப்பிடி. சங்கிலிப் பின்னல்களை நெட்டித் தள்ளுகிற குரூரம்.*

*அதிர்வான வீறிடல்களோடு முகம் வெளுத்துப் போகிற மக்கள். அதிர்வின் மலைப்பிலிருந்து மக்கள் மீள்வதற்குள்...*

*சாவகாசமாக அவன் தலைமுடியைப் பற்றுகிற ஒரு தடியன். நெற்கதிர் அறுப்பது மாதிரி... கழுத்தில் பெரிய வாளைப் பதிந்து, மெள்ள மெள்ள அறுக்கிற கொடூரம். தெறிக்கும் விழிகளோடு கதற முயல்கிற அந்த அப்பாவி.*

*வெதுவெதுப்பான ரத்தத்தில் நனைந்த வாள், முன்னும் பின்னுமாகப் போய்வந்து, மெதுமெதுவாக கழுத்தறுக்கிற ராட்சஸம்.*

*அறுத்து முடித்தவுடன், கருவாட்டுத் தலையை வீசி எறிவதைப் போல... தூக்கியெறியப்படுகிற மனிதத் தலை. குருதியில் ஒட்டுகிற சந்தைப்புழுதி. தலை அறுபட்ட பின்னும் துடிக்கிற உயிருடம்பு. பீறிடும் ரத்தத்தில் கசிகிற உயிர்...*

*...புதுக்கோட்டைச்சாமியின் மனசுக்குள் நீள்கிற கற்பனையிலேயே கலங்குகிறான். "ஐயோ... உயிர்நண்பா! போயிற்றே உன்னுயிர். 'வம்சாட்சி' வேண்டாம் என்று கூறினாய்... உன் வம்சத்துளியே இல்லாமல் துடைத்து விட்டார்களே... பாவிகள்! அதுவும் எப்படிப்பட்ட*

துடைப்பு? ராட்சஸத்தனமான துடைப்பு. காட்டு மிருகத்தனமான துடைப்பு. ச்சே!"

கொதிப்பும் குமுறலுமாகத் துயருறுகிற அந்த மாவீரனின் மனசு.

"அட... உயிர்நண்பா, எப்படித் தோன்றியது இந்தச் சிந்தனை உனக்கு மட்டும்? 'ராஜாமகன் ராஜா என்ற வழக்கம் வேண்டாம்' என்றாய். 'தகுதியும் வீரமும் கருணையும் உள்ள ராஜாவை மக்களே தேர்வு செய்யட்டும்' என்றாய். 'ஆளும் ராஜா அறுபது வயதான வுடன் அரியணையை விட்டு இறங்கவேண்டும்' என்றாய். அரியணையை அலங்கரிக்கும் மறு அரசரை மக்களே தேர்வு செய்ய வேண்டும்' என்றாய். அறிவாளி களுக்கும் பண்டிதர்களுக்கும் அரசியல் ஞானிகளுக்கும் தோன்றாத புதுச்சிந்தனை... உன்னிடம் மட்டும் எப்படி வந்தது? மக்களுடன் கிடந்து சீரழியும் சாமானியனான உனக்குள், இந்தச் சிந்தனை ஏன் வந்தது? உன் தலையை அறுப்பதற்கா? உயிரைப் பறிப்பதற்கா?"

நள்ளிரவு, நடுச்சாமம். சிறைச்சாலை உயிர்பெற்று நெளிந்தது. உறங்கிய காவலர்கள் வீடு போய்ச் சேர, புதிய காவலர்கள் பணிக்கு வந்தனர். பணிமாற்றச் சலசலப்பு, மனிதச் சத்தம்.

இவனது சிறையறையின் முன்பும் ஒரு புதிய காவலாளி வந்து நின்றான்.

"காவலா...!"

"ம்."

"நேற்று சந்தைத்திடலில் சம்பவம் ஏதேனும் உண்டா?"

"ஆமாம். ஊரெல்லாம் பேச்சாகக் கிடக்கிறது. ஆனால், நான் பார்க்கவில்லை."

"என்ன பேசுகிறார்கள், மக்கள்?"

'ராஜவிசுவாசமான ஆட்கள்கூட கோபமும் சாபமுமாகப் பேசுகிறார்கள். ராஜ்யம் தருமமற்றுப் போவதாகக் கூறுகிறார்கள். பெண்களோ... ராஜாவை மிகவும் கெட்ட வார்த்தையில் திட்டுகிறார்கள்."

"ஏன்... நீங்கள் காட்டிக் கொடுக்கவில்லையா, அவர்களையெல்லாம்?"

"ஓராள், ரெண்டாளா, காட்டிக் கொடுக்க? ஊரே சேர்ந்து பேசுகிறது. எனக்கும்கூட அந்தச் சம்பவத்தில் சம்மதமில்லை."

"ஏன்?"

"சந்தைத்திடலில் மக்கள் மத்தியில் சன்னஞ்சன்னமாக அறுத்துக் கொல்லுகிற கோரத்தண்டனை. அரசுக் காவலர்களைக் கொன்றானாம். சரி, அரசுக் காவலர்கள் அவன் வீடு ஏன் போனார்கள்? என்ன செய்தார்கள்? அரசுக் காவலர்கள் தேடிப் போகிற அளவுக்கு, அவன் என்ன குற்றம் செய்தான்? இத்தனை கேள்விகளுக்கும் எந்த விளக்கமும் சொல்லாமல்... இந்தக் கோர தண்டனை, ஒரு கொடுமை."

"அப்படியா? மக்கள் இந்தக் கேள்விகளைக் கேட்கிறார்களா?"

"வெளிப்படையாகக் கேட்க முடியுமா? மனசுக்குள் கேட்பார்கள். என் மனசுக்குள் இந்தக் கேள்விகள் வருகின்றனவே..."

“சந்தைத்திடல் சம்பவம் பற்றி வேறு ஏதேனும் கேள்விப்பட்டியா?”

“ஆம்... ஒரு தகவல். நம்பவே முடியவில்லை. ஆனால், அப்படித்தான் நடந்தது என்று சத்தியம் பண்ணிச் சொல்கிறார்கள், நேரில் பார்த்தவர்கள்...”

“என்ன அது?”

“அறுத்துப் போட்ட தலை, மண்ணில் கிடந்து துள்ளியதாம். மண் ஒட்டிய கழுத்துப் பகுதி முழுவதும் ரத்தமும் மண்ணும் கலந்தே இருந்ததாம். ரெண்டு துள்ளு துள்ளிய தலை, உதடுகளை அசைத்ததாம்... ‘மக்கள் சக்தி வெல்வது நிச்சயம்... வம்சாட்சி ஒழிவது நிச்சயம்’ என்ற உரத்த முழக்கம் எங்கிருந்தோ கேட்டதாம்...”

சிறையறையின் கம்பியைப் பற்றிக்கொண்டு கேட்டுக் கொண்டிருந்த புதுக்கோட்டைச்சாமிக்குள் ஒரு நெகிழ்வு. பெருமிதப் பூரிப்பு. சோகம் தாண்டிய பெருமையுணர்வு.

‘கிறுக்குத்தனம்’ என்றார்கள். என் உயிர்நண்பன் நாலு பேர் இருக்கிற இடமெல்லாம், தன் சிந்தனைப் புதுமையைப் பந்தி வைப்பான்.

“ராஜாமகன் மூளை வளர்ச்சியற்றவனாகப் பிறந்துவிட்டால்... அவனும் ராஜாதானா? அவனை ராஜாவாகச் சுமப்பது குடிமக்கள் தலையெழுத்தா? ராஜாமகன் மடையனாக இருந்துவிட்டால்... காமுக நோயாளியாக இருந்துவிட்டால்... மனக்கிறுக்கனாக இருந்துவிட்டால்... அவன்தான் ராஜாவா? இது என்ன மடத்தனம்? வழக்கம் என்ற பெயரில் ஏனிந்த முட்டாள்தனம்?”

எல்லோரும் இவனை ஒரு மாதிரியாகப் பார்த் தார்கள். "இவன் 'ஒரு மாதிரி' " என்று பகடி செய்தார் கள். "விலாவில் வெடித்து வந்த வினோதப் பிறவி" என்று பகடி செய்து மகிழ்ந்தார்கள்.

'பைத்தியக்காரன்' என்று நையாண்டி பண்ணி 'கெக்கேபெக்கே' என்று இளித்தவர்களையெல்லாம்... அவன் மரணம் திகிலடைய வைத்துவிட்டது. புரட்சிக் காரனுக்குரிய உயர் மரியாதையை வழங்கிவிட்டது. கோரத் தண்டனையின் குரூரம்.

இன்று இவன் பேசப்படுகிறான். ஸ்பார்ட்டகஸ் மாதிரி கருதப்படுகிறான். சந்தைத்திடலில் தந்த தண்டனை, அவனை இழிவுபடுத்திவிடவில்லை; மனமகுடம் சூட்டியிருக்கிறது.

புதுக்கோட்டைச்சாமிக்குள் பெருமிதம் தாண்டிய ஒரு ஊமைச் சோகம். மனமூலைக்குள் வருத்த உணர்வின் சுழல்.

அவனது புதுச்சிந்தனை, அரசவையில் சிதறவில்லை. விசாரிக்கப்பட்டிருந்தால்... அவன் கருத்து, தெறித்திருக் கும். அரசியல்ஞானிகளும் பண்டிதமணிகளும் கலை வித்தகர்களும் மாண்புமிகுகளும் கூடியிருந்த அந்த அவையில், தெறித்து விழுந்த சிந்தனை விவாதிக்கப் பட்டிருக்கும். பேசப்பட்டிருக்கும். எதிரும் புதிருமான சொற்களை எதிர்நோக்கியிருக்கும்.

அவனது புதுச்சிந்தனை, உருவமற்ற ஆன்மாவாக அரசவை அறிஞர் மனசுக்குள் உலவியிருக்கும். மரணத் துக்குப் பிறகும் அவன் நினைக்கப்படுகிற பேசுபொரு ளாகி இருந்திருப்பான்.

போயிற்று... போயிற்று... எல்லாம் போயிற்று... ஊமையன் கனவைப் போல—மரணத்துடன் எல்லாமே மறைந்து போயிற்று.

என் உயிர்நண்பனின் சிந்தனை, சூரியனைப் போலப் புதியது; வலியது; ஊமைக் கனா அல்ல. ஊமை மக்களிடமிருந்து முண்டியெழுந்திருக்கிற விதை, எதிர்க்காலச் சமுதாய விருட்சத்தை ஏந்தியிருக்கிற விதை...

அது அரசவையில் ஏற்கப்பட வேண்டாம். ஆனால், விவாதிக்கப்பட வேண்டும். விமரிசிக்கப்பட வேண்டும். 'இப்படியொரு சிந்தனை ஒரு பாமரன் மனதில் தோன்றியது' என்பது அரசவையில் பதிவு செய்யப்பட வேண்டும். அறிஞர் சபை பிரமிக்க வேண்டும்.

நான் செய்வேன். என் நண்பன் விட்டுச்சென்ற பணியை என்னால் செய்ய முடியும். நாளைய விசாரணையில் நான் முழங்குவேன். அரசவையில் குற்றவாளியாக நின்று. என் நண்பனின் சிந்தனையைப் பரப்புவேன்

அவன் மனம் அடங்குகிறது. அலைபாய்வு ஒரு முடிவாக உறைந்தது. வருத்தம் இருந்த இடத்தில் ஒரு சங்கல்பம். சோகம் சுழன்ற மனதில் ஒரு சூளுரை.

பொழுது புலர்ந்தது. புதுக்கோட்டைச்சாமி உண்ணவில்லை, உறங்கவில்லை. கனவைத் தேடுகிற கண்ணைப் போல எங்கோ வெறித்துக் கிடந்தது. வார்த்தை தேடுகிற மனசு. சொற்களைச் சேகரிக்கிற உள்மனசு.

சபை அதிர வேண்டும். ரத்தினச் சொற்களின் ஒளிர்வில் கண் கூச வேண்டும். கருத்துக்களை உரிய வாக்கியங்களில் அலங்கரித்துத் தர வேண்டும். கருத்தின் வெப்பத் தகிப்பில் சபை அறிஞர்கள் சஞ்சலமடைய வேண்டும். புருவங்களை உயர்த்த வேண்டும்.

மனசுக்குள் நிறைய 'வேண்டும்'கள். 'வேண்டும்' களுக்கான வாக்கியத் தயாரிப்பில் மனத்தீவிரம். ஒரு கவிஞனுக்குரிய சொற்தேடல் தீவிரம்.

அரசுக் காவலர்கள் நண்பன் வீட்டுக்கு வந்தது... நண்பனின் அம்மாவைக் கொன்றது. அய்யாவைக் குத்தி, குற்றுயிராகத் துடிக்க விட்டுவிட்ட கொடூரம்... சாகக் கிடக்கிற பெற்றவர் முன்னிலையிலேயே, நண்பனின் தங்கையை மூன்று கழுகுகளும் ஆற அமரக் கொத்திக் குதறி ருசித்த ராட்சஸம்.

ராட்சஸதைத் துவம்சம் செய்கிற தேவ அவதார மாகப் பாய்ந்த தன் நண்பன். வலியதிரேகம், வீரமனது, கொதித்துக் குமுறுகிற தர்மாவேசம்.

சில நாழிகைகளிலேயே—

அந்த மூன்று பேன்களையும் நசுக்கிவிட்டான்.

...இதையெல்லாம் மனசில் தைக்கிற மாதிரி காட்சிப் படுத்த வேண்டும். காட்சிப்படுத்துகிற மாதிரி வார்த்தைப்படுத்த வேண்டும்.

என்னால் முடியுமா? இயலுமா? தடுமாற்ற மில்லாமல் உணர்ச்சிகரமாகப் பேச வருமா?

வம்சாட்சி ஒழிகிற லட்சியத்துக்காக... முடிய வேண்டும். நண்பனின் ஆத்மாவை உன்னதப்படுத்து வதற்காக... இயல வேண்டும். நண்பனின் தங்கையின் மானத்துக்காகப் பேச வந்தாக வேண்டும்...

நினைவுகளின் பந்தாக உதைபட்டுக் கொண்டும் உருண்டு கொண்டுமிருந்த புதுக்கோட்டைச்சாமி.

அரசுக் காவலர்கள் வந்தார்கள். சிறையறை திறந்துவிடப்பட்டது. ஆவல் பொங்க—பரவசத் திணறலாக—சந்தோஷ நதியால் புரட்டப்படுகிறவனாக... அவன்.

"அரசவை மண்டபத்துக்கா?"

"இல்லை... தண்டனைக்கூடத்துக்கு!"

"இன்னும் விசாரணையே நிகழவில்லையே...?"

"ஆனால்... தண்டனை வழங்கப்பட்டாயிற்று."

"என்ன தண்டனை?"

"வாயைத் துணியால் கட்டி... ஊமையாக்கி, வாய்த்துணி அவிழ்க்காத நிலையிலேயே சிரச்சேதம் செய்யப்படப் போகிறாய். அதுதான் தண்டனை."

புதுக்கோட்டைச்சாமிக்குள் காலடிப்பலகை உருவப்பட்ட பகீரிடல். ஆத்மாவை அமுத்துகிற ஏமாற்றம்.

உலகறியப்படவேண்டிய என் நண்பனின் சிந்தனை, வாயைக் கட்டுகிற துணிக்குள் ஒளியப் போகிறதா? புதையப் போகிறதா? சித்த வைத்தியர்களின் மூலிகை ரகசியங்களைப் போல ஆத்மாவுடன் அழியப் போகிறதா?

"நடக்காது... இது அநியாயம். விசாரணையே இல்லாமல் தண்டனையா? இது அநீதி..."

கொதித்த மனநிலையில் காட்டுக்கத்தலாக அவன் கத்துகிறபோதே... கைகளைப் பிணைக்கிற அரசுக்

*காவலர்கள். கால்களில் சங்கிலிப் பட்டையை மாட்டுகிறார்கள்.*

*"எங்கள் ரத்தம் மண்ணில் கலந்துவிடும், மண்ணில் கலந்த எங்கள் ரத்தமே, மண்ணின் குரலாகிவிடும். நாளைய மக்கள், மண்ணின் குரலை முழக்குவார்கள்... கேடு கெட்ட வாரிசாட்சி முறை, வெட்கக்கேடான ஒன்றாக மாறும். இது நிச்சயம்... நிச்சயம்... நிச்ச—"*

*அவன் வாயைத் துணியால் அமுத்தி, அமுக்கி, பின்பக்கமாகக் கட்டிவிட்டார்கள், காவலர்கள். தெறிக்கிற விழிகளில் அதன் வன்மம். புதையுண்ட ஆத்மத் துடிப்பின் லட்சிய தாகம். சரித்திரத்தைப் புரட்டிய சத்தமில்லாத சாவுகள் இந்த மாதிரி நிறைய்ய.*

—ஆனந்தவிகடன், 26-8-2001

ரூ. 3000 பரிசு பெற்ற
பவள விழா முத்திரைக் குட்டிச் சிறுகதை

# உரசல்

"கடவுள் இல்லே, கடவுள் இல்லேன்னா... கடவுள் இல்லைதான். இருக்குற ஒண்ணை நிரூபிக்கலாம். இல்லாத ஒண்ணை எப்புடி ப்ரூவ் பண்றது...? கடவுள்னு ஒரு தெய்வசக்தி இருந்துச்சுன்னா—இம்புட்டுச் சாவு வருமா நோவு வருமா...?"

நாத்திகம் கருப்பசாமி ஆக்ரோஷமாகக் கையை வீசி ஆவேசமாகச் சீறினான். அவனது ஆவேசத்துக்குக் கொஞ்சமும் குறையாத கோபாவேசத்தில், ஆத்திகம் அருணாசலம் கொந்தளிப்பாகச் சீறினார்.

"சாமி இல்லாமத்தான் நீ வந்தீயாக்கும்...? வெதை இல்லாம விருட்சம் வருமா...? சூட்சுமக் கடவுள் இல்லாம, சுத்துமா பூமி...? மழையிலே நனையாம குடை புடிக்கும் சயின்ஸ். மழையை நிறுத்திருமா...? வெயிலை ஒழிச்சிருமா...?"

தகிப்பான தர்க்கம்... தாறுமாறான வேகம்... சூடு... மொத்த பஸ்ஸே அவர்களை வேடிக்கை பார்த்தது.

"மனுசனைப் படைச்சது கடவுள் கெடையாது. கடவுளைப் படைச்சதுதான், மனுசன். நாட்டுக்கொரு மேனியும் சாதிக்கொரு வண்ணமுமாய் கடவுள்க

இருக்குது. ஏன்...? அந்தந்த மனுசங்க படைச்சதாலே தான்..."

"வேப்பமரத்துலே புளியங்காய் தொங்கவுடுவானா மனுசன்...? நெல் பயிருலே நெல்லிக்காயை வெளைய வைக்கமுடியுமா...? என்ன முடியும், மனுசனாலே...?"

சூடேறுகிற விவாதம். விதி மீறி, வரம்பு தவறி, லயம் தப்புகிற சர்ச்சை. தனிப்பட்ட தாக்குதலாகத் திசை தவறுகிற தர்க்கம்.

அப்போது—

பஸ் நின்றது. திகைத்து, குழம்பி, தேங்கிய நிறுத்தம். பயணிகளின் கவனம் அந்தப் பக்கம் தாவியது.

போக்குவரத்து ஸ்தம்பிப்பு.

கலவரப்பட்ட முகபாவத்தோடு எதிரில் வந்து கொண்டிருந்த ஒருத்தரை நிறுத்தினார், அருணாசலம்.

"என்னய்யா சங்கதி...?"

"கோயிலுக்குச் சாமி கும்புடப் போய்ட்டுத் திரும்பி வந்த வேன், எதிரே வந்த லாரியோட நேருக்கு நேரா மோதி, சப்பளிஞ்சு போய்க் கெடக்கு. சாமி கும்புட்டுட்டு வந்த பதிமூணு பேரு ஸ்பாட்லேயே ஆறு அவுட்டு... ரத்தச் சகதியிலே சதைசதையா கிழிஞ்சு ஏழு பேரு கெடக்காக... பாக்கவே பதறி வருது..."

"பாத்தீரா...? காசு போட்டுச் செலவழிச்சு, கோயில்லே போய் சாமி கும்புட்டுட்டு வர்ற பக்தர் களுக்கே சாவுதான் கதி... விபத்துதான் மிச்சம்... சாமி எங்க இருக்கு...?"—கருப்பசாமியின் கேள்விச் சீற்றம்.

சளைக்காமல், மருளாமல் பதிலடி தந்தார் அருணாசலம்.

"சாமி கும்புடப்போற பக்தர்களும் ஆசாரசுத்தமா இருந்துருக்கணும்லே...? ஒண்ணு ரெண்டு பேரு ஆசாரப் பிசகா இருந்துருந்தா, சாமி அதைக் கேக்கும்லே... தண்டிக்கும்லே..."

ஞானக்கர்வமான கேள்விகளும் எதிர்க்கேள்வி களுமாக கனல் தெறிப்பு.

இவர்களுக்குப் பின்னாலேயே இருந்த ஒரு மனிதர் இவர்களை வெறுப்பாகப் பார்த்தார். உஷ்ணமும் ஏளனமுமான வெறுப்பு.

"ஏய்யா, ஒங்க ரெண்டு பேருக்கும் வேற வேலையே கெடையாதா? ஆக்ஸிடெண்ட். ஆறு உசுரு போயிருக்கு. ஏழு உசுருக இழுத்துக்கிட்டுக் கெடக்கு. இந்த நெலைமையிலயும் உங்களுக்குத் தர்க்கம்தான் பெருசாப் போச்சோ? சாகக் கெடக்குற உசுர்களைக் காப்பாத் துறதுக்கு 'என்ன செய்ய, ஏது செய்ய'ன்னு யோசிக்காம... ரோமத்தைப் பொளக்குற விவாதமா நடத்துறீக? போங்கய்யா... போங்க... வேலையத்த வெட்டியாளுக!"

வெலவெலத்துப் போய் அதிர்ச்சியோடு நின்ற ஆத்திக அருணாசலத்தையும் நாத்திகக் கருப்பசாமி யையும் அலட்சியமாக ஒதுக்கிவிட்டுக் கீழே இறங்கி, உலகை உய்விக்கும் உண்மைக் காரியம் ஆற்றுகிற மனத் தீவிரத்தோடும் ஈரமனசின் கொதிப்போடும் முன்னேறி னார் அந்த மனிதர்.

உலகம் அவரைத் தொடரும்; அவர் போன்றவர் களால் உலகம் தொடரும்.

—ஆனந்தவிகடன், 24-6-2001

# சீமைக்கலர்

ஐஸ்காரருக்கு தாங்கமுடியாத அயற்சி. ஏழுதரம் வயிற்றோட்டம் பிடுங்கிய மாதிரி இருந்தது. உயிர் கழன்று நழுவிக்கொண்டது போல துவள்கிற திரேகம்.

ஐஸ் பெட்டியைத் திறந்து உள்ளே எட்டிப் பார்த்தார். வெதுவெதுப்பான குளிர்ச்சி ஆவி. இருளுக்குள் மங்கலான வர்ணங்கள்.

பாதிப் பெட்டிக்கு கிடக்கிற ஐஸ். விற்காமல் மிச்சம் கிடக்கிறது. அசல்கூட தேறவில்லை. சைக்கிள் ஹாண்டில் பாரில் தொங்குகிற சின்னப்பையில் சில்லரைக்கனம். சட்டைப் பையில் நோட்டு வர்க்கம் ரொம்பக் கம்மி.

ஐஸ் கேட்டு ஆள்வரத்தே இல்லை. தெருவில் வருகிற போகிற முகங்களையெல்லாம் ஆவலோடு பார்க்கிற ஐஸ்காரர்.

“ஐஸ் இருக்கா?” என்று கேட்டுவிடமாட்டார்களா என்றோர் ஏக்கம். கேட்பாரில்லை என்கிற தாட்சண்யமற்ற ஏமாற்றம்.

பொழுதுக்கால் முகம் நிறம் மாறுகிறது. சந்தன நிறத் தகதகப்பு. மேற்குமலைத் தொடருக்குள் இறங்கப் போகிறது. அடஇழவே, பொழுதயடையப் போகுதா?

இனிமே என்னத்தை விக்கும்?

விரக்தியின் விளிம்பிலும் வாழ்க்கையை பற்றுகிற வேட்கையில்... யந்திரத்தின் கூப்பாடாக அவரது வழக்கமான இழுவைச் சத்தம்.

"ஐஸ்... ஐஸ்ஸே... பால் ஐஸ்... சேமியா ஐஸ்ஸேய்ய்..."

ஹாண்டில் பாரில் கோர்த்திருந்த பச்சை ஹாரன். அதை ஆவேசமாக அழுத்தினார், மாறிமாறி.

"ப்பாய்ங்... பப்பாய்ங்ங்... பப்பாய்ங்ங்... பப்பாய்ங்ங்"

நாராசமான கதறல். செவிகள் அதிரும். பால் பீய்ச்சிவிட்டு பாதையில் போன பசு, ஹாரன் அலறலில் வெகுண்டது. காதுகளை விடைத்து, உடம்பெல்லாம் புல்லரிப்பின் சிலிர்ப்பு.

இழுத்துக்கொண்டு விருட்டென்று பாய்ந்தது. மாட்டுக்காரி சமாளிக்க முடியாமல் தடுமாறி... கோபத்தில் ஐஸ்காரரை எரித்தாள்.

"பொழுதடையப் போகுது. இப்ப வந்து ஐஸை வாங்கி சூப்புதுக்கு ஆளுக படை தெரண்டு வருவாக ளாக்கும்? 'பாழ், பாழ்'னு ஊதித் தொலைக்கீரு..."

"ஏவாரம் ஆகணும்லே?"

"அதுக்கும் நேரம் காலம் இல்லே? இருட்டுறதுக் குள்ளே வூடு போய்ச் சேர வழியைப் பாரும்."

அவளது சீறலும், சாடலும் அவருக்குள் இருண்ட முள்ளாகக் குத்தியது. அவரது தொழிலின் சீரழிவையே சொல்லிச் சிரித்த குரூர கேலியாக வலித்தது. கோணூசியால் இங்குட்டு குத்தி, அங்குட்டு வாங்கியது போலிருந்தது.

ஐஸ்காரருக்கு முகம் குறாவிப் போயிற்று.

சாயம் அப்பியிருந்த சட்டைப் பையிலிருந்து ஒரு பீடியை எடுத்தார். நுனியை கடித்து துப்பிவிட்டு, பற்ற வைத்தார். காந்தலான புகை, புண்பட்ட நெஞ்சின் உள்பகுதியை வருடியது. நாசி வழியே சீறிய மன வெக்கை.

"ஐஸ்காரன் பொழைப்பு... அப்படியாகிப் போச்சு. சீப்பட்டு சீரழிஞ்சு கேவலப்பட்ட பொழைப்பாயிருச்சு."

இந்த ஊருக்குள் வந்தால்... முதல் ஐஸ் வாங்குவது ராசேந்திரன் பிள்ளை அருஞ்சுனை, அஞ்சாப்பு படிக்கிறான். ஒண்ணுக்கு மணியடித்தவுடன், தீப்பொறி களாக தெறித்தொடி வருகிற பள்ளிப் பிள்ளைகள். அதில் முதல் பொறி அருஞ்சுனைதான்...

"ஐஸ்... ஐஸ்... ஐஸ்..." என்ற ஆனந்தக்கூப்பாடும், ஆதாளிக்கும்மாளமுமாய் சீறி வருவான். காக்கி டவுஷர். மேலே வெள்ளைச் சட்டை. சட்டை, காற்றுக்கு உப்பும். கண்ணில் ஒளியின் துள்ளல். முகத்தில் மனப்பூவின் மலர்ச்சி. ஒரு ரூபாய் தருவான்.

சாயங்காலம் பள்ளி முடிந்து, பைக்கட்டை வீட்டில் போட்டுவிட்டு அம்மா கொடுக்கிற தின்பண்டம். காப்பித்தண்ணி. நோட்டும் புத்தகமுமாய் டியூஷனுக் காக வருகிற அருஞ்சுனை.

அப்போதும் வந்து நிற்பான்.

"ஐஸ் குடுங்க."

"என்ன ஐஸ்?"

"பால் ஐஸ்."

வாங்கும்போதே கண்ணில் மனமின்னல். முகத்தில் ஆவல் பூ மலர்ச்சி. ஒரு ரூபாயைத் தருவான்.

அவனுக்கு ஐஸ் தந்த பிறகுதான் ஐஸ்காரர் சைக்கிளை உருட்டுவார். எப்பவும் அந்த கால் முளைத்த பூச்செண்டுக்காகத்தான் காத்திருக்கிறார். இது நிரந்தர வாடிக்கை.

அருஞ்சுனைக்கும் இவருக்கும் மூணு வருஷப் பழக்கம். அவனது அப்பா ராசேந்திரனும் டவுஷர் போட்டிருந்த நாளில் இவரிடம் ஐஸ் வாங்கித் தின்கிற வாடிக்கையாளன். அவனும் பத்து முடித்து, பட்டணம் சென்று பல வருஷம் கடை கண்ணிகளில் கஷ்டப்பட்டு அறிவு சேர்த்து... இப்போது இங்கே விவசாயம் செய்கிறான்.

"காலையிலே ஒண்ணு, சாயங்காலம் ஒண்ணு நம்ம பயலுக்கு ஐஸ் குடுத்துரும்" இது அவன் உத்தரவு.

"இந்த அருஞ்சுனைப் பயலை இன்னும் காண லியே."

அவனுக்கொரு ஐஸைக் கொடுத்துவிட்டால்... சைக்கிளை எடுத்துவிட வேண்டியதுதான். ஏகப்பட்ட லோடு. பிரேதம் கணக்காக கனக்கும். பெடலை ஓங்கி ஓங்கி மிதித்தாலும் நெஞ்சுக்கூடுதான் இளைக்கும். வண்டி நகராது.

சாயங்கால வெய்யில். சந்தன நிறக்கண்ணாடி வெய்யில். புழுதித் தூசி எழுகிறபோது வெய்யில் பட்டு, தங்கத்தூசியாக மின்னுகிறது.

அதோ... அருஞ்சுனை. வருகிறான்.

"ஏலேய்... ஐஸ் வேணும்லே? வாங்குடா. ஊரைப் பாத்துப் போவணும்"

"வேண்டாம்."

"ஐஸ் வேண்டாமா?"

"இது என்னடா... புதுசு?"

"இல்லே... வேண்டாம்."

தரையைப் பார்த்துக்கொண்டே குனிந்த தலையுடன் கடந்து போகிற அருஞ்சுனை.

இவருக்குள் ஆழத்தில் ஒரு வெறுமைப் பகீர். பறிகொடுத்த திடுக்கிடல். வாங்குகிற வழக்கமே நழுவிப் போகிற கிலியுணர்வு.

அவன் முதுகையே ஒரு சோகத்துடன் பார்த்தார், ஐஸ்காரர்.

சுரீரென்று சுடுகின்ற வெறுமை.

நெஞ்சுக்குள் கவ்விக்கொண்ட திகிலுணர்வோடு, சுவரில் சாய்த்திருந்த வண்டியை நிமிர்த்தினார். வண்டி கனத்தது. ஐஸ் பெட்டியை நெஞ்சில் போட்டுக் கொண்டு, ஹாண்டில் பாரில் இடது கையும், ஐஸ் பெட்டியில் வலதுகையும் போட்டு வண்டியைத் தள்ள... தெருப்புழுதிக்குள் புதைகிற டயர்...

உயிர் உருவாக்கிக் கொண்ட சோர்வு. மனசைத் தளர வைக்கிற அயற்சி. வாழ்க்கையே போக்கிடமற்று திகைத்து தேம்பி நிற்கிற மர்மமான பயம்.

முந்தியெல்லாம் இப்படியில்லை. வேறு மாதிரியிருந்தது. நன்றாகவேயிருந்தது. அப்போதெல்லாம் கிராமங்களில் ஐஸ் என்றால் அதிசயம். அபூர்வம். இளவட்டங்கள் கூட்டம் கூட்டமாக மொய்ப்பார்கள்.

"ஆவி வருது... ஆனா, சுடமாட்டேங்கது. எப்படிடா?"

“அதானேப்பா... அந்தக் கலர் என்ன... மினுமினுப்பு என்ன...”

“அதைவிடு... ஒரு குச்சியிலே தண்ணியை உக்கார வைச்சிருக்குற அதிசயத்தைச் சொல்லு... லேசுப் பட்டதா?”

“புடிச்சு வைச்ச கலர் பிள்ளையாரரா, குச்சியிலே உக்காந்துருக்கு. உறிய உறிய தண்ணியாகுது. கொடல் வரைக்கும் குளுருது.”

“அதிசயக்கூத்தாய்த்தான் இருக்கப்பா...”

அப்போதெல்லாம் இப்படித்தான் ஐஸைப் பற்றிப் பேசிப் பேசி ஆச்சரியத்தில் மாய்ந்து போவார்கள். இந்த ஊரில் அய்யப்பனுக்கு ‘ஐஸ்’ என்று சொல்லிவிட்டால் போதும். மிளகாயை அரைத்து அப்பியது மாதிரி சுள்ளென்று கோபம் வரும். நிதானம் கெட்டுப்போய் ‘தங்கு, புங்’கென்று குதிப்பான். வாய்க்கு வந்தபடி வைவான்.

சங்கரன் கோவில் வத்தல் விற்கப் போனவன் ஐஸைப் பார்த்து அதிசயப்பட்டு, ஆசைப்பட்டு “எம்புட்டு?” என்று கேட்க, “காலணா” என்று சொல்ல... “அடடே, ரூபாய்க்கு 64 ஐஸா? புள்ளைகளுக்கு வாங்கிட்டுப் போனா சந்தோஷப்படும்ங்களே” என்று ஆசைப்பட்டு... ஒரு ரூபாய்க்கு ஐஸ் வாங்கி, மேல் துண்டில் கட்டி முதுகில் போட்டுக்கொண்டு சொட்டுச் சொட்டாக முதுகில் நீர் வடிய... வீட்டில் வந்து பார்த்தால்... துண்டுக்குள் 64 குச்சிகள் மட்டும் கிடந்த வேடிக்கைக் கூத்து. கேவலக் கூத்து.

ஊமைக் கனா கண்டா யாருகிட்டே சொல்ல? அப்பவும் விஷயம் எப்படியோ கசிந்து சொட்டடித்து

விட, ஊரெல்லாம் தெரிந்து போய்... ஒரே சிரிப்பாணிக் கூத்து. இப்பவும் சொல்லிச் சொல்லிச் சிரிப்பார்கள்.

"அண்ணாமலைங்குறவரு எங்கயிருக்காரு?" என்று ஒருத்தர் கேட்டார். ஐஸ்காரர் "தெரியலியே" என்றார். பிறகு ரெண்டு மூணு பேரிடம் விசாரித்துப் பார்த்தார். அவர். ஒரு பெரியவர்தான் கைநீட்டி ஐஸ்காரரைக் காட்டினார்.

"அந்தா இருக்கான்லே... அவன்தான் அண்ணா மலை"

"அவருகிட்டேயே கேட்டேனே..."

"அந்த நாய் சொந்தப் பேரையே அயத்துருக்கும். 'ஐஸ்காரரு, ஐஸ்காரரு'ன்னு ஊரே சொல்லுதுல்லே?"

பதினேழு வயதில் ஐஸ் பெட்டியையும், சைக்கிளை யும் தூக்கியது. முப்பது வருஷச் சங்காத்தம். ஆசை ஆசையாய், மகிழ்ச்சியாய் கூத்தாடிய உறவு.

தண்ணீர் பாய்ச்சப்போன இடத்தில் ஏற்பட்ட தவறுதலுக்காக புஞ்சைக்காரரிடம் அடிவாங்கிய அவமானம் தாங்காமல் ஐஸ் பெட்டியைத் தூக்கிய அண்ணாமலை.

இப்ப வரைக்கும் நீடிக்கிறது.

ஐஸ்கார அண்ணாச்சி... ஐஸ்காரத்தம்பி... ஐஸ்கார மாமா... ஐஸ்கார மாப்புள்ளே... ஐஸ்காரத் தாத்தா... இப்படியே கேட்டுக் கேட்டு, நினைவு தாண்டிய மனஆழத்திலும் பதிந்து போய்விட்டது, ஐஸ்காரர் என்ற உணர்வு.

அண்ணாமலை என்று அப்பா அம்மா வைத்த பெயர் மறந்து போய், சுயமரியாதையோடு வாழணும்

என்ற வேட்கையுடன் துவக்கிய ஐஸ் வியாபாரத்தின் பட்டப்பெயரே நிலைத்துப் போயிற்று.

ஊரைக் கழித்தால்... ரோடு. நட்டுக்குத்தலான ஏற்றம். உன்னி உன்னி பெடலை மிதித்தாலும் சைக்கிள் நகராது. சீட்டைவிட்டு எழுந்து, மூச்சைப் பிடித்து மிதித்தால் தான்... கொஞ்சமாவது நகரும். ஐஸ் பெட்டி கனம் வேறு, விற்காத மிச்ச ஐஸ் வேறு, பிரேதம் மாதிரி. ச்சேய்.

கொண்டுபோய் கம்பெனியில் ரிட்டன் தந்தால், முதலாளி சுள்ளென்று விழுவார். கடுப்பும் சிடுசிடுப்பு மாக கங்குச்சிதறலாக தெறிப்பார்.

“ஜீவனுக்குத் தக்கன செவராத்திரி கொண டாடணும். எம்புட்டு விக்குமோ... அம்புட்டுத்தான் கொண்டு போகணும். அள்ளிக்கிட்டு போறது, அலுங் காம கொண்ணாந்து கொட்டுறது... ச்சேய்! கரண்டுக்குப் புடிச்ச வெனையா?”

அவமானமா இருக்கும். ஊசிக்குத்தலாக மனசு கிடந்து வலிக்கும். இருக்கும் ரூபாயையும், சில்லறை யையும் வழித்துக் கொட்டிவிட்டு... வெறும் பையை தடவிக்கொண்டு போக வேண்டியதுதான்.

முந்தியெல்லாம் இப்படியில்லை. கூலிக்கு தண்ணீர் பாய்ச்சப் போனவன் பதினைந்து ரூபாயோடும், வசவு வாங்கிய வேதனையோடும் திரும்புவான். அப்போதே இவன் ஐம்பது ரூபாய்க்குக் குறையாமல் வீடு திரும்புவான். ‘அடி’ என்கிற ராசாவுமில்லை, ‘பிடி’ என்கிற மந்திரியுமில்லை. தானே ராஜா, தானே மந்திரி. சொந்த ராசாங்கம். சுயமரியாதை.

ஏவாரத்தில் ரொம்பக் கருக்கடை. கூடுதல் அக்கறை. மானமே அதுதான் என்கிற ஒட்டுதல். விடியற் காலம்

அஞ்சு மணிக்கெல்லாம் கம்பெனி முன்னால் நிற்பான். அஞ்சு மைல் சைக்கிள் மிதித்து வந்த களைப்பு, வியர்வைத் துளியில் தெரியும். ஆர்வப் பரபரப்பில் மிதப்பான்.

நாலைந்து பேர் அவசரப்படுவார்கள். எனக்கு முந்தி, ஒனக்கு முந்தி என்று ஒரே போட்டி.

இவனுக்குத்தான் ராஜ மரியாதை.

"யப்பா... நீ மொதல்லே ஐஸைப் புடி."

"சரி... மோலாளி."

வட்ட வட்ட நார்த்தட்டுகளில் ஐஸ்களை எண்ணிப் போட, எண்ணிப்போட... அவற்றை வாங்கி ஐஸ் பெட்டிக்குள் தட்ட வேண்டும்.

"சரிப்பா... ஒனக்கு சாதா எத்தினி?"

"எரநூறு."

"நேத்திக்கு ரிட்டன் உண்டா?"

"இல்லே மோலாளி... மூணு மணிக்கெல்லாம் பெட்டி காலி."

"அதுதான் ஏவாரிக்கு லட்சணம். சரி... பால் எத்தினி?"

"நூறு போடுங்க..."

"ம். சேமியா?"

"ஐம்பது போதும் மோலாளி..."

"ரைட்... நீதான் ராசிக்காரன். அதான்... ஒனக்கு மொதச்சரக்கு."

"ஆட்டும் மோலாளி... எண்ணிக்கை கொறைஞ் சிராம..."

"அதெல்லாம் கரெக்டா இருக்கும். பேச்சு பேச்சாக இருந்தாலும், காரியத்துலே கண் இருக்கும்."

"நேத்திக்கு எடுத்த சரக்கு ரூவா இருக்கு... மோலாளி. வாங்கிக்கிறீகளா?"

முதலாளி ரெண்டு கையிலும் ஆவி பறக்கிறது. முழங்கை வரைக்கும் ஐஸ் சாயம். ஈர நசநசப்பும். ரூபாயை எப்படி வாங்க?

"ரூவாயை எண்ணிட்டியா? கரெக்டா இருக்கா?"

"இருக்கு."

"அப்பச் சரி. ஒன்னை நம்பாம, யாரை நம்ப? நீயே ஏஞ் சட்டைப் பையிலே ரூவாயை திணிச்சிரு."

ரூபாயைத் திணிப்பான். அடுத்த வியாபாரியிடம் பேச்சு கொடுப்பார்.

"ஒனக்கு சாதா எம்புட்டு?"

"எரநூறு."

"நேத்து ரிட்டன் உண்டா?"

"உண்டு மோலாளி..."

"அப்ப... நூறு போதும். பால்?"

"நூறு."

"அம்பது போதும். சுடுகாட்டுக்குப் போறது திரும்பக் கூடாதப்பா. கை கழுவிட்டு வந்துரணும். ரிட்டன், ரிட்டன்னு நெதம் இதே கூத்துத்தானா? ச்சேய்! அந்தா... அண்ணாமலையைப் பார்த்தாச்சும் அக்கறையா நடந்துக்கோங்கப்பா..."

முதலாளியின் சொற்கள் முத்துச் சொற்கள். இவன் காலடி பூராவும் தூவிப் போட்ட பூச்சொற்கள். சொற்

கிரீடம். புகழ் மகுடம். மனசைப் போதை வயப் படுத்துகிற மாயச் சிம்மாசனம்.

பெருமிதம் பொங்கி வழியும்.

அப்போது வியாபாரம் மும்முரமாக நடக்கும். ஐஸ் என்றால் கிராமங்களில் ஆலாய்ப் பறப்பார்கள். காய்ச்சல்காரர்கள் கூட கண்டும் காணாமல் ஓர் ஐஸை வாங்கி... சர்ர் புர்ர்ரென்று உறிவார்கள். "ஷ்ஷ்ஷ்... ஷ்ஷ்ஷ்"ஷென்று ருசிப்பார்கள். நாக்கிலும் உதடுகளிலும் ஒட்டியிருக்கிற கலர்களில் ஒரு மனக்குதூகலம். சிறுவனுக்குரிய விளையாட்டுத் துள்ளல்.

கம்பெனியை விட்டுக் கிளம்பினால்... ரெண்டு மைலில் சாமிநாதபுரம். காலை வியாபாரத்தை அங்கேயே துவக்கிவிடுவான்.

"பப்பாய்ங்... பப்பாயிங்ங்..."

ஹாரனின் அலறல். அலறல்கள். கூடவே அவனது கூவல்கள்.

"ஐஸ்... ஐஸ்ஸே... பால் ஐஸ்... சேமியா ஐஸ்ஸே..."

ஓங்கிய குரல், 'ஐஸி'ல் சாதாரணத் தொடக்கம். பால் ஐஸில் சற்றே இறுகும். திருகலாகும். சேமியா ஐஸில் முறுக்கேறிப் போய் பிரிகிற குரல், ரெண்டு குரல் போல மாயங்காட்டும்.

ஐஸ்பெட்டி மூடி திறந்து திறந்து மூடுகிற 'டொப், டொப்'பென்ற சத்தமும் கூடவே.

எட்டு மணிக்கெல்லாம் முதல் துட்டு வந்துவிடும். ஒரு பாட்டம் வியாபாரம், மும்முரமாக. சில்லரைப் பைய வயிறு உப்பும்.

ஊரைத் தாண்டினால், கரிசல் காடு. காட்டு வேலைக்குப் போகிற— வருகிற—பெண்கள். கூட்டம் கூட்டமாக ஐஸ் வாங்குவார்கள்.

“பால் ஐஸ் ஒண்ணு.”

“சேமியா ஐஸ்.”

“இது வேண்டாம். எனக்கு செவப்பு ஐஸ் வேணும்.”

“எனக்கு முக்கோண ஐஸ் குடு...”

கடந்து வந்தால்... புஞ்சைக் காடு. காடு கரைகளில் பருத்தி எடுக்கிற—களை வெட்டுகிற ஆட்கள். சத்தம் போட்டு ஐஸ்கார சைக்கிளை நிறுத்தி... ஓட்டமாய் ஓடிவந்து வாங்குவார்கள். வழிநெடுக ஏவாரம்.

பதினோறு மணிக்குள் ஆமர்நாடு வந்தாக வேண்டும்.

‘ஒன்றுக்கு’ மணியடிக்கிற நேரம். கால் முளைத்த வண்ணத்துப்பூச்சிகளாக ஓடி வருகிற பிள்ளைகள். முகங்களில் பூஞ்சிரிப்பின் ஒளி மின்னல்கள். ஐஸ் வாங்குகிற மகிழ்ச்சி. ‘ஷ்ஷ்’ஷென்று உறிகிற உறிஞ்சில் மனத்துள்ளல்.

“எனக்கு ஒன்று, ஒனக்கு ஒன்று” என்று சள்ளை பறிகிற கூட்டம். கூவல்காடு. பூஞ்சிட்டுகளின் மொய்ப்பு. தள்ளுமுள்ளு. ஒரே சத்தக்காடு.

ஏவாரம் தூள் கிளப்பும். கலர்கலரான ஐஸ்களை வாங்கி, “ஷ்ஷ்ஷ்”ஷென்று ரசனையோடு உறிஞ்சுகிற பிள்ளைகள். ருசியை ரசிக்கிற நாக்கில் லொட்டைகள்.

அப்புறம் ஊர்த்தெருக்காடு. மதியம் ஒரு மூச்சு ஏவாரம். சாப்பாடு. பீடி, டீயடிப்பு. மூன்று மணிக் கெல்லாம் பெட்டி காலியாகிவிடும்.

வெறும் பெட்டி. கனத்த சில்லரைப்பை. மனம் நிறைந்த குதூகலம். சந்தோஷ நினைவுகள். 'லாபம் எவ்வளவு' என்று நினைத்து நினைத்து மகிழ்ந்து மாய்கிற மனசு. அலுப்பு தெரியாது. இருபது வருஷம் ஒரு மாயம்போல ஓடிவிட்டது.

இப்ப இப்ப... நிலைமையே தலைகீழ். இவனுக்கு ஏவாரத்தில் ஏகப்பட்ட சரிவு. இவனுக்கு மட்டுமில்லை, எல்லோருக்குமேதான். அன்றாடம் பதினெட்டு பெட்டிகள் ஐஸ் அழியும். இப்ப ஆறு பெட்டிகள்தான். அதுவே 'ஆத்தாடி, அம்மாடி' என்று தடுமாறுகின்றன. நாடு முழுக்கவே ஐஸ் வியாபாரம் கரைகிறது.

ஐஸ்காரருக்கு ஏகப்பட்ட சரிவு. கடன்கள். சைக்கிள் டயர் தேய்ந்தால், மறு டயர் போடக்கூட வழியில்லை. கைக்கும் மெய்க்கும் காசில்லை.

முதலாளி இப்ப இப்ப சிடுசிடுக்கிறார். "நீயுமா ரிட்டன் தாரே?" என்று சீறுகிறார். மகுடம் சூட்டியவர். சொற்கிரீடம் மாட்டியவர். மாயச்சிம்மாசனம் மாயமாய் போயிற்று. என்னாச்சு? எங்க போச்சு? யாரு தட்டிப் பறிச்சது? தெரியலியே... ஓர் இழவும் புரியலியே..."

மனக்குழப்பம் தாளாமல் நாலைந்து ஜோஸ்யர் களிடம் ஜாதகத்தை நீட்டிப் பார்த்தான். அவர்களும் வைக்கிற தட்சணைக்கேற்ப நல்வாக்குகள் சொல்லத் தான் செய்தனர்.

தார் ரோடு, நாய் வாயில் சிக்கிய சர்க்கரைச் சாக்காக தாறுமாறாகக் கிழிந்து கிடக்கிறது. லோடு குறையாத சைக்கிள். குழிகளில் விழுந்து எழுகிறபோது, அலைக்கழிக்கிறது.

பெடல் மிதிந்து பெடல் மிதிந்து உள்ளங்கால்களின் ரணம் தொடைச்சதையெல்லாம் குடைச்சல்... குறுக் கெலும்புகளில் வேதனை.

"ச்சேய்... வெத்துப் பாடாய் போச்சே... லாபமில்லாத வெட்டி வேலையாகிப் போச்சே..."

ஐஸ்காரருக்குள் எரிச்சல். சலிப்பில் குமைகிற மனம்.

ஏன் இப்படி? எதனாலே இப்புடி? ஐஸுக்கு மதிப்பில்லாமப் போனதென்ன? நம்ம பொழைப்புலே மண்ணள்ளிப் போட்டது யாரு? ஐஸ் கம்பெனிகளே கரைஞ்சு போறதுக்கு என்ன காரணம்?

கேள்விகள் அணி வகுக்கின்றன. சட்டையைப் பற்றி உலுக்குகிற கேள்விகள். வழி கேட்டு வந்து, வழி மறிக்கிற முரட்டுக் கேள்விகளின் மூர்க்கம்.

காலையிலே ஒண்ணு, சாயங்காலம் ஒண்ணு பதிவா வாங்கிக்கிட்டிருந்த அருஞ்சுனை ஏன் வாங்கலே? எதனாலே வாங்கலே? என்ன மர்மம்?

எல்லாக் கடைகளிலும் நீலக்கலர் விளம்பரம். இல்லாட்டி சிவப்புக் கலர் விளம்பரம். பெரிய பெரிய விளம்பரம். தண்ணீருக்குள்ளிருந்து கலர் வருகிற மாதிரி... கலர் பாட்டிலிலிருந்து மூடியும் தண்ணீரும் பீறிடுகிற மாதிரி... விதம்விதமான விளம்பரம். சுவர்களில்—பஸ்களில்—டி.வி.யில்—கிரிக்கெட் மட்டையில்—கடவுள்மாதிரி நோக்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கிற ராட்சஸ விளம்பரம். அமிதாப்பச்சனே ஆசைப்படுகிற கலர். மாதவனே குடிக்கிற கலர். சீமைக்கலர். சீமைக்காரன் கலர்.

எல்லாக் கடைகளிலும் சிவப்பிலும் நீலத்திலும் பெரிய பெரிய ஃப்ரிஜ்கள். அதற்குள் கலர்கள். ஆவி பறக்கிற சிலிர்ப்போடு குடிக்கிற பெரிசுகள், சிறிசுகள். அதைக் குடிப்பதை கௌரவமென நினைக்கிற கித்தாய்ப்பு. இளவட்டங்களின் மொய்ப்பு.

மறுநாள் ஐஸ் கம்பெனி முன்னால் நிற்கிறார் ஐஸ்காரர். வாழ்க்கையை வாழ்ந்து கழிக்கணுமே என்கிற விரக்தியின் உச்சம்.

பெட்டியை சுத்தம் செய்து, உள்ளிருந்த தகரச் சுவர்களை சரிபண்ணி, இடையில் வெள்ளை ஐஸ் பார்களைச் சொருகி...

"ம்... சாதா எம்புட்டு?"

"நூத்தைம்பது."

"நேத்து ரிட்டன் ரொம்ப. நூறு போதும்."

"பால்... நூறு."

"அம்பது போதும். பாக்கலாம்."

ஐஸ்காரருக்கு முகத்தில் ஈயாடவில்லை. செருப்படி பட்ட மாதிரி அவமானம். முத்துச் சொற்களை—பூச்சொற்களை வீசிய முதலாளி. இன்றைக்கு—

கற்களை எறிகிறார். முட்களைச் சொருகுகிறார்.

பதினோறு மணி. பள்ளிக்கூடத்தின் முன்னால் தயார் நிலையில் ஐஸ்காரர்.

"ஐஸ்... ஐஸ்ஸே... பால் ஐஸ்... சேமீயா ஐஸ்ஸே..."

"பப்பாயிங்... பப்பாயிங்... பப்பாயிங்..."

பெல் அடித்துவிட்டார்கள். தெறித்து வருகிற தட்டைப் பயிரென துள்ளி வருகிற சிறுவர்கள் பட்டாளம்.

ஏனோ தானோவென்று நடக்கிற ஐஸ் வியாபாரம்.

அருஞ்சுனையை இன்னும் காணோம். எங்க போயிட்டான்? எல்லாக் கூட்டமும் வழிந்துபோன பிறகு, பின்னால் வருகிறான். அவனுடன் இன்னொரு பூச்செண்டு.

"ஏண்டா அருஞ்சுனை, ஐஸ் வாங்கலியா?"

"வாங்கலேடா."

"ஏன்... உங்க அப்பா காசு தரல்லியா?"

"தந்துருக்காரு. சேத்து வைச்சிருக்கேன்."

"சேத்து வைச்சு?"

"ஃபிரிஜ்லே வைச்சிருக்கிற கொக்கொ கோலா வாங்கிக் குடிக்கப் போறேண்டா... டி.வி.யிலேயெல்லாம் காட்டுவாங்கல்லே?"

"நல்லாருக்குமா?"

"ம்... ரொம்ப டாப்பா இருக்கும்."

"அப்பச்சரி... நானும் ஐஸ் வாங்கலே. சேத்து வைச்சிருக்கப் போறேன்... துட்டை."

ஐஸ் பெட்டியைக் கடந்து போகிற அந்த இந்தியப் பூச்செண்டுகள்.

ஐஸ்காரருக்குள் சுரீரிடுகிற வெறுமை.

—தேவி வாரஇதழ். 5-9-2001

# ஏல வியர்வை

'வேலைக்கு வாரியா'ன்னு கேட்க ஊரில் ஒரு நாதியில்லை, மாயழகுக்கு. இவனும் தெருவிலேயே உழன்று உழன்று வட்டமடித்துத் திரிந்தான், சின்னப் பூனை மாதிரி. தெருவில் தென்படும் சம்சாரிகள் ஒவ்வொருத்தர் மூஞ்சி முகரையையும் நிமிர்ந்து நிமிர்ந்து பார்க்கிறான். ஏக்கப்படுகிற மனசு, பார்வையில். "என்னப்பா, மாயழகா? ஒரு ஜோலி இருக்கு. ஒனக்கு வரத் தோதுப் படுமா?" என்று ஒருத்தராச்சும் கூப்பிட்டுவிட மாட்டார்களா என்றொரு தாகம்.

யாரும் கூப்பிடவில்லை. நிமிர்ந்து நிமிர்ந்து பார்க்கிற இவனை, ஒரு தினுசாகப் பார்த்துவிட்டு நகர்கிற ஊர்க்காரர்கள்.

அவர்கள் மேலும் வஞ்சகமில்லை. இவனை என்ன, ஊரை விட்டா தள்ளி வைத்திருக்கிறார்கள்? வேலைக்கு கூப்பிடாமல் ஒதுக்குவதில் அவர்களுக்கென்ன லாபம்?

தை மாசம். மானாவாரிப் புஞ்சைகளில் நடக்கிற வேலையெல்லாம் முடிந்துவிட்டது. நாற்று நரம்பு அறுத்தாகிவிட்டது. உளுந்தங்காய், பாசிப்பயற்றுக் காயெல்லாம் களம் வந்து, வீடு சேர்ந்தாகிவிட்டது. கடலை வெட்டு முடிந்து காசாகிவிட்டது.

இனியென்ன... வாழ்ந்து களைத்த கிழவனைப் போல... அறுவடை முடிந்த கரிசல் காடு, வெம்பரப் பாகக் கிடக்கும். ஆடு குட்டிகள், மாடு கன்றுகள்தாம் காய்ந்த அருகுகளை கறும்பிக் கிடக்கும்.

இறவைப் புஞ்சைகளிலெல்லாம் ஒரு வெள்ளாமை விளைச்சல் கிடையாது. நோய் நொடிகளில் பருத்தி மிளகாய் வெள்ளாமை நொடித்துவிட்டது.

ஒரு பாடு ஜோலி கிடையாது, இன்னும் ரெண்டு மூனு மாசத்துக்கு. மாயழகுக்கு மட்டும் எங்குட்டு வேலை கெடைக்கும்? வேலையில்லாமல் கூலிக்காரன் எப்படிப் பிழைக்க?

நீலக்கலர் முண்டாப் பனியனைக் கழற்றித் தோளில் போட்டிருதான், மாயழகு. கட்டம் போட்ட துண்டு, வட்டக் கட்டாக தலையில் சுற்றியிருந்தது. சாம்பல் நிறக் கைலியை மடித்துக் கட்டியிருந்தான்.

திண்ணையில் வந்து உட்கார்ந்தான். உயிர் துவண்டவனைப் போல வாடியிருந்தான்.

“என்ன... துட்டுதுக்காணி சிக்குச்சா?” உள்ளிருந்து வருகிற மனைவியின் குரல், வாழ்வின் உலுக்கலாக இருக்கிறது.

“ப்ள்ச்சூ! இல்லே...”

“யாரும் வேலைக்கு கூப்புடலியா?”

என்ன இழவோ தெரியவில்லை. சுள்ளென்று எகிறிக்கொண்டு வந்தது கோபம், மாயழகுக்கு. புண்ணைக் குத்திக்காட்டி, ‘என்ன’ என்று கேட்பது போலிருக்கிறது, மனைவியின் கேள்வி.

கோபமாய் வீட்டுக்குள் பார்த்தான். மனசின் கங்குகள், வார்த்தைகளாக தெறிக்க முயன்று... கோப முணுமுணுப்புகளாக உதடுகளுக்குள்ளேயே வீழ்ந்தன. எரிச்சலும், கடுப்புமாக மட்டியைக் கடித்தான்.

"என்ன... சத்தத்தையே காணலே?" மறுபடியும் அவளின் சத்தம். அவனுக்குள் சண்டாளமாய் பொங்கிப் பாய்ந்த ஆத்திரம். குபீரென்று பாய்ந்து, தலைமுடியைப் பிடித்து இழுத்துப் போட்டு, நாலு மிதி மிதித்துவிடலாமா என்று வருகிற மூர்க்கம்.

'வீடு நாறிப்போகுமே' என்ற நினைப்பு உயிர் பெற்ற தனால், கட்டுப்படுத்திக் கொண்டான்.

அப்பவும் திமிறித் தவிக்கிற மனவேகம்.

'தெருநாய் மாதிரி ஊரைச் சுத்திட்டு, 'லோ, லோ'ன்னு அலைஞ்சுட்டு... வாடி வதங்கி வந்து சேந்துருக்கேன். 'தண்ணி குடிக்கீயா, காப்பித்தண்ணி சாப்புடுதீயா'ன்னு நாலு குளிர்ந்த கேள்வி கேட்டுட்டு... பெறகு கேளேன், வேலை கெடைச்சுதான்னு?

வந்து சேர்ந்துருக்கேன், உசுர் அ(று)ந்து போய். வாயைத் தொறந்து கேக்காள், அதிகாரமா! ச்சேய். மனுசத்தன்மையில்லாத பொட்டக் கழுதை...'

தீச்சட்டியில் விழுந்த சோளமாக பொறித்துச் சிதறுகிற நினைவு வெக்கை. கங்கு நினைவுகள்.

தண்ணீர் ததும்புகிற நிறை செம்போடு வாசலில் நிற்கிற பொட்டு. முகமெல்லாம் வியர்வை. காதோர ரோமக்கற்றை, வியர்வையில் நனைந்து கழுத்துவரை ஒட்டிக் கிடக்கிறது. வலதுகையில் ஆவி பறக்கிற தம்ளரில் டீத்தண்ணீர்.

"ம்... இந்தாங்க..."

நிமிர்ந்து பார்த்த மாயழகுக்குள் ஓர் அலைபாய்வு. முகத்துக்கும் செம்புக்குமாய் மேலும் கீழும் போய் வருகிற அவனது பார்வை. பார்வையில் திகைப்பு. கொதிப்பு மாறிய திகைப்பு.

"என்ன... பே(ய்)முழி முழிக்கீக?"

குற்ற உணர்வில் சுருதி குறைந்த குரலில் "ஒண்ணு மில்லே" என்றான்.

பக்கத்தில் செம்புத்தண்ணீரை வைக்கிறபோது, தோள் பட்டையில் உரசுகிற அவள் திரேகம். வியர்வை வாசம். அவன் தோளில் கிடந்த பனியனை எடுத்தாள்.

"தண்ணியைக் குடிச்சுட்டு, காப்பியைக் குடிங்க."

"இந்நேர வரைக்கும் என்ன செய்ஞ்சுக்கிட்டிருந்தே, உள்ளே?"

"ஊம்? நீங்க கட்டி வைச்சிருக்குற ஊஞ்சல்லே ஆடிக்கிட்டிருந்தேன்..."

செல்லக் கோபமாக உறுமுகிற பொட்டு.

"உள்ளேயிருந்துக்கிட்டு கேள்வி மேலே கேள்வியா கேட்டுக்கிட்டிருந்தே?"

"ஆமா...?"

"பதில் சொல்லிட்டேனா?"

"சொல்லிட்டீகள்லே?"

"நா எங்க சொன்னேன்?"

"சொல்லாம இருக்குறதே, ஒரு பதில்தானே? 'போன காரியம் காய்'னு புரிஞ்சுபோச்சுல்லே? இனியும் புளியைப் போட்டு தொலக்கணுமாக்கும்?"

நீலப்பனியனை கயிற்றுக் கொடியில் போட்டுவிட்டு பக்கத்தில் உட்கார்ந்தாள். முந்திச் சேலையால் முகத்து வியர்வையைத் துடைத்துக் கொண்டாள்.

சாயங்காலப் பொழுது, வீடுகளின் நிழல்களை தரைமுழுக்க நீட்டிப் பரத்தியிருந்தது.

தை மாசத்து மேகம் தேன்தட்டாக கனத்துத் தொங்கியது. ஒரு மாதிரியான புழுக்கமும் இறுக்கமுமாக இருந்தது. மழை வருமோ...?

'தை மாசத்து மழை தவிட்டுக்கும் ஆகாது' என்பது சொலவடை. உப்புக்கல்லுக்குப் பெறாது. இறவைப் புஞ்சைகளில் காயும் பூவுமா காய்ப்புழுவுமாக பருத்தி வெள்ளாமை. மழை வந்தால், சர்வநாசம்தான். கரிசல் காடுகள் களைத்துக் கிடக்கிற நேரம்.

மாயழகு செம்புத்தண்ணீரைக் குடித்து காலி செய்தான். டீயைக் குடித்தான். மடியிலிருந்து பீடியை யெடுத்து பல்லில் வைத்தான். நுனியைக் கடித்துத் துப்பிவிட்டு, பற்ற வைத்தான். காந்தலான பீடிப்புகை... டீயின் உஷ்ணத்தோடு சேர்ந்து அவனுக்குள் வருடியது. நாசித்துவாரங்களில் சீறிய புகைக்கோட்டில் அவன் மனச்சுமையும் இறங்குவது போலிருந்தது.

எதையோ மறந்துபோனதை நினைவுபடுத்திக் கொண்ட மாதிரி கூச்சலிட்டாள், பொட்டு.

"ஆ...ங்! அயத்துப் போய்ட்டேனே, ஒங்ககிட்டே சொல்றதுக்கு."

"என்னத்தை?"

"மயிலேறியண்ணன் ஒங்களைத் தேடிக்கிட்டு இங்க வந்தாரு... 'மாப்புள்ளே இருக்காரா'ன்னு கேட்டாரு. 'இல்லே'ன்னேன்."

*"என்னவாம்?"*

*"அது சொல்லலை. முக்கியமான ஜோலியாம். நீங்க அவரு வீட்டுக்குப் போகணுமாம்."*

*'என்னவாக இருக்கும்' என்ற கேள்வி, மாயழகின் கண்ணில் இன்னும் நின்றது. அதே கண்ணோடு பொட்டு முகத்தை திரும்பிப் பார்த்தான்.*

*உதட்டைப் பிதுக்கினாள், பொட்டு.*

*அவனுக்குள் ஒரு குடைச்சல். மர்மக் குறுகுறுப்பு. 'என்னத்துக்கு தேடியிருப்பாரு?'*

*தலைத்துண்டை அவிழ்த்து, முதுகுக்கு பரத்திவிட்டு சுவரில் சாய்ந்தான், மாயழகு. நீட்டிய கால்களைப் பின்னிக்கொண்டான். சுவரின் துறுத்தல்கள், முதுகுத்தோலை உறுத்திற்று.*

*அடுப்பங்கரைக்குள் விறகுக் குச்சிகளை ஒடிக்கிற சத்தம். அலுமினியச் சட்டிகளின் அலுங்கல் சத்தம். புகைக்குள் இருமிக்கொண்டே அடுப்பை ஊதுகிற சத்தம்.*

*மாயழகுக்குள் நீண்டு, வளைந்து, நெடிது சுருண்டு பயணப்பட்ட யூக நினைவுகளை அறுத்துக் கொண் டான்.*

*'போய் என்னன்னு கேட்டுட்டா... புடிபட்டுப் போகும் விஷயம்? இதுலே என்னத்துக்கு யோசிப்பு?'*

*"சரி... பொட்டு, போய்க் கேட்டுட்டு வந்து குளிக்கவா? குளிச்சிட்டுப் போகவா?"*

*"போய்ட்டு வாங்க. கைக்குள்ளேயும், காலுக் குள்ளேயும் ஜோலிக கெடக்கு."*

துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு எழுந்தான். “அப்ப... போய்ட்டு வாரேன்...”

“வெருசா வந்து சேருங்க.” துரத்திக்கொண்டு வருகிற பொட்டுவின் அக்கறை.

மாயழகு இந்த ஊரைத் தாண்டியறியாதவன். குளத்துத் தவளை மாதிரி இவன். இவனுக்கு இதுவே உலகம். காட்டுவேலை என்றால், கரும்பு மாதிரி. பேய் வெறிகொண்டு கடித்து ருசிப்பான். மாடெல்லாம் அரண்டு பின்வாங்க வேண்டும். அப்பப்படி உழைப் பான்.

அதிலும் ‘பாத்தி கட்டு’ என்றால், மாயழகுதான். உழவுப் புழுதிக்குள் அவன் இறங்கிவிட்டால், மண் வெட்டி, சிற்பியின் உளியாகிவிடும். வாய்க்கால், கத்திமாதிரி கச்சிதமாக இருக்கும். உச்சி வகிர்ந்தெடுத்த மாதிரி ‘கண்டங்கதிக்கா’ இருக்கும். அச்சில் வார்த்த மாதிரி, பாத்திகள். சதுரம் சதுரமாக... ஒரு சீராக... ஓவியம்போல் பேசும்.

அதேமாதிரி... கரிசல் காட்டில், டக்கர் வேகத்துக்கு ஓடிக்கொண்டே வரிசை தப்பாமல் விதை போட வேண்டுமா? குறுக்கத்துக்கு ரெண்டு கிலோ ஒட்டுக் கம்பு விதையை... மணல் கலந்து... ‘சள், சள்’ளென்று கை வீசி, ஒரு சீரான சிதறல்களோடு விதைக்க வேண்டுமா? மாயழகுதான், பேரழகு.

எல்லா விவசாய வேலைகளும் மாயழகுக்கு, மீன் குஞ்சு நீச்சல்மாதிரி, அத்துபடி. ரத்தத்தில் கலந்தது.

ஆனால், கல்யாணம் காட்சி, இழவு காடேத்து என்று வெளியூர் போகவேண்டிய கட்டாயம் வந்தால்,

'எனக்கென்ன' என்று ஒதுங்கிக்கொள்வான். எல்லா 'நல்லது, பொல்லது'களுக்கும் பொட்டுதான் போய் வரணும். இவன் போகவே மாட்டான். ஒரேயடியாக மறுத்துவிடுவான்.

இந்த ஊர், அவனைப் பொறுத்தவரை மீனுக்குத் தண்ணீர் மாதிரி. இந்தத் தண்ணீர்தான் இந்த மீனுக்கு வாழுமிடம், உயிர், எல்லாமே.

கர்நாடகா பக்கம் இந்த ஊர் இளவட்டங்கள் சிலபேர் 'கரண்டு வேலைக்கு'ப் போய்வந்தனர். ஆரல் வாய்மொழியில் அணைக்கட்டு வேலைக்கு சிலர் போய்வந்தனர். கேரளாவில் பத்தட்டைக்கு கல்குவாரி வேலைக்குப் போய்வந்தனர்.

வந்து கதைகதையாகப் பேசுவார்கள். சிரிப்பும் கும்மாளமுமாக பேசிக் கூத்தடிப்பார்கள். கூத்தும் குதியாளமுமாக கும்மியடித்து குதூகலித்தாலும்... ஊட ஊட... ஒரு சோகம் வந்து போகும்.

"பாண்டிப்பயக படுபாதகப்பயக."

"வந்தட்டி (வந்தேற்றி)ப் பயலுக்கு வாயைப் பாரு?"

"உங்க காட்டுப் புத்தியை இங்க காட்டாதீகடா?"

என்று பேசியதாக இடைஇடையே வருகிறபோது... அவர்களுக்குள் இழிவும், அவமானமும் சோகமும் ஒரு மேக நிழலாக வந்து மறையும்.

அதை இவன் அடிமனசு தொட்டுணரும்.

'நல்ல வேளை... நாம போகலே' என்று மனசுக்குள் சொல்லிக் கொள்வான், மாயழகு.

'கண்காணாத, தூரம் தொலைவான அத்துவானக் காட்டிலே—அயலூருலே—அந்நிய மனுசங்க மத்தி

யிலே... ஒத்தையாளா குன்னிக் குறுகி நிக்குற அந்தப் பயங்கரப் பரிதாபத்துலே தான் சிக்காம தப்பிச்சிருக் கிறது, 'பெரிய அதிருஷ்டம்தான்' என்று மிகப்பெரிய ஆறுதலாக நினைத்துக் கொள்வான்.

நடுத்தெரு டீக்கடையில் நெருக்கியடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தனர், டி.வி. சினிமா பார்க்க. பால் பீய்ச்சப்போன பசுமாடுகளும் ஆட்களும் சொஸைட்டி யிலிருந்து திரும்பிக்கொண்டிருந்தனர். டக்கரில் கோபுரம் போல 'உசரமாக' பாரமேற்றிப் போயிற்று, நாற்றுக்கூளம்.

"கடைப்பாக்கி எழநூறு ரூவாய்க்கு மேலே போயிருச்சு. எனக்கும் சரக்குப் போட, கைமாத்து குடுக்க தட்டுப்பாடாயிருக்கு. கடனைக் குடுக்கற வழியைப் பாரு."

கடைக்காரனின் கண்டிப்பான குரல், மாயழகு மனசுக்குள் முள்ளாக அழுத்திக் கொண்டிருந்தது.

கூலி வேலை கிடைக்காமல், கூலிக்காரன் குடும்பம் எப்படி நடக்கும்? பத்து நாளாக ஒரு வேலை ஜோலி கிடைக்கவில்லை. இன்னும் ரெண்டு மூனு மாசத்துக்கு கூலிவேலை கிடைக்காது. எப்படிச் சமாளிக்க? எதை வைச்சுச் சாப்பிட? மானமரியாதையை எப்படிக் காப்பாற்ற? கண்ணுமுழி பிதுங்கிப் போகுமே...

தாய்மடி மாதிரியிருந்த கிராமம், விவசாய நொடிப் பால் நாதியற்ற பிள்ளையாகத் தவிக்கவிட்டு விடுமோ...

"போனமாசமே ஏழெட்டு நாள் கழிச்சுத்தான் சீட்டு ரூவா குடுத்தே. இது ஒனக்கு அழகுல்லே, மாயழகு.

டாண்ணு ஒண்ணாந்தேதி குடுத்தாகணும். அதா...ன், மரியாதை."

சீட்டுக்காரரின் அன்பும் அச்சுறுத்தலுமான தந்திர மிரட்டல்.

மாயழகுக்குள் கலக்கம். அடிவயிற்றுக்குள் ஜில் லிட்டுப் பாய்கிற ஒரு சூன்ய உணர்வு. பதற்ற மடைந்து பரிதவிக்கிற மனசு.

வழியறியாத இருட்டுக்குள் வகையாக மாட்டிக் கொண்ட மாதிரியோர் பகீர் உணர்வு.

உழைக்க திடமிருக்கு. உருப்படியான திறமையிருக்கு. உழைக்குற மனசும் இருக்கு. அப்படியிருந்தும் பொழைக்க வழியில்லே. பொழுதை நகர்த்தப் பாதை யில்லே. என்னாச்சு? ஊரு ஒலகம் எங்க போகுது? சொந்த ஊர்லேயே உழைக்குறவனுக்கு ஆணிவேரு அறுபடுதா? தாய்மடியே அந்நியமாகுதா?

மாயழகுக்குள் மாயம் காட்டுகிற வாழ்க்கை. மருளச் செய்கிற சிக்கல். மூச்சுத் திணறச் செய்கிற கழுத்து நெரிப்பு.

'ஒரு எழவும் புரியமாட்டேங்குதே' என்று சோர் வுடன் நினைத்துக்கொண்ட மாயழகிடமிருந்து, ஒரு பெருமூச்சு இரைச்சலுடன் வெளிப்பட்டது.

மயிலேறி, வீட்டுவாசலில் எதிர்பார்த்து நின்ற வனைப் போல தயாராக நின்றான். உற்சாகமாக வரவேற்றான்.

"மாப்புள்ளே... வா வா..."

"மச்சான், தேடி வந்தீகளாமே... பொட்டு சொன்னா."

“ஆமா... மாப்புள்ளே.”

“என்ன வெஷயம், மச்சான்?”

“ஒரே எடத்துலே பத்துக் குறுக்கம். சமுத்திரம் மாதிரி. முழுக்க சீமைக்கருவேலி மரங்க. அசோகவனமா செழிச்சுக் கெடக்கு.”

“அதுவும் அப்புடியா?”

“ரேட் பேசி அட்வான்ஸ் போட்டாச்சு. வெட்டி வெறகாக்கி, கரிமூட்டம் போடணும். இருவது நாளாகும். இங்கயிருந்து ஒம்பதாளுக வர்றாக. நீயும் வந்தா... பத்து ஆளாகும். வாரியா மாப்புள்ளே?”

“வெறகு வெட்டவா?”

“ம்... சாப்பாடு கீப்பாடு போக... சம்பளம் எழுவது ரூவா தந்துருவாக.”

“எங்க?”

“கீ காட்லே. இங்கயிருந்து அறுபது மைல் தள்ளி யிருக்கு... அந்த ஊரு.”

“கீ(ழ்) காட்லே... நம்ம காட்டாளுகளை மதிக்க மாட்டாகளாமே...? ரொம்ப ஏளனமா எடுத்தெறிஞ்சு பேசுவாகளாமே?”

“அது என்னமோ... நமக்குத் தெரியாது, மாப்புள்ளே. நாம் என்ன அவுககிட்டே சம்பந்தமா பண்ணப் போறோம்? அவுக மதிக்காட்டா, நமக்கென்ன நட்டம் வந்துச்சு? வேலை ஜோலி இல்லாத காலத்துலே வேலை கெடைக்குது. போய் பாடுபடப் போறோம். சம்பளம் வாங்கப் போறோம். அது அம்புட்டுத்தானே?”

"ம்ம்... அப்படியா... மச்சான்...?" துண்டு துக்காணியாக நீண்டு உடைகிற சொற்கள். தயக்கத்தில் நொண்டியடிக்கிற மனசு.

'அசலூர்லே போய்... அகதிப் பொழைப்புலே அவமானப்படவா?'

மாயழகுக்குள் மருகுகிற மனத்தவிப்பு.

இதேமாதிரி... போனவருஷமும், அதற்கு முந்தைய வருஷமும் மயிலேறி இவனைக் கூப்பிட்டிருக்கிறான். அப்போதெல்லாம்—

மாயழகு சொன்ன பதிலே வேறு. தன்னம்பிக்கையும், கம்பீரமுமான பதில்.

"உள்ளூர்லே வெலை போகாத கள்ளமாடுதான் வெளியூர்ச் சந்தைக்குப் போயாகணும். மச்சான். நா... நல்ல மாடு. உள்ளூர்லேயே கிராக்கியோட வெலை போகும். தெரியுமா?"

அப்படிச் சொல்ல... தோது இருந்தது. தோரணை இருந்தது. கரிசல்காட்டில் வேலையற்றுப் போனாலும், கிணற்று இறவைப் புஞ்சைகளில் வேலை கிடைக்கும், அப்போது. இப்போது—இறவைப் புஞ்சைகளில் பருத்தியும், மிளகாயும் வெள்ளாமை பேதியெடுத்து விட்டது. நாசமாகிவிட்டது. காய்ப்புழு, சம்சாரிகளின் வாழ்க்கையையே துளை போட்டுவிட்டது.

அம்மிச் சம்சாரியே ஆடிக்காற்றில் அலைக்கழிகிற போது... கூலிக்காரத் துரும்பு இவன். என்னாகும்? கதை, கந்தலாகும்.

ஆகிப்போச்சு. என்ன செய்ய?

*கடைக்காரர் மிரட்டல். சீட்டுக்காரர் அதட்டல். வேலையில்லாத வெறுமை. நாட்களை நகர்த்துவது எப்படி என்ற கேள்வியின் பயங்கரம்.*

*"இப்பவும் ஏங்கூட 'நா வாரேன், நீ வாரேன்'னு ஏழெட்டுப் பேரு போட்டி போடுதாக. நீ நமக்கு வேண்டிய ஆளு. நீ வரல்லேன்னு சொல்லிட்டாத் தான், வேற ஆளைக் கூட்டிட்டுப் போகணும். என்ன சொல்லுதே?"*

*"ஆமாமா... வேலை ஜோலி கெடையாம ஊருஜனம் அலைமோதுறாகளே... கண்ணுமுழி பிதுங்குதே..."*

*"சரி... மாயழகு மாப்புள்ளே... என்ன சொல்லுதே... நீ?"*

*"ஊரு கெட்டுக் கெடக்கு. நாறிக் கெடக்கு நம்ம நெலவரம். என்ன செய்ய? வவுத்துப் பாட்டுக்கு வளைஞ்சுதானே ஆகணும்? வாரேன்... மச்சான்."*

*இதைச் சொல்வதற்குள்—*

*உயிர் ஒடுங்கிப் போகிற மாதிரியோர் அவமானம். குரல் நடுக்கம். குலை பதற்றம். புறஉலக மூர்க்கத்தில் மூர்ச்சையாகிப் போன உழைப்புக் கம்பீரம், வியர்வையை ஏலம் போட ஊர்ஊராக அலையச் சம்மதிக்கிற கணத்தில்—*

*மாயழகுக்குள் ஒரு மரணம் நிகழ்ந்தது.*

—நிலவளம், பிப்ரவரி-2002.

ரூ. 3000 பரிசு பெற்ற
பவள விழா முத்திரைக் குட்டிச் சிறுகதை

# உயிர்ச்சுமை

மொடாப்பானையாகப் பருத்திருக்கிற வயிறு... திண்ணையில் உட்கார்ந்து சுவரில் சாய்ந்திருக்கிற வெள்ளச்சி. மூச்சிரைக்கிற உயிர்ச்சுமை.

"பருத்து எறங்கியிருக்கிற வகுறைப் பாத்தா... இதுவும் பொட்டையாய் தானிருக்கும் போலிருக்கு..."—சுமந்து பெற்று அனுபவப்பட்ட பெண்களின் வருத்தத் தொனி. 'ஐயோ, பாவம்' என்கிற அனுதாபத்தொனி, வெள்ளச்சியை அறுக்கிறது. 'பொட்டச்சின்னா, அம்புட்டு மட்டமா?' தன் பிறப்பின் மீதே கசப்பு வந்தது அவளுக்கு. பயமும் அவமானமுமாக உள்ளுக்குள் வதைபடுகிறாள். ஆயாசப் பெருமூச்சு.

வீட்டுமுற்றத்தில் வீராச்சாமி, வேதனை தாளாமல் கதறுகிற வெள்ளாட்டுக்குப் பக்குவம் பார்க்கிறான். ரெண்டு பின்கால்களையும் அகலித்து வைத்துக் கொண்டு வலியில் திணறி கனைக்கிறது. படுக்க முனைகிற ஆட்டைப் படுக்கவிடாமல் தாங்கி நிறுத்த மல்லுக்கட்டுகிறான்.

"கனைக்காதே... முக்கு. ரெண்டு முக்குலே குட்டிக வந்துரும். ஏங்கண்ணுல்லே? செல்லம்லே?"

*இவன் தமிழ் புரியாது. குரலின் குழைவு புரியும். மனஉணர்வின் மொழி புரிகிறது. அதன் இதமான வருடலில் அவனைப் பார்க்கிற வெள்ளாடு. அதன் கண்ணில் நீர்க்கோடு. வாயிலிருந்து வழிகிற வெண்ணிற நுரைச்சங்கிலி.*

*இவனது கெஞ்சல், பாடுகள், பக்குவக் கவனிப்பு... வலியால் புல்லரிக்கிற அதன் முதுகை நீவுகிறான். அதன் இறுகலான கதறல்.*

*அதன் பின்பகுதியில் நீர்த்தன்மையுடன் கசிகிற ஜவ்வைத் துடைத்துத் துடைத்து எடுக்கிறான். சில நிமிஷத்திலே—*

*நனைத்தெடுத்த துண்டுத்துணியாக கன்னங்கரேலென்று ரெண்டு குட்டிகள். தாங்கிப் பிடித்துத் தரையில் விடுகிறான். மண்ணின் மடிதொட்ட புதிய உயிர்க் கனவுகள். அதன்மேல் அப்பிக்கிடந்த நீர்ஜவ்வுகளை வழித்தான் வீராச்சாமி.*

*“ஐய்ய்க்க்! ஐய்ய்க்க்!”*

*அந்த வேதனையிலும் திரும்பிப் பார்த்தாள் வெள்ளச்சி. அவன் முகத்தில் மகிழ்வின் மலர்ச்சி. மனஉற்சாகத்தின் மின்னல்.*

*“என்ன, கும்மாளம் போடுதே... தங்கக்கட்டியா பொறந்துருச்சு?”*

*“ஆமா... தங்கக்கட்டிகதான். ரெண்டுமே பொட்டைக்குட்டிக. பொம்மறிக. வம்சம் பெருகும். வீடு விருத்தியாகும்.”*

*முகமெல்லாம் பூத்த பெருமிதப் பூரிப்போடு வெள்ளச்சியைப் பார்த்தான். அவன் குரலில் ஒரு துள்ளல்.*

"இது ராசியான வெள்ளாடு. போன தடவையும் பொம்மறிகதான் ஈண்டுச்சு. இந்த ஈத்தும் பொம்மறிக தான். நல்ல வம்சம்..."

வெள்ளாட்டைப் புகழ்ந்து தள்ளிய வீராச்சாமி, பூரிப்பும் மகிழ்ச்சியுமாகக் கூத்தாடினான். அவனையே வெறிக்கிறாள்.

மழலைச் சுமையில் திணறித் தவிக்கிற அவள்— 'இதுவும் பொட்டைதான்' என்ற நினைப்பில் வெட்கிக் குமைந்து கொண்டிருக்கிற வெள்ளச்சி—

வெள்ளாட்டை ஒரு புதிராகவும் பொறாமை யோடும் பார்த்தாள்.

—ஆனந்த விகடன், 6-1-2002

# நாய்க்கழுதை

என்னிடம் ஒரு காரியமாக வந்திருந்தான் காளி. நரைத்த ரோமங்கள் கன்னத்தில். தாறுமாறான கலைந்த முடியில் பாதி நரை, முழங்கால் மறைக்கும் வேட்டி. மேலுடம்பில் ஒன்றுமில்லை. போட்டிருந்த துண்டையும் எடுத்து உள்ளங்கையில் வைத்துக் கொண்டான். கறுத்த உடம்பில் கால் பதிக்கிற முதுமை.

வாசலுக்கு வெளியே செருப்பைக் கழற்றியதில் ஒரு பணிவு. உடம்பைக் குறுக்கிக் கொண்டதில் ஒரு குழைவு. இடது கையில் துண்டு இருக்க, வலது கையால் தலை சொறிந்து கொள்கிற பாங்கில், மனசின் நெளிவு. கறை படிந்த பற்கள் வெளித்தெரிய ஒரு குழைவுச் சிரிப்பு.

வாசல் படியில் கால் வைக்கக் கூசிக்கொண்டு தயங்குகிற அவன்.

"என்ன காளி..." உற்சாகமாக எழுந்து வரவேற்க முன்னேறுகிற நான். என் முகத்தில் மலர்ந்த சிரிப்பு. பால்ய கால சினேகிதனைப் பார்த்ததும் பாலாய்ப் பொங்கி வழிகிற இளமைக் கால நினைவுகள். அஞ்சாப்பு வரைக்கும் கூடப் படித்தவன். சின்ன வயதில் ஒண்ணாயும் மண்ணாயுமாகக் கலந்து கிடந்தோம்.

*"சும்மா... உங்களைத்தான் பாக்க வந்தேன்... ஒரு முக்கிய வெஷயமா..."*

*"சரிசரி... உள்ளே வா... வாசல்லேயே நின்னா எப்படி?"*

*"இருக்கட்டும்... இப்படி வாசல்படி ஓரத்துலேயே ஒக்காந்துக்கிடுதேன்"*

*"அந்தச் சோலியே ஆகாது. உள்ளே வரணும். சேர்லே உக்காரணும். அப்புறம்தா, வந்த காரியம் பேசணும்."*

*"அய்யய்யோ... அதெல்லாம் வேண்டாம். எளிய சாதிப் பயலுக்கு எதுக்கு இந்த உபச்சாரம்?"*

*"சாதியென்ன சாதி! பொடலாங்காய்ச் சாதி. படிக்குறப்ப நீ தெனம் தெனம் அவிச்ச கடலை தருவியே, நானும் உரிச்சு உரிச்சுத் திம்பேனே... இன்னும் அந்தக் கடலை ருசி மனசுக்குள்ளே மணக்குது."*

*"அய்யய்யோ...இன்னுமா அதையெல்லாம் யாவுகத்துலே வைச்சிருக்கீக? நல்ல கூத்துதான்."*

*வாசலை ஒட்டிய நடையில் உட்காரப் போன காளி துண்டைக் கீழே போட்டு அதில் உட்காருவதற்கான யத்தனிப்பு.*

*"காளி..."*

*சற்றே கத்தலான தொனியில் எனது சீறல்.*

*உட்காரக் குனிந்த நிலையில் திகைத்துப் போய் அவன். வித்தியாச கோணத்தில் அவனது ஸ்தம்பிப்பு.*

*"உள்ளே வந்து சேர்லே உக்கார்றதுன்னா... உக்காரு, இல்லேன்னா வெளியே போயிரு."*

கோபமாக வெளிப்பட்ட எனது அன்பு. சீறலாக வெடித்த தோழமை. கண்டிப்புத் தொனியில் என் மரியாதை.

"ஐயே... உங்ககிட்டே வந்தது தப்பாப் போச்சே... எளிய சாதிப்பயலை சமதையா மதிச்சு நீங்க நடத்துனா... உங்களை உங்க சாதிக்காரவுக ஏளனமாப் பேசுவாக."

"பேசினா பேசிட்டுப் போகட்டும். ஊர்க்காரவுகளா ஏங்குடும்பத்தை ஏந்தித் தூக்குதாக? நாந்தானே என்னைக் காப்பாத்திக்கணும்? இதுலே மத்தவுக ஏளனமும் எதிர்ப்பும் என்னை என்ன செய்ஞ்சிரும்?

காளி தர்மசங்கடமாக நெளிந்தான். என் முகத்தைக் கவலையோடு ஏறிட்டான். என்னை என் போக்கில் விட்டுவிடுங்களேன் என்று கெஞ்சுகிற கண்கள். மருகித் தவிக்கிற கண்கள்.

"என்னத்துக்கு இப்படி மருகுறே. காளி?"

"நீங்க தங்கமான மனுசரு. என்னை மனுசனா மதிச்சு நடத்துவீக. மூனாவது ஆளு யாராச்சும் வந்து என்னைக் கேவலமாய்ப் பேசிட்டா? எளிய சாதிப் பயலுக்கு இம்புட்டுக் கொழுப்பான்னு கேட்டுட்டா? அந்த அவமானத்தை நான் தாங்க முடியாதே..."

அவன் அடிமனதைக் கொட்டுகிற நட்புரிமை. உள் மனப் பயத்தின் முகத்தைக் காட்டுகிறான். மூனாம் மனுசரின் அவமதிப்பு வந்தால் என்ன செய்ய என்கிற அவனது நியாயமான பதைப்பு.

ஆயினும், இது என்னுள் ஆத்திரத்தையே ஏற்படுத்தியது. சாதி என்னும் படிநிலை அமைப்பில் பழகிக் கிடக்கிற ஊரின் கட்டுக்கோப்புக்குள் நீயும்

கட்டுப்பட்டவன்தானே என்று சொல்லாமல் சொல்லிக் காட்டுகிற தொனி.

என் உள் மனம் உணர்ந்தது. எனது ஜனநாயக உணர்வைவிட சாதியமைப்பு உண்மையானது. உறுதி யானது. வலிமையானது. இது நிஜம்தான் என்று உணர்ந்த உள்மனம், ஒப்புக்கொள்ள மறுக்கிறது. கெத்து விடாமல் சவடால் பண்ண வார்த்தைகளைத் தேடு கிறது.

"என்னோட வீட்லே வந்து இன்னொருத்தன் அதிகாரம் பண்ணிருமாக்கும்? அதைக் குரைக்கவிட்டு நா வேடிக்கை பாப்பனாக்கும்?"

"நீங்க வேடிக்கை பாப்பீகன்னு நா சொல்லலை. ஊர்லே சாதி நெனைப்பு அப்புடி ஊறிக் கெடக்குன்னு சொல்லுதேன்."

"ஊரு கெடக்கட்டும்... ஊரு...உள்ளே வந்து உக்காரு, காளி."'

என்னுடைய சளைக்காத வற்புறுத்தல். குரல் தணிக்காத உஷ்ணத்தொனி. பின் வாங்காத நச்சரிப்பு.

காளியை வாசலைத் தாண்டி வரவழைத்தது. நடையைக் கடந்து உள்ளே வருவதற்குள் முக்கி, முனுங்கி, தக்கித் தயங்கி, சிணுங்கி, சிரமப்பட்டு...

வந்துவிட்டவனை சேரில் உட்கார வைப்பதற்குள் 'ஆத்தாடி, அம்மாடி' என்றாகிப் போய்விட்டது. சேரில் உட்கார்ந்தாலும், உட்காராத நிலை. நுனியில் தொடுகிற வேட்டி. சாய்ந்து நிமிர்ந்து உட்காராத தர்மசங்கடம். முள்ளின் மேல் உட்கார்ந்திருப்பதைப் போன்ற தவிப்பு. சிக்கிக் கொண்ட எலியைப் போல கண்ணில் ஒரு பயப் பதைப்பு.

இவ்வளவு சிரமப்படுத்தி அவனைப் பாடாய் படுத்தி மரியாதை தந்திருப்பதில் அவன் மூச்சுத்திணறினான். வகையாய் வந்து மாட்டிக் கொண்டோமே என்கிற திகைப்பு. பரிதவிப்பு.

நானும் ஒரு சேரில் உட்கார்ந்துகொண்டேன். என் உதட்டில் ஒரு புன்சிரிப்பு. சற்றே கேலியான சிரிப்பு.

"என்ன சிரிக்கீக?" தர்மசங்கடமான நெளிவில் கேட்கிற காளி. கையில் கிடக்கிற துண்டை என்ன செய்ய என்ற யோசனை. தோளில் போடவா? தலையில் கட்டிக் கொள்ளவா? கீழே போட்டுவிடவா?

பிடிபடாத யோசனையின் நீட்சியில் துண்டை மடியில் போட்டுக் கொண்டான்.

"என்ன சிரிச்சீக?" மறுபடியும் கேட்டான். என்னுள் பூத்து வெடிக்கிற குறுநகை.

"ஒண்ணுமில்லே."

"சும்மா சொல்லுங்க..."

"வா... உக்காருங்கற சாதாரணச் சொல்லை எம்புட்டுப் பெரிய வேலையா ஆக்கிட்டே... நீ?"

"நானா?"

"பெறவு?"

"ஊரு நெலமை நாட்டு நடப்பு."

"அதுவும் சரிதான்."

ஒப்புக்கொண்ட மனநிலையில் நான். எனக்குள் இன்னொரு குறு குறுப்பு.

நாலு வருடம் உடன்படித்தவன். சாதி தெரியாத சின்ன வயதில் கவலையற்று ஓடிப்பிடித்து விளையாடி

யவன். அவித்த கடலை தந்தவன். காராச்சேவு வாங்கித் தின்றவன்.

பால்யகால நட்பு. தோழமை. சாதி புரியாத சமதைச் சினேகம். அவன் சோற்றில் நானும், என் சோற்றில் அவனும் கை வைத்த உரிமை.

ஆனால்... இப்போது—

வளர்ந்துவிட்ட வயது. தனித்தனிக் குடும்பம். தனித்தனித் தொழில். அவரவர் சாதிக்குள் கொள் வினை, கொடுப்பினை. சாதி வட்டத்துக்குள் சுழல்கிற வாழ்க்கைப் பயண வட்ட ஓட்டம்.

வட்டம் தாண்டி ஓட முனைகிற எனக்கு வழி காட்டியாக ஒரு தத்துவம். ஒரு சமூக இயக்கம். சாதிய நிஜத்தைப் பொய்யாக்கி, மானுடம் எனும் கனவை மெய்யாக்க மெய்யாகவே நினைக்கிற சமூக இயக்கம்.

அந்த இயக்கம் என்னை மனிதனாக்குகிறது. மனிதத் தன்மையை எனக்குள் பூட்டி அலங்கரிக்கிறது. என்னைச் சலவை செய்து செய்து... தோழனாக்குகிறது.

காளியை மனிதனாக மதிக்கச் சொல்கிறது. வற்புறுத்தி வாதாடி, அதட்டி கண்டித்து அவனை அழைத்து சேரில் உட்காரவைக்கும்படி என்னை இயக்குகிறது.

இத்தனைக்கும் பின்னால்—

அவனை நான் ஒருமையில் பேசுவதையும், அவன் என்னை 'நீங்க, வாங்க' என்று பன்மையில் பேசுவதை யும் நான் சுகமாக அனுமதித்துக் கொண்டிருக்கிறேன். அனுபவித்துக்கொண்டிருக்கிறேன். அது எனக்குள் உறுத்தவில்லை.

எனக்குள் நானே என் தோலை உரித்துக் கொண்டிருந்தேன். என் மனத்தோல். என் மனதின் உள்தோல்.

"அப்ப... நா வந்த காரியத்தைச் சொல்லட்டா?"

காளியின் பம்மலான குரல்.

உள்ளின் நினைவுகளை சிலுப்பி உதறிவிட்டு அவனை நிமிர்ந்தேன். ம்... சொல்லு."

"எம் பொண்ணு பத்தாப்பு வரைக்கும் படிச்சிருக்கா. பாஸாயிட்டா. அவளுக்குக் கல்யாணம் மூய்ச்சிருக்கேன்..."

"ம்... சரி"

"பத்து வரை படிச்ச பொட்டப் புள்ளை கல்யாணம் ஆச்சுன்னா... கவர்மெண்ட்லே பத்தாயிரம் ரூவா தருவாகளாம்லே?"

"ம்... ஆமாம்..."

"அதுக்கு நா என்ன செய்யணும்? யாருகிட்டே போய் கேக்கணும்?"

"சமூக நலத்துறையிலே."

"அது எங்க இருக்கு?"

"சத்துணவுப் பள்ளிக்கூடத்துக்கு... ஆடிட் பண்ண வர்றாரே, அவருதான் சமூக நலத்துறை ஆபீஸர்..."

"நா என்ன செய்யணும்? என்ன வழிமுறை? எப்புடிக் கேக்கணும்? எனக்கு ஒரு எழவும் தெரியலே. குருட்டுப் பயலா கண்ணைத் தொறந்துக்கிட்டு திரியுதேன். அதான்... உங்ககிட்டே வந்தேன்."

நான் சேரில் சாய்ந்தேன். நிமிர்ந்தமர்ந்து எனது கண்களை மூடினேன். எனக்குள் வேறொரு ரசனை.

'குருட்டுப்பயலா கண்ணைத் தொறந்துகிட்டு திரியுதேன்...' கவித்துவம் தெறிக்கிற இந்த வரியின் எளிமையையும் அழகையும் உள்ளுக்குள் ரசிக்கிறேன். அறியாமையைச் சொல்கிற கவிதாஞானம்.

பாமர மொழியின் வீர்யம் குறித்த நினைவுகள் எனக்குள் பின்னிக்கொண்டு என்னை இழுத்துச் செல்ல.. கண்மூடிய நிலையில் என் பயணம்.

"என்ன... யோசிக்கீகளா?" காளியின் மென்மையான குரல் எனக்குள் சாட்டையடியாக விழுந்தது. என் நினைவை சமூக நலத்துறை நோக்கித் திருப்பியது.

விண்ணப்பம் எப்படி எழுத... யாரிடம் தருவது... எப்படித் தருவது. என்னென்ன சர்டிபிகேட் வாங்குவது, என்னென்ன ஆதாரம் தருவது என்பது பற்றியெல்லாம் விளக்கமாக, விலாவாரியாக, சொல்லச் சொல்ல...

காளியின் கண்ணில் மருட்சி. குழப்ப உணர்வின் திகைப்பு. புரியாமையின் தவிப்பு.

"புரியமாட்டேங்குதா?"

"நீங்க நல்லாத்தான் சொல்லுதீக. எனக்குத்தான் ஒரு மண்ணும் புரியலே..."

மீண்டும் நான் முதலிலிருந்து சொல்ல ஆரம்பித்தேன்.

அப்போது—

வாசலில் ஒரு நிழல். ஓர் ஆளின் வருகை.

"யாரது?"

"நான்தான்."

வெள்ளைச்சாமி நின்றான். எனக்கு ஒன்றுவிட்ட தம்பி. ஒன்று விட்ட பெரியப்பாவின் மகன்.

"என்ன வெள்ளைச்சாமி?"

"முந்தாநாள் உங்ககிட்டே முன்னூறு ரூவா கைமாத்து வாங்கிட்டுப் போனேன்லே? அதைத் திருப்பிக் குடுத்துட்டுப் போகலாம்னு வந்தேன்..."

அவனாகவே நடையைத் தாண்டி உள்ளே வந்துவிட்டான். "யாரது.. சேர்லே? காளியா?"

பணத்தை நீட்டுகிற வெள்ளைச்சாமியிடமிருந்து வெளிப்படுகிற விஷமமான கருப்புக்குரல்.

"ஆமா... சாமி..."

வெள்ளைச்சாமி முகத்தில் வெளிப்படையான வெறுப்புணர்வு.

பதறிப்பதைத்து எழப்போன காளியை என் பார்வை மௌனமாக அதட்டி உட்கார வைத்தது. என் முகத்தையும், அவன் முகத்தையும் மாறிப் மாறிப் பார்க்கிற அவன் முகத்தின் மருட்சி. கல்லைக் கண்டு தெறித் தோடுகிற பறவைப் பதற்றம்.

வெறுப்பின் முகச்சுளிப்போடு வெள்ளைச்சாமி.

"என்ன காளி... எளிய சாதிக்காரனெல்லாம் சேர்லே ஏறி உக்காந்த பெறகுதான், இயற்கையே தலைமாறி சுத்துது. மழை பேயாமக் காஞ்சு கெடுக்கு. இல் லேன்னா... ஒரேயடியா பெய்ஞ்சு கெடுக்கு. இல்லே?"

எகத்தாளமும் குத்தலுமான அவனது குதர்க்க வார்த்தைகள். எனக்கே எரிச்சலாக இருந்தது. வரம்பு மீறி வார்த்தைகளை வீசுகிறான். மமதை வார்த்தைகள்.

“வெள்ளைச்சாமி... வாயை நிப்பாட்டு. ரூவாயைத் தந்துட்டே இல்லே, பேசாமப் போய்க்கிட்டேயிரு...”

“நா போறேன். நாயைக் குளுப்பாட்டாம நடு வீட்லே வைக்குறீக. நாய்க்கு நட்டமில்லே. நடுவீடு நாறிப் போயிரப்போகுது.”

நாகரீகமேயில்லாத நாற வார்த்தைகளை எறிந்து விட்டு விறுவிறுவென்று வெளியேறுகிற வெள்ளைச் சாமி. அத்துமீறலான சொல்லாயுதப் பிரயோகம் செய்து விட்டு, எந்தவிதமான குற்றவுணர்வுமில்லாமல் போகிற அந்த வெள்ளைச்சாமி என்கிற சமகால நிஜக்குரூரத்தின் முதுகையே பார்க்கிறேன். அவன் இன்றைய சமூகத்தின் உருவம்.

கொதிப்பும் வேதனையுமாக கையறுநிலையில் காளியின் பக்கம் திரும்பினேன்.

குத்துண்ட பறவையாக தலைகுனிந்து கிடந்தான் காளி. அவமான அவஸ்தையில் அவன்.

பாவம்...

வழிகேட்டு வந்தவனுக்கு அடிவாங்கித் தந்து விட்டேன். வலி சுமந்து உள்ளுக்குள் துடிக்கிறான். சிங்காரித்து மூக்கறுபடச் செய்துவிட்டேன்.

என்ன சொல்லி அவனைத் தேற்றுவது?

எனக்குள் ஊமையாகிக் கிடந்த மனசு. தேடித் தேடிப் பொறுக்கிப் பார்த்தேன். ஒரு வார்த்தைகூட

தட்டுப்படவேயில்லை, சாதி வெறியின் குரூரத்தை உணர்ந்த அதிர்வில்தான்.

* * *

ஆறேழு மாசம் போயிருக்கும். வெள்ளைச்சாமி வீட்டுக்குக் கிழக்கில் நாற்றுச் சோளப் படப்பு அடுக்கு கிற வேலை மும்முரமாக நடந்தது. எளிய சாதிக்காரன் காத்தமுத்துதான் படப்பை வேய்கிறவன். வெள்ளைச் சாமி நாற்று, நரம்புகளை அள்ளி அள்ளிப் போட்டு உடம்பெல்லாம் தூசியும் துப்பட்டையுமாக இருந்தான். தூசியின் வடிவமாகவேயிருந்தான்.

படப்புக்கு உச்சியில் முகடு முடிந்து. சடை பின்னி விட்டு காத்தமுத்து வேலையை முடித்தான்.

“எறங்கணும்லே? போய்... யாருகிட்டேயாச்சும் ஏணி வாங்கி வாரும்யா”

“ஏணி யாருகிட்டேயிருக்கு? இருந்தாலும் தர மாட்டாக.”

“அப்ப... நா எப்புடி எறங்குறது?”

“அப்படியே காலை கீழே விடு. நா கையேந்துறேன். ஏங்கையிலே மிதிச்சுக்கிட்டு. எறங்கிரு.”

“அப்பச்சரி...”

தலைக்குமேல் கையுயர்த்தி வெள்ளைச்சாமி படப்புடன் ஒட்டி உள்ளங்கைகளை ஏந்திக் கொள்ள, அதில் கால் வைத்தான் காத்தமுத்து.

* * *

*மறுநாள்*

*"என்ன வெள்ளைச்சாமி"*

*"என்ன அண்ணாச்சி?"*

*"அன்னிக்கு... 'நாய்'. 'நடுவீடு'ன்னு எகத்தாளமாய் பேசுனே? நேத்து... கால் வைக்க கையேந்துறீயே காத்த முத்துவுக்கு?"*

*"ஆமா... காரியம் ஆகணும்னா கழுதைக் காலையும் புடின்னு சொலவடை இருக்குல்லே? "*

*இப்பவும் நான் அதிர்ந்து போய்விட்டேன். காத்த முத்துவையும் கழுதையாக்கிவிட்டான் வெள்ளைச் சாமி. காளியை 'நாய்' ஆக்கிய மாதிரியே...*

*காரியவாதிகளாகவும், சாதீயவாதிகளாகவும் சுழல்கிற நடப்பு.*

*என் மனசுக்குள்—*

*சமூக வெள்ளைச்சாமியே நாயாகவும், கழுதை யாகவும் தோன்றுகிறான். 'நாயும், கழுதையும் எப்பத் தான் மனுசனாகுறது?'*

—செம்மலர்-ஜனவரி 2002. பொங்கல் மலர்,

# நாளைய நனவு

பங்குனி மாசம். கோடை வெயில் தீயாகக் கொளுத்துகிறது. எருக்கலஞ்செடிகூட வாடுகிறது. சீமைக் கருவேலமரங்கள் வெக்கையைக் கக்குகின்றன. அனலைக் கக்குகிற வெயில்.

சுத்துப்பட்டி பத்து ஊரு ஜனமும் வந்து அந்தக் கரிசல் காட்டில் 'ஜேஜே' என்று குமிந்திருந்தனர். ஆணும் பெண்ணும் வெள்ளையும் சொள்ளையுமாக ஜொலித்தனர். திடீர் டீக்கடைகள், குளிர்பானக் கடைகள் முளைத்திருந்தன. ஒருத்தர் இளநீர் மலையும் அரிவாளுமாக நின்றார். கொண்டாட்டமும் குதூகலமுமாக ஜனக்காடு.

ஏதோ திருவிழாவுக்கு வந்திருந்த மாதிரி ஜனங்கள் முகத்தில் மகிழ்ச்சிப் பூக்கள். ஓட்டமும் விளையாட்டுமாக ஆர்வப்பிரவாகமாகச் சிறுவர்கள். ரெண்டொரு வாகனங்கள். விடியோ காமிராவில் முகம் காட்டக் கையசைக்கும் சிறுவர்களின் குதூகலக் கூப்பாடு. வெயில், உற்சாகக் குதூகலத்தின் முன் தோற்றது.

எட்டுக் குறுக்கக் கரிசல் காடும் சமதளமாகக் கிடந்தது. கரடு பத்திக் கிடந்தது. ஆத்திச் செடிகள்

வாடிப் போய்விட்டன. கொளுஞ்சிச் செடிகளும் கருகிக் கிடக்கின்றன. ஆதாளஞ்செடிகள்தாம் உயிர்ப்பச்சை யோடு நின்றன, சிறு சைஸ் ஆலமரம் மாதிரி.

எட்டுக் குறுக்கக் கரிசல் காடும் பதினாறு துண்டங் களாக வரப்பிடப்பட்டிருந்தன. அரைக்குறுக்கத்தைக் களை வெட்டணும் என்றால், ஆறு ஆள் செல்லும்.

மூன்று வேன்கள் வந்து 'சர்ர்புர்ர்' என்று நின்றன. அதிலிருந்து பதினாறு பெண்கள் இறங்கினர். பஞ்சாபி, அரியானா, உ.பி., ம.பி., மே.வங்காளம், ஒரிசா, கர்நாடகம், ஆந்திரா என்று பல மாநிலப் பெண்கள். அதில், நம்ம தமிழச்சி பூவாத்தாளும் ஒருத்தி. இந்த ஊர்க்காரி. சேரிப் பெண்.

சலித்துச் சலித்துக் கழித்தது போக, எஞ்சியிருந்தது இந்தப் பதினாறு பேர்தான். எல்லாருக்குமே வயசு முப்பதுக்குள்தான். அவரவர் மாநில மண்ணுக்குரிய உடைகளில், கட்டுமஸ்தான—கச்சித உடம்பு. உருண்டு திரண்ட கைகள். வெயிலடிபட்டுக் கன்றிப்போன கோதுமை நிறம். குத்துரல் மாதிரி தாட்டியமான திரேகம். நடந்தால் தரையதிரும் 'திம்திம்' என்று. கச்சிதமான முகவெட்டு. மின்னுகிற கண்கள். அளவெடுத்துச் செய்த சிற்பங்கள்!

**க**தர் வேட்டி இடுப்பில் கட்டி இருந்தார் கோவாலு நாயக்கர். கறுத்த மேனியைக் கபிலநிறக் கதர்த் துண்டால் மூடியிருந்தார். காலில் தோல் செருப்பு. கையில் இன்று புதிதாகக் கட்டிய ரிஸ்ட்வாட்ச்.

"ம்...ம்... வாங்க, பதினாறு பேரும் பதினாறு துண்டத் துல போய் நில்லுங்க. செருப்பெல்லாம் இருக்கக்கூடாது..."

பலமாகக் கத்தினார். பாஷை புரியாதவர்களுக் காகக் கைபாவனையும் செய்தார். விடியோக்காரர்கள் சகலத்தையும் வாரிச் சுருட்டினார்கள்.

பூவாத்தாளும் நின்றாள், மூன்றாவது ஆளாக. நல்ல கறுப்பு. கட்டைத் திரேகம். சதைப்பற்றான கை. உருட்டுக் கன்னம். நெல் கதிரறுத்து, களைவெட்டி, நாற்று நரம்பு அறுத்துக் காப்பேறிப் போன உள்ளங்கை. அழகுச் சிற்பம். வலிமைச் சிலை.

எல்லாரும் கோவாலு நாயக்கரையே பார்த்தனர். அவர் கையைத் தூக்கிக் கடிகாரத்தையே பார்த்தார். மதிய வெயில். தீத்தகிப்பு. கழுவித் துடைத்த ஆகாயம். தடையில்லா சூரிய எரிப்பு.

நிமிட முள் பன்னிரண்டிலும் மணி முள் பதி னொன்றிலும் வந்த கணத்தில்—வலது கையை உயர்த்தி ஆட்டினார். காதுகள் குடைந்து கூசகிற மாதிரி பலமாக விசிலை ஊதினார்.

**ப**தினாறு பெண்களும் மண் மாதாவைத் தொட்டு வணங்கிவிட்டு, களைசுரண்டியைக் கையிலெடுத்தனர். குனிந்து களைவெட்டத் துவங்கினர். பந்தயக் குதிரைகள் ஓடத் துவங்கிய மாதிரி ஒரு காட்சி ரிதம். அடுக்கி வைத்த பொருட்கள் சீரான ஒற்றுமையில் நகரத் துவங்கிய மாதிரியோர் நேர்த்தி. ஒழுங்கின் அழகு.

பூவாத்தாவும் களைவெட்டினாள். அவளுக்குச் சப்பென்றிருந்தது. சாகசமற்றிருந்தது. சின்னச் சின்னப் பருத்திச் செடிகளுக்குள் முளைத்துக் கிடக்கும் கோரை யையும் பசலியையும் செடி வெட்டுப்படாமல்

வெட்டுகிற வேகம் இருக்கிறதே... அது ஒரு சுகம். பச்சைப் புள்ளையாகக் குலுங்கும் பருத்திச் செடித் தூரில் சுரண்டி பட்டுவிடக்கூடாதே என்கிற பாசப் பதைப் புடன் வெட்டுகிறபோது, மனசுக்குள் ஓர் உணர்ச்சி வரும். ஈடுபாடு வரும். நம்ம வேலை மேலே நமக்கே ஒரு மதிப்பு வரும்.

இதென்னடா இழவு...? கரிசல் தரிசில் களைவெட்டு. வெறும் காய்ந்த கரடுகளையும் கருகிய ஆத்திச்செடி களையும் நீர் கோத்த ஆதாளையையும் வெட்டிச் சரித்து என்ன புண்ணியம்...? எந்த வெள்ளாமையும் இல்லாமல் வெறும் புஞ்சையில் உயிர் போகிற களைவெட்டா...?

நல்ல கூத்துதான். கேணப்பய கூத்து.

பூவாத்தாவுக்குள் ஏதேதோ நினைவுகள்...

சற்றுத் தள்ளிக் கூடி ஆரவாரிக்கிற மனிதக் கூச்சல். “ஹேய்... வுடாதே... முந்திரு... வுட்டுராதே...” என்கிற கூப்பாடு. உற்சாகப்படுத்துகிற உற்சாகக் கத்தல்.

அங்கே தன் மகளும் இருப்பாள். பள்ளிக்கூடம் போகாமல், ஊர்ப்பிள்ளைகளோடு வந்திருப்பாள். ஐஸ் வாங்கித் திங்க ரெண்டு ரூபாய் தந்திருந்தாள். என்னத்தை வாங்குனாளோ? எதுல துட்டைக் கரியாக்குனாளோ?

கரிசல் புழுதியிலே நிப்பாளே... கால் பொசுக்குமே... செருப்புகூட இல்லியே... என்ன செய்றாளோ...? எப்படித் துடிக்காளோ எம் புள்ளை... பூச்செண்டு... ஏங்கண்ணு... ஏந்தங்கம்...

அவளுக்குள் பாவாடைச் சிறுமி மீதான பாச உணர்வு, தனது வயிற்றில் உயிர் விழித்து உருவெடுத்து வந்த உயிர்ச்சுடர். தனது கனவுகளையெல்லாம்—மனசையெல்லாம்—நிறைக்கிற வம்சக் கொழுந்து.

நல்ல பாவாடை, சட்டைகூட இல்லை.

போன தீபாவளிக்குப் பூப்போட்ட பாலியஸ்டர் துணியெடுத்துச் சட்டையும் பாவாடையும் தைத்தது. அதற்குப் பணம் புரட்டவே 'ஆத்தாடி... யம்மாடி' என்று திண்டாடிப் போயிற்று.

அவள் 'சுடிதார்தான் வேணும்' என்று ஒற்றைக் காலில் நின்றாள். 'தங்குபுங்'கென்று குதித்து அழுதாள். தரையெல்லாம் புரண்டழுதாள். இழுத்து வைத்து, முதுகில் நாலு சாத்து அப்பின பிறகுதான், இவள் வேசடை தணிந்தது.

இப்ப இதுலே துட்டு கெடைச்சா, அவள் ஆசைப் பட்ட மாதிரி நல்ல சுடிதார் நாலு எடுக்கணும்—வகைக் கொண்ணு, கலருக்கொண்ணு. கழுத்துக்கு டாலர் வெச்சு ஒரு தங்கச் செயின் வாங்கிக் குடுக்கணும். கறுத்த பிள்ளை. கம்மல், மூக்குத்தி போட்டால் எடுப்பா யிருக்கும், சடங்கான பிறகு.

அதுக்கு இப்பவே வாங்கணும்.

ஒழுகுற கூரை, பிரிச்சுப் போட்டுட்டு ஓடு வாங்கிப் போடணும். உள்பக்கம் சுவர்கள்ல சிமெண்டு பூசணும். அடுப்பங்கரையைப் புதுசாக்கணும். பக்கத்துல குளிப்பு ரூம் ஒண்ணு கட்டணும்.

பூவாத்தாவுக்குள் ஓடுகிற எண்ணங்கள், அனுமார் வால்போல நீள்கிற ஆசைகள்... தேவைப் பட்டியல்...

'அதெல்லாம்... இதுல பணம் கெடைச்சாத்தானே...? பணம் நமக்குத்தான்னு என்ன நிச்சயம்...? இல்லாமப் போச்சுன்னா...?'

**டை**க்செட்டில் எம்.ஜி.ஆர். பாட்டு ஒலிக்கிறது.

'ஓடி ஓடி உழைக்கணும்
ஊருக்கெல்லாம் குடுக்கணும்
ஆடிப்பாடிப் பிழைக்கணும்
அன்பை நாளும் வளர்க்கணும்...'

இந்தப் பாட்டைத் திரும்பத் திரும்பப் போடு கிறார்கள். டி.எம்.எஸ்—ஸின் கணீர் குரலில் எம்.ஜி. ஆரின் உற்சாகத் துள்ளல்.

வெட்டுப்பட்ட கரிசல் புழுதி தீயாகச் சுடுகிறது. இரு கையிலும் சுரண்டி. மொங்குமொங்கென்று வெட்டுகிறாள். குனிந்த நிலையிலேயே குலுங்குகிற உடம்பு. பங்குனி மாச வெயில் முதுகை எரிக்கிறது. கழுத்தடியில் சரம்சரமாக வியர்வை. நாசி நுனியில் முத்துப் புல்லாக்குபோல வந்து நின்று குலுங்குகிற ஒற்றைத் துளி.

கட்கங்களில் வியர்வைக் கசகசப்பு. முக வியர்வையில் வந்து அப்புகிற கரிசல் தூசி. மண் புழுதி. மணிக்கட்டு வலிக்கிறது. தோள் புஜமிரண்டும் கழன்று போகிற மாதிரி ரணமெடுக்கிறது. குறுக்கெலும்புகள் குத்திக் குடைகின்றன. முதுகு முழுக்க ஓடியதிர்ந்து பரவுகிற வலி.

மற்ற பெண்களும் மூர்க்க வேகத்தில் வெட்டு கின்றனர். 'யார் முந்துவது...? யார், எப்படி, எவ்வளவு

வெட்டுவது...?' என்று ஏறிட்டு ஏறிட்டுப் பார்த்து வெட்டுகின்றனர். பதைப்பும் போட்டி உணர்வுமாக வேகம் காட்டுகின்றனர். இரு பக்கமும் பார்வைத் தாவல்களோடு அலைபாய்கிற மனவேகத்தில் களைவெட்டுகள்.

பூவாத்தா யாரையும் பார்க்கவில்லை. 'கூடப் பதினைந்து பேர் களை வெட்டுகின்றனர்' என்பதையே மறந்துவிட்டாள். கரட்டுமேடு, கொளுஞ்சிச் செடிகள், ஆத்திச் செடிகள், எருக்கலஞ் செடிகளை வெட்டிச் சாய்த்தாள். காலடியிலேயே நங்கூரமிட்டுப் போன பார்வை. ஒரு நிறை முடித்து, மறுநிறை திரும்பி விட்டாள்.

வேறு எதையும் நினைக்கவில்லை. வலிகளைக்கூட உணர்ந்த கணத்திலேயே ஒரு பெருமூச்சில் கரைத்து விட்டாள். வேலை... வேலை... வேலை...

கர்மமே சிரத்தையாகி, களைவெட்டே கர்மமாகி... முழுக் கவனமும் வேலையிலே குமிந்திருந்தது. உயிர் கலந்த ஆத்மார்த்தக் குவிமையம்.

பாட்டுச் சத்தம். மனிதர்கள் உற்சாகச் சத்தம். அவ்வப்போது கோவாலு நாயக்கரின் விசில் சத்தம். இளநீர்க்காரனின் கூப்பாடு. "ஐஸ்... ஐஸ்ஸ்... கோன் ஐஸ்ஸ், கப் ஐஸ்ஸ்... ஐஸ்... ஐஸ்ஸ்... சேமியா பால் ஐஸ்ஸ்ஸேய்..."—ஐஸ்காரரின் தாளலயம் தப்பாக ராகக் கூவல்.

மூன்றாவது நிறையில் மடங்கித் திரும்பினாள். இன்னும் நாலு நிறைகள்தாம். காலடிக்குள் சொந்த நிழல் மிதிபட்டது. உச்சி மதியம்.

'நமக்குப் பணம் கெடைச்சுட்டா நல்லது. வேணும்... தேவைப்படுது. நெறையச் செலவுக கெடக்குது. கடன்களை அடைக்கணும். கடைக் கடன், சீட்டுக் கடன், வட்டிக் கடன் எல்லாத்தையும் அடைச்சுக் கழிச்சிறலாம். மானமரியாதையோட வீதியிலே நடக்கலாம். வளர்ற புள்ளைக்கு நாலு செய்யணும். நகைநட்டு வாங்கணும்...

ஆ...ங்...! ரஞ்சிதம். மேல்சாதிப் பிள்ளை. ஏழைப் பிள்ளை. பிறந்த மறுவருஷமே ரெண்டு காலும் சூம்பிப் போச்சு. ஈரக்கயிறாகத் தொங்கிய கால். இப்ப... பானைஞ்சு வயசு. ரெண்டு கையையும் தரையிலே ஊனி, மொழங் காலாலே நடக்குற வன்கொடுமை. பெத்த வயிறு பத்தி எரியும் பாதரவு.

அதுக்கு ஏதாச்சும் செய்யணும்? என்ன செய்ய?

செலவோட செலவா ஏதாச்சும் ஒரு செலவை நிறுத்திக்கிட்டாச்சும் அந்தப் புள்ளைக்கு ஒரு மூணு சக்கரச் சைக்கிளு வாங்கித் தந்துரணும். கட்டாயமா வாங்கித் தரணும். சாமி சத்தியமா வாங்கித் தருவேன்...

அவளுள் நூல் பிடித்து ஓடுகிற நினைவுகள். நூலை அறுத்துக்கொண்டும் தாவுகிற நினைவுகள்... துண்டு துக்காணி நினைவுகள்...

பூவாத்தாவுக்கு நா வறண்டது. எச்சில் கட்டியாகி விட்டது. மாங்கு மாங்கென்று வெட்டிச் சரித்தாள். அப்பப்பக் குடிச்ச பச்சைத் தண்ணீர் போன இடம் தெரியவில்லை. மூட்டுக்கு மூட்டு எடுக்கிற வலியோடு பசியும் சேர்ந்துகொண்டது. வெட்டுப்பட்ட ஆதா ளையாக வாடித் துவண்டாள்.

மனசு துவளவில்லை. ஆசைகளின் பலத்தில்—பாச உணர்வு வலிமையில் ஆன்மத் தெம்போடு இயங்கினாள். மனவலிமையில் ஆறாவது நிறையும் களை வெட்டி முடித்து, கடைசி நிறைக்கு வந்துவிட்டாள். இப்போதும் அங்கிட்டு இங்கிட்டுப் பார்க்கவில்லை. வேறு யாரையும், எதையும் கவனிக்கவில்லை. கர்மமே கண்ணாக, கண்ணெல்லாம் கர்மத்தில்...

களைவெட்டுப் புழுதி காலைச் சுடுகிறது. மெத்மெத்தென்ற சூடு. எலும்பெல்லாம் பின்னியெடுக்கிற வலி. நரம்புகளெல்லாம் உருவிச் சரித்துவிட்ட மாதிரியோர் அயற்சி, சோர்வு. வியர்வைக் கசகசப்பு. கண்ணுக்குள் வந்து விழுகிற வியர்வையில் நனைந்த ரோமக்கற்றை. கண்ணுக்குள் வியர்வையே விழுந்து... பரவி... கண்ணெல்லாம் திரையாகிவிடுகிறது. கண்ணைக் கட்டிக்கொண்டு வருகிறது. நெஞ்செல்லாம் படபடப்பு. உள்ளங்கையில் மயக்க வியர்வை.

"ஆ...த்தாடி....!"

கடைசி விளிம்பிலும் களைவெட்டி முடித்துப் பொழியேறினாள் பூவாத்தா. நிமிர்ந்தாள். இடுப்பெலும்பு மொறுமொறுத்தது. நிமிர்ந்த பிறகுதான் பார்த்தாள்.

இவள்தான் முதல் ஆள். களைவெட்டி முடித்த முதல் பெண்மணி!

"தமிழ்நாடு ஃபர்ஸ்ட்..."—ஜனத்தின் உற்சாகக் கூச்சல். வாழ்த்துக் குரல்கள்... ஆட்டபாட்டம். மைக்கில் அறிவிக்கிற ஒரு குரல். கோவாலு நாயக்கர் முகமெல்லாம் பூ மலர்ச்சி. தமிழச்சி ஜெயித்த மகிழ்ச்சி.

அடுத்தடுத்து அறிவிப்புகள்... மைக் அலறுகிறது. ஜனங்களின் பேரிரைச்சல்...

"செகண்ட் உ.பி.!"

"தேர்டு அரியானா..."

"ஃபோர்த் கர்நாடகா..."

வரிசையாக அறிவிப்புகள், மைக் சத்தம், சத்தங்கள்...

கோவாலு கையை நீட்டுகிறார்.

அங்கே உரல்கள். அதில், அரைப்படி ஒட்டுக்கம்பு... பதினாறு உலக்கைகள்...

"கம்பைக் குத்தி மாவாக்குங்க... க்விக்!" என்று கைஜாடையும் குரலுமாக அவர்.

'**எ**ங்கடா வுழுந்து சாவோம்' என்று ஏங்குகிற உடம்பு. உட்காரச் சொல்லிக் கெஞ்சுகிற மூட்டுகள். 'சித்தே நீட்டி நிமிர்ந்து படு' என்று மன்றாடுகிற எலும்புகள். பூவாத்தாவுக்குள் உயிர் கழன்ற அயற்சி.

ஆயினும்—பூவாத்தாவுக்குள் மகள், சுடிதார், பிரிந்த கூரை, டாலர் செயின், மூணு சக்கர சைக்கிள், அதன் ஈர்ப்பு, அது தருகிற உத்வேகம்... உயிர்ப் பலம்... ஈர பலம்.

உரலை நோக்கி முதலாளாகப் பாய்ந்தாள். உலக்கையைப் பிடித்தாள். இடதுகால் முன்னும் வலதுகால் பின்னுமாக நின்று, உலக்கையை ஓங்கி ஓங்கிக் குத்தினாள். குலுங்கிக் குலுங்கிக் குதித்த கம்புமணிகள், சில்லுசில்லாக உடைந்து நொறுங்கின.

உள்ளங்கை வலித்துக்கொண்டு போகிற மாதிரி யோர் பிரமை. வியர்வைத் திரையில் மங்குகிற பார்வை.

சலங்கையாக வியர்வைத் துளிகள், உரலுக்குள் சிதறித் தெறித்தன.

மாவாக்கிவிட்டாள். அள்ளிக் குத்துப் பெட்டியில் போட்டாள். கடைசிக் கைமாவையும் வழித்து அள்ளிப் போட்டாள்.

மயக்கமாக வந்தது. கண்ணுக்குள் இருள். காலடித் தரை நழுவுகிற பகீரிடல். உலக்கையைத் தரையில் ஊன்றி, அதன் பலத்தில் குத்துரலில் உட்கார்ந்து விட்டாள்.

தடுமாறுகிறது... தட்டாமாலை சுற்றுகிற கிறுகிறுப்பு...

“ஃபர்ஸ்ட் தமிழ்நாடு...” என்ற மைக்கின் அலறலைக் கேட்கிற திராணி, அவள் செவிக்கு இல்லை. ஜனங் களின் கும்மாளம், கூத்தாட்டம் எதுவும் அவளுக்குத் தெரியவில்லை.

**“எ**க்கா...”

சிரமப்பட்டுக் கண்ணை விழித்தாள். பரட்டைத் தலைச் சிறுமி. கிழிந்த கவுன். அடிவாங்கி அழுது விசுங்குகிற சிறு பூ. அரும்பு.

“என்னம்மா...?”

பூவாத்தா கேட்டது, பூவாத்தாளுக்கே கேட்க வில்லை. தொண்டைக்குள் ஜீவனாக ஒலித்தது.

“எக்கா... இந்த ஊசியிலே இந்த நூலைக் கோத்துக் குடுங்கக்கா...”

இவளுக்குள் சுள்ளென்று வந்தது. உடம்பு வலிக்கும், உயிர் போகிற களைப்புக்கும் கிறுகிறுப்புக்கும் அந்தச் சிறுமியின் கேள்வி, தாங்கவில்லை... தகிக்கிற மனசு.

"சனியனே, போ அங்கிட்டு. நானே சாகமாட்டாம கெடக்கேன்..." என்று சீறத் துடித்தாள். நாக்குவரை வந்துவிட்ட உணர்ச்சி வெக்கை.

சிறுமியின் கண்ணீர்க் கோலம். தன் மகளைப் போலவே தோன்றியது. சுடிதார் கேட்டு அடிவாங்கி அழுத தன் ரத்தத்தின் அதே சாயல், அதே அச்சு, அதே... அதே...

உள்ளுக்குள் ஒரு பிரவாகப் பீறிடல், கனிவு, குழைவு...

"கொண்டாம்மா..."

ஊசியை வாங்கினாள். நூலின் நுனியை நாக்கில் நனைத்து, விரலால் திருகி, விறைப்பாக்கி... துவார நுட்பத்தில் நுழைக்கிற அவளது யத்தனிப்பு...

கைநடுக்கம். குழந்தை மனதின் தெளிவு, நடுங்குகிற விரல்களை நிலைப்படுத்தியது. நிதானிக்க வைத்தது. ஜெயிக்க வைத்தது.

அவள் அந்தப் பக்கம் பார்க்கவில்லை. பார்த்திருந் தால்... மற்ற பெண்மணிகளும் இதேபோல ஒவ்வொரு சிறுமியிடம் சிக்கி நைந்து கொண்டிருப்பதைக் கவனித்திருக்கலாம்.

"இறுதியான வெற்றி... தமிழ்நாடு. பூவாத்தா..."

மைக்கின் அறிவிப்பு, அவளுக்குள் சுற்றுகிற பம்பர இரைச்சலாக—சங்கீத இனிமையாக—இறங்கியது.

"இந்தியப் பேரழகியாக நம்மூரு பூவாத்தா ஜெயிச் சிருக்கா. உலக அழகிப் போட்டியிலும் ·பூவாத்தாதான்

ஜெயிப்பாள். இவளைப் பீட்டடிக்க ஒலகத்துல ஒருத்தியும் கிடையாதுடா...”

கோவாலு நாயக்கர் சிறுபிள்ளைக்குரிய குதூகலக் கும்மாளக் குரலில் கூப்பாடு போட்டார். அவருக்குள் தேசபக்த ஆதாளி. மகிழ்ச்சி. பத்து ஊரு ஜனமும் கூத்தாடி ஆரவாரித்தது. விடியோக்காரர்கள் வந்து மொய்த்தனர்.

கிராமத்தாட்கள் பூவாத்தாவைத் தூக்கிக் கொண் டாட... வாழ்த்தொலிகள் கரிசல் காட்டைக் குலுக்கியது. நாளைய உலகையும்தான்!

—ஆனந்தவிகடன் 20-1-2002

ரூ. 3000 பரிசு பெற்ற
பவள விழா முத்திரைக் குட்டிச் சிறுகதை

# சொந்த முகம்

நிற்கிற ஏகப்பட்ட வண்டிகள்... வாகனங்கள்... அதற்குள் தனது டி.வி.எஸ். 50—ஐ புகுத்தி நிறுத்திவிட்டு, கல்யாண வீட்டைப் பார்த்தான். தடபுடல்... பக்கா அலங்காரம். பந்தல் வாசலிலேயே வரவேற்கிற வீடியோ சந்தன வெளிச்சம். சந்தானம் பரபரப்பானான்.

தனது டி.வி.எஸ். 50—லேயே கண்ணாடியில் முகம் பார்த்தான். நெற்றியில் விழுந்திருந்த எண்ணெயை அழுந்தத் துடைத்தான். காற்றுக்குச் சிலுப்பிய தலைமுடியைச் சீப்பினால் படியவைத்தான். ம்... எல்லாம் கச்சிதம்! அடர் சிமெண்ட் கலர் ஷர்ட். எடுப்பான கலர். முகத்தில் விதவிதச் சிரிப்புகளைப் பூசணும்.

திருப்தியுடன் நுழைந்தான். விடியோவின் சந்தன வெளிச்சத்துக்கு நின்று, சிரித்து, தெரியாத யாரையோ பார்த்துக் கையசைத்து, அதற்குத் தனிச் சிரிப்பு காட்டி, ‘ஹாய்...’ சொல்லி பன்னீர் தெளித்த பெண்ணிடம் அரைமுகமும் வீடியோவுக்குப் பாதி முகமுமாகக் காட்டி, அதற்கொரு மென்னகை. அவனுக்குள் படபடப்பு, பரவசத் திளைப்பு. ‘வீடியோவில் நல்லா

விழுவோமா? எடிட் பண்ணிப் பார்த்தால் அழகாகத் தெரியணுமே...'

கல்யாணம் முடிந்த பிறகு, டெக்கில் போட்டுப் பார்ப்பார்கள் கல்யாண வீட்டார்கள். 'யார் இது...?' என்று கவனிக்க வைக்க வேண்டும். 'யார் இந்தப் பையன்...? நல்லா லட்சணமா இருக்கானே!' என்று சொல்ல வேண்டும். மனசுக்குள் நினைக்கவாவது செய்ய வேண்டும்.

வீடியோ வெளிச்ச பிரக்ஞையோடு கற்கண்டை எடுக்கிற நாசுக்கு, ரோஜாவை நுனிவிரலால் எடுக்கிற ஸ்டைல்...

நிஜமாக அறிந்தவர்களிடம் சிரித்தான். வீடியோ வெளிச்சம் பாய்கிற இடங்களிலெல்லாம் அறியாதவர்களிடமும் சிரித்தான். மணமகன் அவ்வளவாகப் பழக்கமில்லை. நெருக்கமான நட்பு இல்லை என்றாலும், மணமகனை அடிக்கடி வீடியோ கவனிப்பதால், இவன் கூடுதல் நட்பாகச் சிரித்தான். உரிமையோடு கேலி பண்ணிச் சிரித்தான். தோளில் செல்லத் தட்டு தட்டிச் சிரித்தான்.

இளம்பெண்கள் அதிகமாக உட்கார்ந்திருந்த பக்கம் போய், இடம் தேடி உட்கார்ந்தான் சந்தானம். அவனுக்குத் தெரியும், இளம்பெண்கள் ஜொலிக்கிற பக்கம்தான் வீடியோ அடிக்கடி திரும்பும்.

நிறையச் சிரித்தான்... விதவிதச் சிரிப்புகள்... இயல்பு நழுவிய சிரிப்பு...—இப்படிச் சந்தன வெளிச்சத்தில் சந்தானம்.

பந்தி முடித்து, வெத்தலை போட்டு, மொய் செய்துவிட்டு டி.வி.எஸ்.50—ஐ ஸ்டார்ட் செய்து கிளம்பினான்.

வயிறு நிறைந்த மாதிரி, மனசு முழுக்கத் ததும்புகிற பரவசம். நோக்குமிடமெல்லாம் நீக்கமறத் தெரிவோம் என்கிற திருப்தி, சந்தோஷம், மனத்துள்ளல்.

அவன் முகமெல்லாம் விறைக்கிற மாதிரியோர் பிரமை. சிரிப்பைக் கழற்றமுடியாத மாதிரி ஒரு பயம். இன்னும் முகம் சிரித்துக்கொண்டே இருக்கிற மாதிரி ஒரு பகீரிடல்.

முகத்தை இயல்பு நிலைக்குக் கொண்டுவர யத்த னித்துப் பார்த்தான். இயலாமல் போகிற மாதிரியோர் அச்சம்.

பொய்ச் சமூகத்தில் உயிர் வாழ்கிற போராட் டத்தில்... பாவனை, பாவலா, பொய்முகம் காட்டிக் காட்டி, சொந்த முகமே தொலைந்து போகிற மாதிரி... தொலைந்ததை உணர்கிற மாதிரி...

இப்போது... சந்தானத்தினுள் ஒரு தவிப்பு.

—ஆனந்தவிகடன் 30-9-2001

# வெண்பூ மனம்

றெக்கையடிப்பின் ‘சட சட… சடப்பு’. தொடர்ந்து சேவலின் கூவல். கூவுகிற சேவலை யாரோ ‘சூ’வென்று விரட்டுகிறார்கள். பயத்தில் வீறிடுகிற சேவலின் ‘கெக்கேர்… கேர்’ என்கிற அலறல். குதித்துக் குதித்து தாவுகிற அலறலில் தெரிகிற நடைச் சலனம்.

வடிவுக்கு முழிப்பு தட்டிவிட்டது. எந்திருக்க மனசில்லை. அயற்சியும், சோர்வும் போட்டு அமுக்கு கிறது. ஓடிஓடிப் பாடுபட்ட அலுப்பு. அடித்துப் போட்ட மாதிரி உறங்கிய களைப்பு. ‘அப்படியே படுத்துக் கிடக் கணும். துவண்டு சரிகிற உடம்பை அதன் போக்கில், உறக்கச் சடவில் முகம் புதைத்து சுகம் காண வைக் கணும்’ என்று ஒரு நினைவு.

சேவலின் ரெண்டாவது கூவல். கோழியின் பீதி யான கதறல். குஞ்சுகளின் ‘க்யா… க்யா… க்ய்யா… பால்கேன்களின் கிலுகிலுப்புச் சத்தத்தோடு போகிற டி.வி.எஸ்.50. ‘தக், தக், தக்…’ நடைச்சத்தம்.

‘பால் வாங்கப் போவணுமே… சொஸைட்டிக்காரன் கணக்கு முடிக்குறதுக்குள்ளே போய் வாங்கணுமே…’

தார்க்குச்சியின் ஊசியாகக் குத்துகிற நினைவு. அவளை வலுவந்தமாய் உசுப்புகிற நினைவு.

நெட்டி முறித்தாள், வடிவு. திரேகத்தை நெளித்து முறுக்கேற்றி விறைப்பின் உச்சத்தில் நரம்புகள் 'விண் ண்'ணென்று விடைக்க அப்படியே தளர விட்டதில்... அவளுக்குள் பரவிய ஒரு சுகம். நனைந்த சணலாகத் துவண்டு கிடப்பதில் ஒரு லயிப்பு. மனசுக்குள் முகம் தெரியாத பலபல யோசிப்புகள்.

...**நா**லைந்து நாட்களுக்கு முன்பு—

கலர்கலராக சேலைகளை 'பளிச், பளிச்'சென்று உடுத்திக்கொண்டு, சீவிச் சிங்காரித்துக்கொண்ட அலங் கரிப்புகளோடு ரெண்டு பெண்கள். உள்ளூர்ப் பெண் கள்தான். உறவுக்காரர்கள்தான்.

வீடுவீடாகப் படியேறி... ஏறி... இறங்கி வந்தார்கள்.

அவர்கள் முகமெல்லாம் சந்தோஷ மனசின் வெளிச்சம். சிரித்த சீதேவியாக முகம். 'ஊர் சொல்லி' வருகின்றனர்.

பக்கத்து வீட்டுக்குள் நுழைகின்றனர்.

"யாரு... வீட்டுக்குள்ளே...? எத்தை... எத்தை..."

"யாரு...? வாங்க... வாங்க..."

"எங்க வீட்லே தங்கச்சிக்கு 'நிச்சயம்' பண்ணப் போறோம்... வந்துருங்க."

"எந்நேரத்துக்கு?"

"சாயங்காலம்."

"அப்படியா...? நல்ல காரியம். காலா காலத்துலே நடக்கட்டும்... நா... வாரேம்மா..."

"வந்துருங்க அத்தை..."

"வராம இருப்பேனா? கட்டாயமா வாரேன்."

வடிவு வாசலில் வந்து நிற்கிறாள். அவர்கள் இந்த வீட்டைக் கடந்து போகிறார்கள். ஆவலும் பரபரப்புமாய் எதிர்பார்த்த மனசு. அழைப்பை எதிர்பார்த்த துடிப்பு. கடந்து போகிறபோது... ஏதோ பறிபோகிற மாதிரியோர் வேதனை. ஏமாற்றம் அடிமனசில் சப்பென்று அறைகிறது. வடிவு காயம்பட்ட குருவியின் ரணத்தோடு அவர்கள் முதுகையே பார்க்கிறாள்.

இவளை அழைக்கவில்லை. சும்மா ஏறிட்டு... வெறுமையான புன்முறுவலை சம்பிரதாயமாக சிந்திவிட்டு நகர்ந்துவிட்ட அவர்கள்.

இவள் தாலியறுத்தவள். கணவனை சாவிடம் ஒப்படைத்தவள். கணவனின் அன்பை—அரவணைப்பை—ஆதரவை—பாதுகாப்பை விதியிடம் பறிகொடுத்தவள். அமங்கலி. நல்லதுகளில் கலந்து கொள்ளும் உரிமையையும் இழந்தவள். மங்களகரமான விசேஷங்களில் மனுசிகளோடு மனுசியாக, சமதையோடு நிற்கும் தகுதியை இழந்தவள்.

அதனால்தான் 'அழைக்காமல்' போகிறார்கள் என்பது ஏற்கனவே தெரிந்த விஷயம்தான். ஆனால், அந்த ஏமாற்றத்தீயை தொடுகிறபோது—நிர்த்தாட்சண்யமான நிராகரிப்புக்கு குரூரத்தை உணரும் தருணத்தில்—

அவளுக்குள் ஒரு கனத்த ஊசியைச் சொருகின மாதிரியிருந்தது. இங்குட்டு குத்தி, அங்குட்டு உருவின

மாதிரியோர் ரணம். அடிமனசின் ஆழ் நுனிவரை முட்டிமோதிப் பரவிய வலி.

அம்மாவின் முகவாட்டத்தைப் பார்த்து... பத்து வயது மகன் பதைத்தான். 'என்னம்மா' என்று கேட்கவும், பதறிப்போய் பம்மிக் கிடந்தான்.

'நம்ம தலையிலே விதி இப்படியா வந்து விடியணும்? அடப்பாவிப் பய தெய்வமே... ஒனக்கும் கண் அவிஞ்சு போச்சா? ஒரு பாவமும் அறியாத இந்தச் சாதிமான் கன்னுக்கா, இந்தக் கதி வரணும்...? அவளுக்குள் அவல நினைவுகள்.

...படுத்திருந்த நிலையிலேயே கழுத்தைத் திருப்பினாள். மகனை இருட்டுக்குள் துழாவித் தேடியலைகிற மனசு. கையை நீட்டி தடவிப் பார்த்தாள். மகன் பாயை விட்டுத் தள்ளிப் புரண்டிருந்தான்.

தெருவில் சத்தம். முற்றம் தெளிக்கிற சத்தம். சாணிப்பாலின் 'சளப், சளப்...' சொஸைட்டிக்குப் பால் பீய்ச்சுப் போகிற எருமைகளின் வாலாட்டும் சத்தம். பிள்ளைகளை அள்ள வரும் தீப்பெட்டியாபீஸ் வேனின் சத்தம்.

வடிவுக்குள்ளிலிருந்து வெளிப்படுகிற சோம்பலான பெருமூச்சு. ஆறிப்போன புண்ணின் வலி ஞாபகம் போல... மனசுக்குள் அந்தச் சோகம்.

கதவைத் தட்டுகிற சத்தம்.

"வடிவு... வடிவு..."

"என்னக்கா...?"

"இன்னும் எந்திக்கலியா?"

"எந்திக்கணும். ப்ள்ச்சூ!"

"என்ன வடிவு, விடியக்காலம் வேலைக்குப் பெறப் பட்டுப் போவணும்லே? நீ வரல்லியா? புஞ்சைக் கார நாயக்கர் நாற வசவு வையப் போறாரு..."

"ஐயய்யோ... அந்த ஆவுகம் (ஞாபகம்) வரல்லியே... இந்தா வந்துட்டேன்க்கா..."

பதறிப் பதைத்து எழுந்தாள் வடிவு. நாயக்கர் புஞ்சையில் பருத்தி விதை ஊன்றணும். காலைக் கரண்டு. ஆறுமணிக்கெல்லாம் மோட்டாரை 'எடுத்து' விட்டு விடுவார்கள். தண்ணி பாய, தண்ணி பாய, பாத்தி பாத்தியாக பருத்தி விதை ஊன்றணும். மதியம் வரைக்குத்தான் கரண்டும், வேலையும்.

விதை ஊன்றுகிற முதல் நாளிலேயே தாமதமாகப் போனால்... அம்புட்டுத்தான். நாயக்கர் ஆகாயத்துக்கும் பூமிக்குமாய் 'தங்கு, புங்'கென்று குதிப்பார்.

"விதை ஊனுற அன்னைக்கே லேட்டா? வெள் ளாமை வெளங்குன மாதிரித்தான்" என்று சீறிச் சினந்து தெறிப்பார்.

நினைத்தாலே நடுக்கமாக வருகிறது, வடிவுக்கு.

அவசர அவசரமாக தலைமுடியை அள்ளிஅள்ளி முடிந்தாள். எழுந்தாள். கதவைத் திறந்தால்... வந்து மோதுகிற இருட்டு. முகம் வெளுத்து வருகிற வைகறை இருட்டு.

பால் வாங்கிட்டு வரணும். காப்பி போடணும். சோற்றுக்கு உலை வைக்கணும். ஒரு குழம்புப் பாடு பாக்கணும். ஓடைக்குப் போய்ட்டு வரணும். அள்ளி வயிற்றில் கொட்டிவிட்டு, அரக்கப் பரக்க ஓடணும்.

இத்தனை 'ணும்'களும், முக்கால் மணி நேரத்திற்குள் முடித்தாகணும்.

சாட்டைச் சுழற்சியாய் அவளை முடுக்குகிற நிர்ப்பந்தம்.

கதவைத் திறந்தாலும் வெளியே தலை காட்டவில்லை. உள்ளேயே முகத்தைக் கழுவினாள். அடுப்பில் தீ மூட்டினாள். காப்பிச்சட்டியை வைத்தாள். தண்ணீரை ஊற்றினாள். வெல்லக் கட்டியையும், ஊத்துளையும் தட்டினாள்.

சோற்றுச் சட்டியில் தண்ணீரை ஊற்றினாள்.

றெக்கையடித்துப் பறக்கிற வேலைகள். வேலைகளில் ஒரு துரிதம். கையின் பரபரப்பில் தெரிகிற மனப்பயம். பயப் படபடப்பு. அவசரம்.

உறங்கும் மகனை உசுப்பினாள். உசுப்புவதில்கூட ஒரு அவசரம். "ஏலேய்... ஐயா... ராசா... எந்திடா... போய்ப் பாலை வாங்கிட்டு வாடா..."

"ஆமா... போ... நா மாட்டேன்..."

"ஐயா இல்லே? ராசா இல்லே? சொஸைட்டியிலே பூட்டிட்டுப் போயிருவாகடா. அதுக்குள்ளே போய் பாலை வாங்கிட்டு வாடா..."

மறுத்தான். அடம்பிடித்துச் சிணுங்கினான். அழுது முணங்கினான். ரொம்ப கிராக்கி பண்ணின பிறகு... அம்மாவின் 'ஐயா, ராசா' கெஞ்சலுக்காக அரைமன சோடு போனான்.

கொதித்துவிட்டது. காப்பிச் சட்டியை இறக்கி வைத்தாள். குழம்புச் சட்டியை அடுப்பில் வைத்தாள்.

காப்பிச்சட்டியிலிருந்து ஆவி வந்தது. அடுப்புத் தீயின் சந்தன வெளிச்சத்தில் நிழலாக நகர்கிற ஆவிக்கோடுகள்.

அடுப்புத்தீக்கு விறகை உள்ளே தள்ளினாள்.

சோறும், குழம்பும் ரெண்டு அடுப்புகளில் வெந்து கொண்டிருந்தது. பயல் வந்தவுடன் பாலை ஊற்றி... டீயைக் குடித்துவிட்டு... ஓடைக்குப் போய்ட்டு வரணும்.

அப்போதுதான், அந்த ஞாபகம், ஒரு தீக்கங்காக நெஞ்சுக்குள் சுட்டது.

எப்படிப் போக? ஓடைக்குப் போகணுனா... கதவைத் திறந்து வெளியே போகணுமே... எப்படிப் போக? எப்படி முகத்தை வெளியே காட்ட? தெருவுலே நடக்கணுமே... எப்படி நடக்க?

மலைப்பாறையாய் மறித்துக்கொண்டு நிற்கிற பிரச்சினை... எட்டு வைத்து நடக்க முடியாமல் காலைக் கவ்வுகிற சிக்கல்.

வெளியே முகம் காட்டினால்...?

எதிர்வீட்டுக்காரன். நேர் எதிர் வீடல்ல. சற்று மேற்கே தள்ளியிருக்கிற எதிர் வீடு. ரொம்பச் சகுனம் பார்க்கிறவன்.

**...ஏ**றக்குறைய... அநேகமாய்... இந்நேரம்தான் கையில் செம்புத் தண்ணீரோடு வாசல்படிக்கு வருவான், முகம் கழுவ. களவாடப் போகிற நாய் மாதிரி... ரெண்டு பக்கமும் கள்ளப்பார்வை பார்ப்பான்...

தப்பித்தவறி இவள் முகம் அவன் கண்ணில் பட்டு விட்டால்... அம்புட்டுத்தான்.

அப்படித்தான்—

அன்றைக்கு ஒருநாள். அவன் முகம் கழுவ வெளியே வந்த நேரத்தில்... இவள் வீட்டு வாசலில் முற்றம் தெளிக்க சாணிச்சட்டியோடு நின்றாள்.

அவன் வந்ததை இவளும் கவனித்தாள். 'சளப், சளப்'பென்று பாதி முற்றம் தெளித்தாகி விட்டாள். சடக்கென்று பாதியில் மறைய முடியாது. முகம் மறைக்க முடியாது. வேறு வழியில்லை.

கையறு நிலையில்... பிடிபட்ட மைனாவின் பதற்றத்தோடு, அவனைப் பார்த்தாள். பதற்றப் படபடப்பு.

அவன் வெறுப்போடு பார்த்தான். கண்ணில் தாட்சண்யமற்ற கோப வெக்கை. முகத்தில் அசூயையின் கோணல் நெளிவுகள். அருவெருப்பின் சிடுசிடுப்பு. அமங்கலத்தைப் பார்த்துவிட்ட ஆத்திரம்.

முகம் கழுவுவதைக்கூட நிறுத்திவிட்டு, இவளைக் கடுப்போடு பார்க்கிற அவன். உதடுகளின் முணு முணுப்பு. அசைவு.

வைகிறான். தன்னைக் கேவலமான வார்த்தைகளில் திட்டுகிறான். மனசின் சாணத்தையள்ளி வீசுகிறான்.

அந்தக் கணத்தில்—

உள்ளுக்குள் அரிவாள் வெட்டு விழுந்த மாதிரி யிருந்தது. நிர்வாணமாக நடுத்தெருவில் நிறுத்தி வைத்து, செருப்பால் அடித்த மாதிரியோர் அவமானத் தகிப்பு. தன் பிறப்பின்மீதே வெறுப்பாக இருந்தது.

'பொட்டச்சியா பெறக்குறதே பாவம். அதுலேயும் தாலியறுத்த விதவையாயிருக்குறது... அதைவிடக் கொடுமை...'

வாயைக் கொப்பளிக்கிற சாக்கில் காறித்துப்புகிற அவனது திமிர். வீட்டுக்குள் திரும்புகிறபோது—

"இன்னிக்குப் பொழுது பூராவும் வெளங்குன மாதிரித்தான் இருக்கும்" என்று ஏளன வார்த்தைகளை அத்துமீறலாக எறிந்துவிட்டுப் போகிற அகம்பாவம்.

வடிவுக்குள் குலை கொதித்தது. நெஞ்செல்லாம் கிடந்து எரிந்தது. 'இப்படியே ஓடிப்பாய்ந்து... சாணிச் சட்டியை அவன் மூஞ்சியில் கவுத்திரலாமா' என்று திமிறிக்கொண்டு எழுந்த ரௌத்ரம்.

அவளை அவளே கட்டுப்படுத்திக் கொண்டாள்.

என்ன சொல்லிச் சண்டை போட? அவன் ஆள் குறிப்பிடாமல்... சாடைப் பேச்சாக... பொத்தாம் பொது வாகப் பேசிவிட்டுப் போகிறான்.

"ஒன்னைப்பத்திச் சொல்லலே" என்று சொல்லி விட்டால்... என்ன செய்ய?"

வேதனையும் கோபக் கொந்தளிப்புமாய் வீட்டுக்குள் போனவள், அப்புறம்... சுடுபால் குடித்த பூனையாகி விட்டாள். அவன் முகரையிலேயே இவள் முழிப்ப தில்லை. காலையில் மட்டுமல்ல... எந்தப் பொழுதிலும் அந்தக் கொள்ளிக்கண்ணில் இவள் படுவதேயில்லை...

...இப்ப என்ன செய்றது? ஓடைக்குப் போய்விட்டு ஓடிவரணுமே. புஞ்சை வேலைக்கு ஓடணுமே. நாயக்கர் வைவாரே... இப்ப என்ன செய்ய?

வடிவுக்குள் ஏக நெருக்கடி. மகன் வந்துவிட்டான், பால் வாங்கிக்கொண்டு. பாலை காப்பியில் ஊற்றினாள். ஆற்றினாள். மகனுக்கு ஒரு கிளாஸ். இவளுக்கு ஒரு கிளாஸ். காப்பித்தண்ணீரைக் குடித்தாள். நெளிந்து நிமிரும் ஆவியை சில கணங்கள் யோசனைத் தவிப் போடு பார்ப்பாள்.

எப்படி வெளியே போக? அந்தக் கொள்ளிக் கண்ணில் விழணுமே... வெறுப்பும் சீறலுமாய் அந்த நாயின் ஈனக்கோபத்தை 'கண்கொண்டு' பார்க்கணுமே...

நினைக்க நினைக்க இவளுக்குள் பதைப்பு. அவமானமும் ஆத்திரமுமாய் வந்த நினைப்பு. தாலியறுத்த பொட்டச்சின்னா... அம்புட்டு இழிவா? தெருவுலே நடமாடுறதுக்குக்கூட ஞாயமில்லியா? இதென்ன கொடுமையாயிருக்கு?

அவள் மருகித் தவித்தாள். வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடந்து வெம்பினாள். ஒவ்வொரு கணத்தின் நகர்வும் அவளை அச்சுறுத்தியது. 'நாயக்கர் வைவாரே... லேட்டாப் போனால் திட்டுவாரே' என்கிற மன நச்சரிப்பு. இப்ப என்ன செய்ய, ஓடைக்குப் போய்·வர?

ஒவ்வொரு நிமிஷமும் பாறாங்கல்லாய் கனத்தது. யோசித்தாள். பலவாறாக ஓடிப்பிரிந்த நினைவுகள்.

கதவைத் திறந்தாள். லேசாய் இருட்டு நிறம் மாறியிருந்தது. அடர்த்தி குறைந்து தளர்ந்திருந்தது. மங்கலான வெளிச்சம். விடியல் வெளிச்சம். அரை இருட்டு.

எப்படி வெளியே போவது? போகாமலும் இருக்க முடியாதே...

திகைத்தாள். தவிப்பும் படபடப்புமாய், இருப்பு கொள்ளாமல் திணறினாள்.

யோசித்தாள். கதவைத் திறந்து வெளியே நகர்வது—சுவர்க்கூரையின் நிழல் மறைவில் ஒண்டி ஒண்டி வெளியேறுவது. வீட்டின் பின்புறம் சென்று, அடுத்து தெருவில் விழுந்து, போய்விட்டு வருவது...

என்று யோசிக்கும்போது, மனசுக்குள் முள் குத்தின வலி. 'களவாணியைப்போல பயந்து சாக வேண்டியிருக்கே... ஒளிந்து மறைந்து ஓடித் தவிக்க வேண்டியிருக்கே... இதுவும் தலையெழுத்தா...?'

என்று உள்ளுக்குள் குத்திக் கிழிக்கிற முள் யோசனைகள். அவமான முட்கள்.

வேறு வழியில்லை.

அப்படியே போனாள். தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவதைப் போல... ஒரு தெருவைச் சுற்றி ஓடைக்குப் போய்விட்டு வந்தாள்.

வரும்போது... நன்றாக விடிந்துவிட்டது. பால் நிற வெளிச்சம். இனிப் பயமில்லை. பயப்படத் தேவையில்லை. அவன் வீட்டு முற்றத்தின் வழியாகவே தைர்யமாகப் போனாள், வடிவு.

போகிறபோது—அந்த வீட்டுக்குள் கள்ளத்தனமாய் பார்வையை வீசினாள். 'அந்த நாய் மூஞ்சி இருக்குதா?'

ஏதோ வேலையாக வாசல்படியை நோக்கி; வீட்டுக்குள்ளிருந்து வந்தாள், அவனது மனைவி.

"என்னம்மா... ஓ மாப்புள்ளே இருக்கா... வீட்லே?"

"என்னக்கா?"

"இல்லே... சும்மாதான் கேட்டேன்."

*"அவரு நேத்தே ஊருக்குப் போய்ட்டாரு. வர்றதுக்கு ரெண்டு நாளாகும்."*

*"அப்படியா...?"*

*வடிவுக்குள் அறுத்துக்கொண்டு உள் பாய்ந்த ஒரு வெறுமை. சூன்யத் தகிப்பு. கத்திச் சொருகலான ஒரு பகீர்.*

*இந்நேர வரைக்கும் பயந்து தவிச்சோமே... மருகி மருகிப் புலம்பினோமே...' எப்படிப் போக, என்ன செய்ய' என்று புரியாமல் திகைச்சோமே...*

*எல்லாமே... ஊர்லே இல்லாத இந்த ஆளுக்குத் தானா? தேவையில்லாத பயம்தானா? அமங்கலிக்கு அம்புட்டு அவலமா?*

*அடக்கொடுமையே... இதை நினைத்து சிரிக்கவா, அழுவதா?*

*ஒன்றும் புரியவில்லை, வடிவுக்கு.*

*வீட்டுக்குள் நுழைந்தாள்.*

*உள்ளே போனவுடன்—*

*இதயமே வெடித்துப் பிளந்த மாதிரி 'ஓ'வென்று கதறி யழுதாள். "அடக்கூத்துவனே... என்னைப் பொட்டச்சியா பொறக்க வைச்ச பாவம் போதாதுன்னு, தாலியறுத்து மூளி மனுசியாகவும் ஆக்கிட்டீயே... தெருவுலே நடமாடக்கூட கதியத்துப் போன பாவியாக்கிட்டீயே... இதுவும் ஞாயமா?" மாரடித்துக் கொண்டு அவள் அழுத அழுகையில், திகைத்துப்போய் நின்றான் மகன், வாழ்க்கையைப் போல*

—வாசுகி, ஏப்ரல்-1998

# சக ஜீவராசி

விடிந்தும் விடியாத வைகறைப் பொழுது. முதல் பஸ். மூச்சிரைக்க லொடலொடத்தது, கிராமத்தை நோக்கி. காற்றாடுகிற பஸ். நாலைந்து டிக்கெட்டுகள் தான். காலைப்பனி காற்றோடு வந்து சீறுகிறது. 'தடதடா, கடகடா'வெனப் பேயிரைச்சல் போடுகிற தகரக்கூச்சல்.

வடிவுக்கு கூதல் தாங்கவில்லை. கிடுகிடுத்தாள். பாவாடைக்குள் கால்களையும் நெருக்கினாள். ரெண்டு கைகளையும் நெஞ்சில் குறுக்காக வைத்து, மடக்கி உயர்த்தி, கன்னச் சதைகளையும், காது மடல்களையும் உள்ளங்கையால் அழுத்தி மறைத்தாள்.

அதையும் மீறி உள்பாய்ந்து சிலிர்க்க வைக்கிற கூதல். "உஸ்ஸஸ... அஸ்ஸஸ..."வென்று ஊதிக்கொண்டு, கடைவாய்ப்பற்களை அழுந்தக் கடித்து நடுக்கத்தைச் சமாளித்துப் பார்த்தாள்.

அய்யா டிரைவர் சீட்டுக்குப் பக்கத்தில் உட்கார்ந் திருந்தார். என்ஜின் வெக்கையும் ஆவியும் ஒரு சின்னக் கதகதப்பு.

"வடிவு... இங்க வா... பாப்பா..."

"எ... எ... என்னத்துக்கு?"

“கூதல் கொறையா யிருக்கு.”

“இருக்...க்...கட்டும்.”

வடிவுக்கு ஜன்னலோரம், பார்த்து வருவது பிடிக்கிறது. கூதல்கூட நல்ல அனுபவம். ஓடும் பஸ்ஸில் பாயும் காற்றில் கூடும் கூதல். பொழுது புறப்படாத கீழ்வானச் சிவப்பு.

வலையபட்டியைத் தாண்டி, மேலாண்மறை நாட்டை நோக்கி ஓடுகிற பஸ். வேலி மரங்களுக்குள் சாவகாசமாக இரை பொறுக்குகிற நிறைய்ய மயில்கள். தரைப்பனியைத் துடைத்துக்கொண்டு இழுபடுகிற மயில் தோகைகள். அழகழகான தோகைக் கற்றைகள்.

அழகேயில்லாத பெண் மயில்கள். அதன் குட்டை வால்கள். கதுவாலிப்பறவை நிறத்தில் பின்னோடுகிற தவிட்டு நிற மயில் குஞ்சுகள். ஒரு போல் மரத்தின் உச்சியில் ஓர் ஆண்மயில். பனி காய வெயிலுக்காகக் காத்துக்கொண்டே, சிக்கெடுத்துக் கொண்டிருக்கிற ஆண்மயில்.

பக்கத்துச் சீட்டில் ரெண்டு பிள்ளைகள். டவுண் காரப் பிள்ளைகள்.

கிராமமே கண்டறியாததுகள் போலிருக்கிறது. அதிசய அதிசயமாகக் கூச்சல். தம்பலப் பூச்சியை தம்பலப் பூச்சின்னுகூடச் சொல்லத் தெரியவில்லை. இங்கிலீஷிலேயே சொல்லுதுகள். தமிழ்ப் பூச்சிக்கு இங்கிலீஷ் கூப்பாடா? நல்ல கூத்து! இங்கிலீஷ்காரன் பேரக் கழுதைகளோ—?

வடிவு அவர்களையே ‘உர்ர்’ரென்று பார்த்தாள். உள்மனசுக்குள் பொறாமையின் நமைச்சல். அலட்சிய மும், ஏளனமுமாய் உதட்டைச் சுழித்தாள்.

"ஏய்... ப்ரியாக்குட்டி, அங்க பாரு... பீக்காக்" என்று பிள்ளைகளுக்குக் காட்டிய அந்த 'சூட்'காரர். வேலிக் காட்டுக்குள் திரியும் மயில்களைச் சுட்டுகிற அவரது விரல்.

அம்புட்டுத்தான். பிள்ளைகள் இரண்டும் கைதட்டிக் குதூகலித்தன. "அய்ய்க்... பீக்கா...க். அய்க்க், பீக்காக், பீக்காக் குட்டிகள்" என்று ஒரே உற்சாகக் கூப்பாடு. ஆதாளி தாளாமல் கூத்தாடின. கண்ணிலும், கன்னச் சதையிலும் மனமின்னல்கள், சின்னச் சூரியனின் சிதறலாக இனிய வெயில்துளிகள்.

"ஏய்க்... கவிதா, அங்க பாரு பிக் பீக்காக், எவ்ளோ... பெரிய தோகை பாரு."

"நம்ம ஊர் போன ஒடனே... யோகேஷ், சதீஷ் கிட்டேயெல்லாம் சொல்லணும். மயில் பாத்ததைச் சொல்லணும்."

பெருமைப்பூக்கள். பூரிப்பின் பரவசம். முகமெல்லாம் பூவின் பிரகாசம்.

"வாயைப் பொளப்பாக..." அதுக்கும் பெருமை தாங்க முடியவில்லை.

அந்த டவுண்காரப் பிள்ளைகள் மயிலைப் பார்த்த பொது உலகமாக ஆனந்தக் கூப்பாடு போட... அதைத் தகிப்புடன் பார்க்கும் தனி உலகமாக வடிவு.

**போன** வருஷம். ஆடிப் பட்டத்து மழையைக் காணாமல் அல்லாடிக் கிடந்தது ஊர். ஆடிமாதக் காற்று, கூச்சமற்ற குடிகாரனைப் போல தாறுமாறாகச் சலம்பியது. தெருவெல்லாம் வாரி யிறைக்கிற புழுதி. மேல்துண்டோடு திரிகிற கிராமத்தாட்களிடம் துண்டை உருவி, மாமன் மச்சான் முறை கொண்டாடியது. கேலி பண்ணி கூத்து கட்டியது.

"மழைகிழையைக் காணலியே... 'பாழ், பாழ்'னு காத்தடிக்குது. கூடுற மேகத்தையெல்லாம் தூசிக் காடாக்கி துடைச்சிருது, காத்து."

"காத்து வாய் பொத்துனாத்தானே, மழைக்கண்ணு தொறக்கும்?"

மழைத்தண்ணியில்லாம... கடலை எப்படி வெதைக்க?"

"கடலையைக் காயப் போட்டு, ஒடைச்சு, வெதைப் பண்டமாக்கி வைக்க வேண்டியதுதான். ஏதாச்சும் ஒரு நொண்டி மேகம் தப்பித் தவறி வந்து ஒழுகிட்டுப் போகாதா? அந்த ஈரப்பதத்துல வெதைச்சிர வேண்டி யதுதான்."

"ஆமாமா... ஆடியிலே வெதைப் பட்டம் கெடைச் சாத்தானே... தைமாசம் தலைமகளுக்கு பச்சைக்கடலை குடுத்துவுடலாம்?"

ஊர்ஜனத்தின் பேச்சு, ஏக்கமும் கேலியுமாக தெருக்களின் பெருமூச்சாக உலவுகிறது. வடிவின் அய்யா பரமசிவம், மேலக்களத்தை விளக்குமாறால் கூட்டிப் பெருக்கினார். ரெண்டு குடம் தண்ணீர் சுமந்து பரவலாகத் தெளித்தார். நிலம் கருக்கும் நீர்ப்பரவல். தூசி, புழுதி, ஈரத்துக்குப் பயந்து மடங்கியது.

உலர்ந்த பிறகு... விதைக் கடலை முக்கால் சாக்கு இருந்தது. முதுகில் தூக்கிப் போட்டு, குனிந்த நிலையில் சுமந்து வந்து, களத்தில் தட்டிப் பரத்தினார்.

வெள்ளிச் சலங்கைகளாக வேர்க்கடலைகள். போன வருஷத்துக் கடலை. பரத்தப்பட்ட கடலையில் பாதம் கிழித்து, உழவு போட்டார்.

*"வடிவு, இங்க வா."*

*"என்னய்யா?"*

*கடலையைக் கொத்துறதுக்கு காக்கா வரும். வுடக் கூடாது. ஒத்தைக் கடலையைக்கூட கொத்தவுடக் கூடாது."*

*"ம்... ஆட்டும்ய்யா"*

*"வடிவு, ஒத்தைக்கடலை கொத்துக்கடலையா வெளையும். வெதை முதல். எதைக் குடுத்தாலும்... சம்சாரி வெதை முதலைப் பறிகுடுத்துரக் கூடாது...ம்? என்ன?"*

*"சரிய்யா."*

*அரை மனசாக தலையாட்டிய வடிவு, முகம் சுண்டியது. குறாவியது. பயமும், தயக்கமுமாய் ஏறிட்ட இமைகள் படபடத்தன.*

*மகளைப் பரிவோடு பார்த்த பரமசிவம்,*

*"என்னம்மா, வெளையாடப் போவணுமா?"*

*"இல்லேய்யா."*

*"ம். பெறகு?"*

*"படிக்கணும். டெஸ்ட்டுக்கு. மந்த்லி டெஸ்ட்."*

*"சரி... சித்தே இரு. காக்கா, கீக்கா வராமப் பாத்துக்க. இந்தா வந்துருதேன்."*

*அய்யா நடையில் ஒரு தீவிரம். ஒரு முடிவோடு நகர்கிற தெளிவின் வேகம். களத்திலேயே ஒரு மஞ்சணத்தி மரம். வட்டமாக நறுக்கின மாதிரி குறுகலான நிழல். சுற்றிலும் வெயிலின் தகிப்பு. வெக்கை*

சுடுகிற அந்த நிழலில் உட்கார்ந்த வடிவுக்குள், படிக்க வேண்டிய எட்டாப்பு அறிவியல் பாடம். ஆயாசப் பெருமூச்சு.

காய்ந்துகொண்டிருந்த நிலக்கடலையைக் கொத்த காகங்கள் வந்தன. "கா...ர்ர், கா...ர்ர்ர்ர்"ரென்று கள்ளத்தட்டோடு கரைந்தன. கபடமான கரைச்சலோடு மெல்ல மெல்ல வருகிற காகங்கள், கழுத்தைச் சாய்த்துப் பார்க்கின்றன.

"அடச்சனியங்களா...? வடிவு கல்லைப் பொறுக்கிக் கொண்டு ஓடினாள். ஓடி ஓடி கல்லை எறிந்தாள்.

'விர் விர்'ரென்று இரைச்சலிடுகிற கற்கள். சிறகு முளைத்த கோபக்கற்கள். இறக்கை விரித்த இருட்பந்து களாக ஓடிப் பாய்ச்சல் காட்டுகிற காகங்கள். பயந்தது போல பாவனை காட்டி, அங்கும் இங்குமாகப் பறந்து உட்கார்ந்து, வடிவை அலைக்கழிக்கிற காகங்களின் கண்ணாமூச்சி.

ஓடிக்களைத்த கோபத்தில் வடிவு. "நாய்களா... பேய்களா... முண்டங்களா... மூதிகளா... மூதேவிகளா..." திட்டித் தீர்க்கிறாள். வாய்க்கு வந்த வசவுக்கங்குகளை வீசியெறிகிறாள்.

பரமசிவம் ரெண்டு அகத்திக்குச்சியும், கறுப்புத் துணியுமாக வந்தார். கரித்துணி. கன்னங்கரேரென்கிற கரித்துணி.

காயப் போட்டிருக்கிற கடலைக்கு கிழக்கிலும், மேற்கிலும் அகத்திக் குச்சிகளை ஒருச் சாய்வாக ஊன்றினார். எண்ணெய் மினுக்கிய கசங்கலான

கரித்துணியைக் கிழித்து, குச்சியின் நுனிகளில் கட்டித் தொங்கவிட்டார், கொடி மாதிரி.

காரியம் முடிந்த திருப்தியோடு மகளைப் பார்த்தார். "நீ போய்ப் படி... வடிவு."

"கடலைக் காவல்?"

"இனிமே காக்கா, கிட்டத்துலே வராதும்மா"

"ஏம்ய்யா?"

"தொங்குற கரித்துணிகளை காக்கான்னு நெனைக்கும். செத்த காக்கான்னு நெனைச்சுப் பயந்தோடிரும்."

நிஜந்தான். சுற்றிலும் திரிந்த காகங்கள் 'கா...ர்ர்ர்ர், கா...ர்ர்ர்ர்ர்'ரென்று கரைந்தன. பயந்த கரைவு. பதறிப் புலம்புகிற அவலக் கதறல். பீதியும் கிலியும் அப்பிய குரல்கள். காகங்களின் குரல்கள் கரைந்துகொண்டே போய்... மறைந்தேவிட்டன.

ரெண்டு மாசத்துக்கு முன்பு. கழுதைச்சுமையாகக் கனத்த பைக்கட்டு. ஒன்பதாப்பு புத்தகங்கள். நோட்டுகள். முதுகில் போட்டு இழுத்துக்கொண்டு வந்தாள் வடிவு.

அம்மா வீட்டில் இருக்கிறாளோ... புஞ்சைக்குப் போயிருக்காளோ? அய்யா தெருக்காட்டில் இருக்கலாம். வீட்டை நெருங்கினாள். வீட்டு முன்பு ஒரு சிறிய ஓலைச் சாய்ப்பு. அதன் வெறுமை இவளுக்குள் பகீரென்றது.

'கட்டிக் கிடந்த வெள்ளாடு எங்கே? குட்டிகள் எங்கே?'

நடையை எட்டிப் போடடாள். ஓட்டமாய் ஓடி வந்து, ஓலைச்சாய்ப்பில் நின்றாள். ஆடு கட்டிக் கிடந்த நூல்கயிறு அறுபட்டுக் கிடந்தது. அறுபட்ட இடத்தில் இழை பிரிந்து கிடந்தது.

சாணமும் மூத்திரமுமாய் நனைந்து சகதியாகக் கிடந்த இடத்தில் ஆட்டின் குளம்புத்தடங்கள். குட்டிகளின் குளம்புச்சுவடுகள். ஆட்டு ரோமங்கள். ஆடு எங்கே?

வீட்டுக்கதவு இலேசாகத் திறந்திருந்தது. பைக் கட்டை திண்ணையில் போட்டுவிட்டு, பதைப்புடன் உள்ளே ஓடினாள். அவள் பதற்றமும் பதைப்பும் சரியாக இருந்தது.

கழுத்தில் தொங்குகிற அறுந்த கயிற்றோடு வெள்ளாடு அடுப்பங்கரையில் சோற்றுச் சட்டியில் வாய் வைத்துக்கொண்டிருந்தது. பதற்றமும் அவசரமு மாய் நெல்லுச் சோற்றை அள்ளி விழுங்குகிற வேகம். பருக்கைகள் சிதறிக் கிடக்கிற விதம். குட்டிகள் துள்ளித் துள்ளிக் குதிக்கின்றன. தண்ணீர்ச்சாலில்... பாத்திரம் வைக்கிற திண்டில்... தாவித்தாவிக் குதிக்கிற அதுகளின் விளையாட்டு.

வாங்கிவைத்த பால் சிந்தி, குழம்புச்சட்டி கவிழ்ந்து, சாப்பிடுகிற தட்டில்கள், கிளாஸ்கள் எல்லாம் தாறுமாறாகச் சிதறடிக்கப்பட்டு... அடுப்பங்கரையே துவம்சமாகி- பண்ட பாத்திரமெல்லாம் நெளிந்து- நாசக் காடாகி...

“சோத்துலே மண்ணள்ளிப் போட்டுட்டீயே... ஆட்டுச் சனியனே...”

தொங்குகிற கழுத்துக் கயிற்றைப்பற்றி ஆத்திரமாய் இழுத்தாள்.

விருட்டென்று வெளியே வந்தாள். ஒரு கட்டைக் குச்சி எடுத்தாள். வெள்ளாட்டின் நடு முதுகில் ஓங்கி ஒரு போடு. உசரங்களில் தாவிக்கொண்டிருந்த குட்டிகளுக்கு ஒரு போடு.

"ம்ம்மே... க்க்" அதன் வலி. கதறல்.

வெள்ளாட்டுக்கு மேலும் நாலு போடு. குறுக்கெலும்பு ஒடிஞ்சு போகுமோ? போகட்டும். சனியன். மாறி மாறி அடித்தாள். குட்டிகள் வெளியே வர... வெள்ளாடும் வெளியே ஓடியது. அதன் வயிற்றுப் புடைப்பு. வாயோரங்களில் பருக்கைகள். அதன் கொம்புகளில் குப்புறக் கவிழ்ந்து கிடக்கிற கிளாஸ். கொம்பு ஆட ஆட, கிளாஸ் கிணுகிணுத்தது.

"ஆட்டைப் புடிச்சி ஏன் கட்டிப் போடலை? அம்புட்டுக்கூட அறிவில்லியா?" என்று அய்யா கண்டிப் பாரா?

'கயிற்றைப் பிடித்து இழுத்தால்... வரமாட்டேன் என்கிறதே சனியன் பிடித்த ஆடு. நா என்ன?'

தவியாய் தவித்தாள் வடிவு. வீட்டுக்குள்ளிருந்து பதற்றத்துடன் ஓடிவந்தாள். நல்லவேளை!

தலையில் கொழைக்கட்டோடு வந்த பரமசிவம், ஆட்டை கழுத்தோடு சேர்த்துப் பிடித்துக்கொண்டார். அறுந்த கழுத்துக் கயிறைப் பிடித்துக்கொண்டு, ஆட்டின் குறுக்கெலும்பில் கை வைத்து அழுத்தினார். ஆடு அடங்கிப் போனது. அறுந்த கயிற்றில் முடிச்சு போட்டு வைத்தார். வியர்வையும் பதற்றமுமாய் ஓடி வருகிற மகள்.

"என்ன வடிவு?"

"என்னய்யா?"

"ஆடு அத்துக்கிடுச்சா?"

"ஆமய்யா. சோத்தைப் பூரா தின்னுபோட்டுருச்சு. அடுப்பங்கரையையே குப்புறக்கவுத்தி நாசக்காடு பண்ணிருச்சு..."

"அடச்சனியனே...! வெள்ளாடு இல்லே, இது கள்ளாடு."

"இதை அடிச்சு மப்பைக் கழட்டணும்யா."

"பாவம். வாயில்லாச்சீவன். அறிஞ்சா தப்பு பண்ணுது? வுட்டுத் தள்ளு..."

"சோத்துச் சட்டியே நாசமாயிருச்சிய்யா?"

"அம்மா பாத்துக்குவா..."

"அத்துக்கிட்டுப் போன ஆட்டை ஒண்ணும் செய்ய வேண்டாமா?"

"பணம் பெத்த ஆடும்மா. கடாயை வெட்டி கறி திங்கிறோம். ஆடு நம்மளை முட்டவா செய்யுது?"

குழப்பத் திகைப்போடு பார்க்கிற வடிவின் தலையை வருடுகிற அய்யா.

"மேய்ற ஆட்டுக்குட்டிதான் கொழுத்து, கறிக்காகும். கடிக்கிற நாய்தான் காவலுக்காகும். கொத்துற கோழி தான் துட்டாகும். மொய்க்கிற தம்பலப் பூச்சிதான்... வெள்ளாமையிலே பூபலன் புடிக்க ஒத்தாசையாகும்மா..."

பரமசிவத்தின் கனிவும் குழைவுமான குரலில் அவளுக்குள் ஏதோ ஒளி தெரிந்தது...

பஸ்ஸுக்குள்ளிருந்த டவுண்காரப் பிள்ளைகள், தூரத்தில் போன ஆடுகளைப் பார்த்து வியந்து கத்துகின்றனர்.

“ஏய் ப்ரியா, இங்க பாரு வெள்ளாடு.”

“கறுப்பாயிருக்கே? கறுப்பாடா?”

“ம்ஹூம்... கறுப்பாயிருந்தாலும் வெள்ளாடுதான்.”

அவர்களைக் கடுப்புடன் பார்க்கிற வடிவு.

‘ச்சேய்... இதென்ன கூத்து? காணாததைக் கண்டுட்ட அதிசயம் மாதிரி...’

வெறுப்புடன் எரிந்த பார்வையை எறிந்த வடிவு. பரமசிவம் மகளைக் கூப்பிட்டார். “இங்க வா பாப்பா...”

இப்போது எழுந்தாள். ஓடும் பஸ்ஸின் வேகம் அவளைத் தள்ளாட வைத்தது. தடுமாறினாள். கம்பியைப் பிடித்து, மெல்ல மெல்ல... பாலன்ஸ் செய்து... அய்யாவிடம் சென்றாள்.

“இதெல்லாம் என்னய்யா?”

எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டு வந்த பரமசிவம் மென்னகை புரிந்தார்.

“பூ, எல்லாருக்கும் அழகுப்பண்டம். ரசனைப் பண்டம். பாத்துப் பாத்து ரசிப்பாக. பூக்காரிக்கு பூ உயிர்ப்பண்டம். தொழில் பண்டம். அப்படித்தாம்மா இதுவும்.”

*"ம்?"*

*"டவுண்காரப் புள்ளைகளுக்கு மயிலும், காகமும், ஆடும் அழகுப்பண்டம். ரசிப்பாக. நமக்கு, நம்ம பொழைப்போட சேந்த ஜீவனுக. அதுக நம்ம உசுரு. வாழ்க்கைப் பங்காளி."*

*பரமசிவம் சொல்வது வடிவுக்குப் புரிகிற மாதிரியும் தெரிந்தது. புரியாத மாதிரியும் திகைத்தது, வாழ்க்கையைப் போல.*

—குங்குமம் 7-9-2001

ரூ. 3000 பரிசு பெற்ற
பவள விழா முத்திரைக் குட்டிச் சிறுகதை

# மகள் வாசம்

மனைவியின் தலைப்பிரசவம். தப்புதண்டா இல்லாம, நல்லபடியா முடியணுமே என்ற உளைச்சல்... என்ன பிள்ளை பிறக்குமோ என்ற திகில். 'பொம்பளைப் புள்ளை பொறந்தா... நல்லது...' எனக்குள் ஆசை. செத்துப்போன அம்மா நினைப்பு. அம்மாவே புள்ளையா வந்து பொறக்கணும். கவுன் போட்ட அரும்பு. பாவாடைப்பூ. தாவணிச் செடி.

வீட்டுக்குள்ளிலிருந்து வெளிப்பட்ட பெண்ணிட மிருந்து சோகமான ஒரு குரல். "பானைஞ்சு பவுன் நகைக்கு வழியைப் பாருங்க. உங்க தலையெழுத்து பொம்பளைப் புள்ளைதான்..."

எனக்குள் விசிலடிக்கிற மனம். ரெக்கைக் கட்டிப் பறக்கிற குதூகலம். 'அம்மா வந்துட்டா' பாசநெகிழ்வில் பரபரக்கிற நான்.

கடைக்கு ஓடினேன். பெப்பர் மிட்டாய் பாக்கெட் வாங்கி, உடைத்து தெருவில் வந்த ஆள், போன ஆள் எல்லோருக்கும் மிட்டாய் கொடுத்தேன், மகிழ்ச்சிக் கூத்தாட்டமாக.

"என்ன முட்டாய்?"

"எனக்குப் பாப்பா பொறந்துருக்கு..." என் மனசின் இனிப்பு ஊரெல்லாம் பரவியது.

அப்படித்தான் பரமுச் சித்தியிடமும் மிட்டாய் கொடுத்தேன்.

"என்னப்பா முட்டாயி?"

"பாப்பா பொறந்துருக்கு..."

"பொட்டைப் புள்ளையா?" சித்தியின் முகமாற்றம், சிடுசிடுப்பாக நிறமாற்றம்.

"பொட்டைப்புள்ளை பெத்ததுக்காக முட்டாய்? ச்சேய், போ, அங்குட்டு... புத்திகெட்டுத் திரியாதே..."

வாங்கிய மிட்டாயை வலுக்கட்டாயமாக என் கையில் திணித்துவிட்டுப் போன பரமுச் சித்தியையே வருத்தமாகப் பார்த்தேன். என் பால்பாயசத்தில் உப்பு அள்ளிப் போட்ட மாதிரியிருந்தது.

என் வீட்டுக் கிரகப்பிரவேசம். ஊர்ஊராகச் சுற்றி, உறவுகளைத் தேடி, சிரித்த முகம் காட்டி, பத்திரிகை வைத்துக் கொண்டிருந்த களைப்பு, ஆயாசம். ரொம்ப நாளைக்கு முன்பே பிழைப்புத் தேடி திருத்தங்கல் வந்துவிட்ட பரமுச் சித்தி. 'அவர்களிடமும் ஒரு பத்திரிகை வெச்சுட்டா நல்லது...'

சந்துபொந்துகளிலெல்லாம் நுழைந்து துழாவி விசாரித்தேன். பரமுச் சித்தி மகள் இருக்கிற வீடுதான் தெரிந்தது. மகன் வீடு தெரியவில்லை. 'மகனிடம்தானே பரமுச் சித்தி இருப்பார்கள்? ம்... என்ன செய்ய? மகளிடமும் ஒரு பத்திரிகையை வெச்சுட்டுப் போயிருவம்.'

*சிறிய வீடு. நெரிசலான குறுகலான தெரு.*

*"தங்கச்சி... தங்கச்சி...!"*

*"யாருப்பா அது? கண்ணு எழவும் தெரியலே..."*

*தட்டுத்தடுமாறி வருகிற பரமுச் சித்தி. முதுமை நர்த்தனமாடியிருந்தது. நனைந்த காகிதமாக நைந்திருந்தாள்.*

*"என்ன சித்தி, இங்க இருக்கீக? மகன் வீட்லே நீங்க இல்லியா?"*

*"யாரு... தங்கச்சாமியா...? வா, வா. சின்னராசுப்பய தங்கமான பயதான். வந்தவள் ராட்சஸி... கொத்திக் கொதறி வெளியே தள்ளிட்டா என்னை... ஊமையா இருந்துக்கிட்டான், கள்ளப்பய..."*

*"பெறவு?"*

*"பெறகென்ன? பொம்பளைப் புள்ளைதான் ஆதரிக்கா... வாம்மான்னு கூப்பிட்டு தாய்மாதிரி அணைச்சுக்கிட்டா. பொம்பளைப் புள்ளைகதான், பெத்தவுகளுக்கு அம்மா மாதிரி..."*

*அன்று என் கைக்குள் திருப்பித் திணித்த பெப்பர் மிட்டாயின் ஞாபகம்.*

*தலைப்பிள்ளையாக வந்து பிறந்த பாப்பாவை நினைத்து இப்போதும் பால்பாயசம் குடிக்கிறது, என் மனசு.*

**—ஆனந்த விகடன், 10-2-2002**

## ஆசிரியரின் பிற நூல்கள்

| | |
|---|---|
| சிபிகள் | *(சிறுகதைத் தொகுப்பு)* |
| பூக்காத மாலை | ” |
| மானுடப்பிரவாகம் | ” |
| பூச்சுமை | ” |
| கணக்கு | ” |
| விரல் | ” |
| தாய் மதி | ” |
| காகிதம் | ” |
| உயிர் காற்று | ” |
| என் கனா | ” |
| ராசாத்தி | ” |
| மனப்பூ | ” |
| ஒரு மாலை பூத்து வரும் | ” |
| மானாவாரிப் பூ | ” |
| கோடுகள் | *(குறுநாவல் தொகுப்பு)* |
| தழும்பு | ” |
| ஈஸ்வர... | ” |
| பாசத் தீ | ” |
| முற்றுகை | *(நாவல்)* |
| இனி | ” |
| அச்சமே நரகம் | ” |
| ஆகாயச் சிறகுகள் | ” |
| முழு நிலா | ” |
| ஊர் மண் | ” |
| சிறுகதைப் படைப்பின் உள்விவகாரம் | |

கங்கை